GOKULAM

கோகுலம்

ஜூன் '97 ரூ. 5/-



கடலைக் கலக்கிய குட்டி ராணி!

INDIA'S LARGEST SELLING COMICS

DIAMOND COMICS



NEW AMAR CHITRA KATHA

Rana Pratap	25/-
Shivaji	25/-
Drona	25/-
Hanuman	25/-
Vidyasagar	25/-
Tales of Maryada Purushotam Ram	25/-

JOIN THE DIAMOND BOOK CLUB

AND FILL YOUR LIFE WITH FUN, THRILL & LAUGHTER

Just fill in the coupon given below and send it to us along with a Money Order or Postage Stamps worth Rs. 10/-

We shall be offering six books every month. To get a rebate of **Rs. 4/-and Free postage (approx. Rs. 7/-)** you'll have to order six books at a time in a month. In case these books are not of your choice then you are free to select any six books from the list of 'Diamond Comics' titles and we shall send you the same. But to get these benefits you'll have to order six books at a time.

We'll send you a Choice Card every month. If you like the books offered by us in the Choice Card then you need not send us the card back. In case you do not like the books then you send us the names of atleast 7 books of your choice so that we can send you 6 books of your choice available with us at that time.

Under this scheme, we shall be sending you a V.P. Packet by the 20th of every month.

Yes I would like to become a member of 'DIAMOND BOOK CLUB' and take advantage of the benefits. I have read all your rules and shall abide by these I promise to accept the V.P. every month.

NAME ______________________

ADDRESS ______________________

____

POST OFFICE ____________ PIN CODE ________

I am sending Rs. 10/- by M.O./enclosing Postage Stamps worth Rs. 10/-

My Birth date ______________________

Note : We shall not enrol you as a member till we receive the membership fee.

DIAMOND COMICS PVT. LTD. X-30. OKHLA INDUSTRIAL AREA, PHASE-2 NEW DELHI-110020

DISTRIBUTORS ; Madras : Sree Meenakshi News Agency, 64, Gautiya Mutt Road • New Century Book House (P) Ltd. (Branches Madurai & Coimbatore) **Hyderabad** • Shailendra Agencies, Bashir Bagh •Neel Kamal Book Distributors, Sultan Bazar **Bangalore** : Sapna Book Stall, Gandhi Nagar. •A.K. Agencies, Rajaji Nagar •The Nav Karnataka Publications (P) Ltd., Crescent Road **Calicut** : Remami Agencies P.O. Arakinar Calicut •Amity International Book House Arfa Bldg., East Kattaparamba, Calicut





கோகுலம்

ஜூன் 1997 ♦ மலர் : 15 ♦ இதழ் : 5

அருமைச் சிறுவர் சிறுமியரே,

அனைவருக்கும் அன்பு வணக்கம். எந்த ஊரில் எந்த மாதிரி விடுமுறையைக் கழித்துக் கொண்டிருக்கிறீர்கள்? கதை கட்டுரை எழுதியா? மரம் நடும் பணியா? வெயிலில் திரிந்து புது இடங்களைப் பார்த்தா? அதைப் பற்றி ஒரு அஞ்சலட்டையில் எழுதியனுப்பலாமே?

கோகுலத்தில் அதன் வாசகர்களாகிய தம்பி தங்கையரின் படைப்பு அதிகமான அளவுக்கு இடம்பெறுவதில்லை என்று பலர் தொடர்ந்து புகார் செய்து வருகிறார்கள். 'எங்கள் ஊரில் நடந்தது' பகுதியில் கூட எழுதியவர்களேதான் அடிக்கடி எழுதுகிறார்கள் என்று வருத்தப்படுகிறான் திண்டுக்கல் தம்பி ஒருவன். எனவே "எங்கள் ஊரில் நடந்தது" பகுதிக்கு அனுப்புவோர் தவறாமல் தங்கள் வகுப்பு, பள்ளி முகவரி போன்றவற்றை அவசியம் தர வேண்டுகிறோம். நிறுத்திவிட்ட 'பிருந்தாவனம்' பகுதியை மீண்டும் தொடர இருக்கிறோம். இதில் நீங்கள் படித்த, கேட்ட, ரசித்த மினி கதைகள், அதிசயத் துணுக்குச் செய்திகள் இடம்பெறும். தவறாமல் இதற்கான ஆதாரங்களையும், உங்கள் பள்ளி வகுப்பு முகவரியையும் தர வேண்டும். ஏற்கப்படாதவற்றைத் திருப்பியனுப்ப இயலாது. எனவே தபால் தலை வைத்து அனுப்ப வேண்டாம். உங்களுக்கெல்லாம் மகிழ்ச்சிதானே?


தபால்காரர் கொண்டு வரும் கடித மூட்டைகளைப் பார்க்கும் போது பயமாக இருக்கிறது! எல்லாம் உங்கள் அன்புச் சுமைதான்! இதற்காகத்தானே காத்திருக்கிறோம்?

அன்புடன்,

ரேவதி

(கௌரவ ஆசிரியர்)

> உயிர்களிடத்தில் அன்பு
> வேணும் -தெய்வம்
> உண்மையென்று தானறிதல்
> வேணும். - பாரதியார்.



கோகுலம்

ஜூன் 1997

இந்த இதழில்..

ஓர் ஊரில் இரண்டு சகோதரிகள் வசித்து வந்தனர். அவர்களில் உமா பெரியவள். ராணி இளையவள்.

அவர்கள் பெற்றோர்கள் ஏதாவது சாப்பிட ஏதாவது பொருளை வாங்கிக் கொண்டு வந்தால் போதும். உடனே உமா முந்திக் கொண்டு அதில் நிறைய எடுத்துக் கொள்வாள். கேட்டால் "நான்தான் பெரியவ; எனக்குத்தான் நிறையக் கொடுக்க வேண்டும்" என்பாள்.

தங்கை ராணிக்குக் கிடைத்ததா, இல்லையா என்று எண்ணிப் பார்க்கவே மாட்டாள். அவள் பெற்றோர் எவ்வளவு சொல்லியும் உமா கேட்கவில்லை.




ராணிக்கு இது மிகுந்த மன வருத்தத்தைத் தந்தது.

ஒருநாள் அம்மாவுக்குக் காய்ச்சல் வந்துவிட, அப்பாவோ வெளியூர் போய்விட, உமாவுக்கும், ராணிக்கும் வேலைகள் மிகுதியாயின. தண்ணீர் கொண்டு வர தெருக்கோடியில் உள்ள கிணற்றுக்குச் செல்ல வேண்டும். உமா, ராணி இருவரும் குடங்களை எடுத்துக் கொண்டு கிளம்பினர்.

முதலில் உமா தண்ணீரை இறைத்துக் குடங்களில் ஊற்றினாள். வீட்டிற்குக் கொண்டு போனாள். உமா திரும்பி வரும்பொழுது ராணி தண்ணீர் இறைக்காமல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள்.

உமா கோபத்துடன், "நான் குடத்தை எடுத்துக் கொண்டு போகும்போது நீ இறைத்து வெச்சா என்னடி? நான் வந்ததும் கொண்டு போவேன் இல்லையா?"

நான்தான் பெரியவ!




என்றாள்.

ராணி புன்சிரிப்புடன், "அக்கா, அப்பா எது கொடுத்தாலும் நான்தான் பெரியவ, எனக்குத்தான் நிறைய வேணும்னு சொல்லுவியே? அது போல அம்மா இன்னிக்கு வேலை கொடுத்திருக்காங்க. நீதான் பெரியவ. நீதான் நிறைய செய்யணும்" என்றாள்.


உமா தலைகவிழ்ந்தாள். "ராணி என்னை மன்னிச்சுடு. நான் இனிமேல் அப்படிச் செய்ய மாட்டேன்" என்றாள்.


அன்று இரவு அப்பா ஸ்வீட் வாங்கிக் கொண்டு வந்தார். உமா, ராணிக்குப் பெரிய பாதியைக் கொடுத்துவிட்டு, மீதி இருந்த சின்னப் பாதியைத் தான் எடுத்துக் கொண்டாள். பெற்றோருக்கு வியப்பாய் இருந்தது. ஆனால் உங்களுக்கு இருக்காதே!


- எஸ். ஏ. மணிவண்ணன்





என்ன பழமொழிகள்


















இங்கே மொத்தம் 19 படங்கள் இருக்கின்றன. இவை ஒவ்வொன்றும் ஏதோ ஒன்றைத் தெரிவிக்கின்றன. இவைகளை மொத்தமாகச் சேர்த்து சரி செய்தால் உங்களுக்கு மிகவும் பழக்கமான இரண்டு பழமொழிகள் கிடைக்கும். இவற்றை எழுதி, உங்கள் முகவரியையும் எழுதி, முகவரிக் கூப்பனையும் ஒட்டி அனுப்புங்கள். அயல்நாட்டு வாசகர்கள் இந்தியத் தொடர்பு முகவரியைத் தரவேண்டும். ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் சரியான விடையை எழுதினால் பரிசு பகிர்ந்தளிக்கப்படும். முடிவு தேதி 30.6.97 ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

போட்டி!

ஆசிரியர்,
கோகுலம்,
47, ஜவாஹர்லால்
நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 097.



சைக்கிள்

சைக்கிள் நல்ல சைக்கிள்!
இரண்டு சக்கர சைக்கிள்!


கரடு முரடு பாதையை
கடக்க உதவும் சைக்கிள்!

காய்கறி மளிகை வாங்கிவர
கடைக்குச் செல்ல கைகொடுக்கும்!

இரவில் பகலில் எந்நேரம்
இனிய தோழன் என் சைக்கிள்.

- எஸ். வினோத்பாபு, கபிஸ்தலம்.





மெச்சும் பொருள்!

மனிதர் வெறுக்கும் சேற்றிலே
மலர்ந்து நிற்குது தாமரை
கன்னங் கரிய குயிலிடம்
காது குளிரும் கீதங்கள்
அழுக்கு அடைந்த சிப்பியில்
அழகு முத்து விளையுது!
மோச மான இடத்திலும்
மெச்சும் நல்ல பொருளுண்டு!

- எஸ். நசுருதீன், காரைக்கால்.



நாற்காலி

நாங்கள் விரும்பும் நாற்காலி
நான்கு கால் நாற்காலி
எங்கும் காணும் நாற்காலி
எல்லோரும் அமரும் நாற்காலி
மரத்தால் செய்த நாற்காலி
மதிப்பு மிக்க நாற்காலி
அறத்தைக் கொண்டே தச்சர்கள்
அழகாய் செய்த நாற்காலி
அழகிய தேக்கு நாற்காலி
அனைவரும் விரும்பும் நாற்காலி
வழவழப்பான நாற்காலி
வந்து அமரலாம் வாருங்கள்!

- தின. அன்புதேவன்,
காட்டு மன்னார் கோவில்.



குயில்

குயிலே குயிலே கூவிடுவாய்
குரலை உயர்த்திக் கூவிடுவாய்
பயிலல் நன்றாம் என்றே நீ
பாட்டாய் எடுத்துப் பாடிடுவாய்
செயலை செய்து முடியென்று
செப்பிடு நீயும் உலகிற்கே!

- வரகால்பட்டு இரா. பாலு



மரம் வளர்ப்போம்

மரத்தை வளர்க்க வேணுங்க - இதை
மனதில் கொள்ள வேணுங்க

மண்ணரிப்பைத் தடுத்திடுங்க - வான்
மழையைத் தருவது மரமுங்க

வெப்பம் குறைப்பதும் மரமுங்க - மண்
வளத்தைச் சேர்ப்பதும் மரமுங்க

விறகைத் தருவதும் மரமுங்க - பிராண
வாயு ஈவதும் மரமுங்க

பறவைகள் இருப்பிடம் மரமுங்க - இனிய
பழங்களைத் தருவதும் மரமுங்க

நிழலைத் தருவதும் மரமுங்க - இந்த
நிலத்தைக் குளிர்(வி)ப்பதும் மரமுங்க

எனவே மரத்தை வளக்கணுங்க - இதை
இனிமேல் நன்கு உணருங்க

உணர்ந்தால் மட்டும் போதாதுங்க - அதை
உடனே செயலில் காட்டணுங்க.

- ப. சரவணமுத்து,
பொன்னமராவதி.



உதவி செய்!

பசியினாலே திண்டாடும்
பாமரர்க்கு உதவி செய்!

தள்ளாடி நடந்திடும்
தாத்தாவுக்கு உதவி செய்!

அடுப்பங்கரையில் அவதியுறும்
அம்மாவுக்கு உதவி செய்

அனைவர்க்கு உதவினால்
அகிலம் போற்ற வாழலாம்!

-பா. ஜெயக்குமார்,
வந்தவாசி.



கன்றுக்குட்டி

கன்றுக் குட்டி கன்றுக்குட்டி
கிட்ட கொஞ்சம் வாரியா?
கடலை மிட்டாய் தந்திடுவேன்
கடிச்சு கொஞ்சம் தாரியா!

எங்ககூட விளையாட
தம்பி தங்கை இல்லையே
கன்றுக் குட்டி நீயிருக்க
கவலை எனக்கு இல்லையே!

புள்ளி மானைப் போலவே
துள்ளித்துள்ளி ஓடுறாய்
நல்ல பாலை நான்குடிக்க
தினமும் உதவி செய்கிறாய்!

- எஸ். விஜயலட்சுமி
புதுச்சேரி - 11.




சிட்டு!

தண்ணீர் துளிகள் பட்டு
தாவிச் சிலிர்த்தது சிட்டு
கால்கள் தாளம் போட்டு
கணக்காய் குதித்தது சிட்டு!

வியந்தேன் மனதை விட்டு
விரைந்தேன் பார்க்கத் தொட்டு!
பயந்து நடுங்கிய சிட்டு
பறந்தது சன்னலை விட்டு!

- அ. அர்ச்சனா,
புதுவை.



காற்று


கரத்தில் பிடிபடாத காற்று!
கண்ணுக்கு தெரியாத காற்று!
மரத்தை தாலாட்டும் காற்று!
மனிதனை வாழ்விக்கும் காற்று!

எங்கும் இருக்கும் காற்று!
எதிலும் நுழையும் காற்று!
தங்கு தடையே இன்றி
தரணி சுற்றும் காற்று!

பொங்கி எழுந்து விட்டால்
புயலாக வீசிடும் காற்று!
தங்கி நின்று விட்டால்
தென்றலாய் பேசிடும் காற்று!

ஊரினில் உலாவரும் காற்று!
உரசியே சென்றிடும் காற்று!
பாரினைப் பவனியே வந்து
பயன்பல தந்திடும் காற்று!

- பொன். குமார்,
சேலம் - 6.



காடைக்குக் 'க்யூ' தெரியுமா?

ரேவதி

பவானியைச் சுற்றி அரிசியும், உடைத்த உளுத்தம் பருப்பும், கடுகும் பொட்டலம் பொட்டலமாக இருந்தன.

"என்னம்மா பண்றே?" என்று கேட்டுக் கொண்டே வந்தார் ஸ்க்வாட் லீடர் குமரன்.

"நேற்று சாயங்காலம் சாப்பாட்டை வாயிலேயே வைக்க முடியலையே சார். எல்லாத்துலேயேயும் கல்லு பல்லைக் கடிச்சுது. அதான்,கல் இருக்கக்கூடும்னு நினைக்கிறதையெல்லாம் எடுத்து கல்லைப் பொறுக்கிட்டிருக்கேன். இத பாருங்க சார்... உளுத்தம் பருப்புலேயும் கடுகுலேயும் மட்டும் இத்தனை கல்...!"

பவானி ஒரு சின்ன கொட்டாங்குச்சியை எடுத்துக்காட்டினாள். அதில் பாதிக்கு வெண் பொடிக் கற்கள் இருந்தன!

"என்ன அநியாயம்!" என்று திகைப்புடன் அதை வாங்கிப் பார்த்தார் குமரன். "இதை அப்படியே வைச்சிருந்து மளிகைக் கடைக்காரர் கிட்டே காட்டணும்!"

"சார், காலையில் மலை ஏற்றப் பயிற்சி உண்டா?"

"கண்டிப்பா உண்டும்மா. பதினைந்து பேர் உன்னையும் சேர்த்து. மழை இல்லாமல் இருக்கணும்."

"இன்னும் அரை மணியில் பொங்கல் தயாராயிடும். மணியடிச்சிடலாம்."

பொங்கலையும் வைத்துக் கொண்டு இரவுச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு எல்லோரும் 'கேம்ப் ஃபையரு'க்குத் தயாரான போது, பவானி பாத்திரங்களை சுத்தப்படுத்திக் கொண்டிருந்தாள். அவளுக்கு உதவியாக தேவகி தண்ணீர் பிடித்துக் கொண்டு வந்தாள்.

திடீரென்று தேவகி, "அக்கா... கூடாரத்துக்குப் பின்னால என்னமோ சத்தம் கேட்குது இல்லே?" என்று பயந்த குரலில் கேட்டாள்.



பவானி, தேய்ப்பதை நிறுத்திவிட்டுக் கவனித்தாள். "டொக்...! டொக்...! டொக்...!"

துணிவுக்குப் புகழ் பெற்ற பவானி, எட்டு செல் டார்ச் விளக்கை எடுத்துக் கொண்டு, சத்தம் வந்த கூடாரத்தின் பின்பக்கம் சென்று அடித்துப் பார்த்தாள்.

அவள் கல் பொறுக்கி வைத்திருந்த கொட்டாங்குச்சியை இரண்டு பறவைகள் கொத்திக் கொண்டிருந்தன.

ஒளி வெள்ளத்தைக் கண்டு அரண்ட இரண்டு பறவைகளும் "வி"...! 'வி...!' "வி...!" என்று குரல் கொடுத்து தரையோடு ஓடின. அடுத்த வினாடி "வி...! வி...! வி...!" என்ற பலத்த குரலில் அக்கம்



பக்கத்துப் புதர்களில் இருந்து வெளிப்பட்ட அதே போன்ற பறவைகள் மின்னல் வேகத்தில் நடந்து ஓடின! எப்படித்தான் அத்தனை பறவைகள் அங்கே வந்து ஒளிந்திருந்தனவோ!

"பாவம், இரை தேடி வந்த பறவைகளை நாம் பயப்படுத்தி ஓட வைத்து விட்டோமே!" என்ற குற்ற உணர்வுடன் மனம் கலங்கினாள் பவானி.

"அக்கா, அவை என்ன பறவைகள்?" என்று கேட்டாள் தேவகி.

"எனக்கும் தெரியலே தேவகி. சாத்தனார் அணியில இருக்கும் ராஜமன்னார் பறவை அன்பன். அவனிடம் கேட்டால் தெரியும்,'' என்று அவளையும் அழைத்துக் கொண்டு விரைந்தாள் பவானி.

விஷயத்தைக் கேட்டதும் ராஜமன்னார் சிரித்தான்.

''நீங்க ரெண்டு பேரும் பார்த்த பறவைகள் பார்க்க எப்படி இருந்தன என்பது தெரியாமல் அவை என்ன பறவை என்பதை என்னால் எப்படிச் சொல்ல முடியும்?"

"ஆமாம் ஆமாம் ராஜமன்னார்'' என்று சிரித்த பவானி சிறிது யோசித்தாள்.

"அவை என்ன அளவுக்கு இருந்தன? நாட்டுப் பெட்டைக் கோழி அளவுக்கு இருக்குமா? இல்லே, காகத்தின் அளவுக்கு இருக்குமா?" என்று கேட்டான் ராஜமன்னார்.

"அப்படியெல்லாம் இல்லே. சிட்டுக் குருவி மாதிரி ரெண்டு பங்கு. சுமார் அரையடி நீளம் இருக்கும்."

"அலகு கருப்பா இருந்தது. கால்கள் மஞ்சள் கலந்த சிவப்பா இருந்தது" என்றாள் தேவகி.

"இப்போ நினைப்பு வருது. அவை டார்ச் வெளிச்சத்தில் கண்கள் கூசப் பார்த்தபோது கண் படலம் பழுப்பா, காப்பிப் பொடி நிறத்துல இருந்தது!"

"உடம்பு என்ன நிறத்துல இருந்தது? அதுதானே முக்கியம்?"

"உடம்போட மேல் பக்கம்... அதாவது முதுகுப் பக்கம் மஞ்சளும் சிவப்பும் கலந்த பழுப்பு நிறமா இருந்தது. நான் பொறுக்கி வைத்திருந்த பொடிக் கற்களைக் கொத்தி விழுங்கின!

"உடம்புல கோடுகள் இருந்ததா?"

''இருந்தது இருந்தது. கருப்பும், மங்கலான மஞ்சள் கறைகளும் கோடுகளும் இருந்தன!"

"உடம்பின் கீழ்ப்பக்கம் எப்படி இருந்தது?"


"வெள்ளையாக, நடு நடுவில கருப்புப் பட்டை."

"மோவாயும் தொண்டைப் பகுதியும் நல்லா சாயம்போன சிவப்பும் பழுப்பும் கலந்ததா இருந்தது."

"பரவாயில்லையே! அரை நிமிடம்தான் பார்த்திருக்கீங்க. அதுக்குள்ள இத்தனையை கவனிச்சிருக்கீங்களே!" என்று பாராட்டினான் ராஜமன்னார்.

"ராஜமன்னார் அவர்களே... நாங்கள் தங்கள் பாராட்டைக் கேட்பதற்காக இங்கே வரவில்லை. என்னவோ தங்களை எல்லோரும் ''பறவை விரும்பி''ன்னு சொல்றாங்களே, நாங்கள் பார்த்தது என்ன பறவைன்னு தெரிஞ்சுக்கத்தான் வந்தோம். அதை மட்டும் தாங்கள் இன்னும் சொல்லலே!'' என்று மன்னர் கால நடையில் பேசினாள் பவானி.

''நீங்கள் விவரித்த தோற்றத்தைப் பார்க்கும்போது நீங்கள் பார்த்த பறவை காடைன்னு தோன்றுது. அவைதான் பொடிக்கற்களை விரும்பி உண்ணும். காடையிலே எத்தனையோ வகை. இது புதர்க் காடையா இருக்கணும். அசைவ உணவுப் பிரியர்களைக் கேட்டால் இதன் மாமிசம் எத்தனை



சுவையாக இருக்கும் என்று கூறுவார்கள்,'' என்று கூறிய ராஜமன்னார், ''ஆமாம், இவை இரவிலே புதரை விட்டு வெளியே வராதே! பகலில் வெளிச்சத்தில்தானே இரை தேட வரும்?'' என்று வியந்து கொண்டான்.

"கேம்ப்புக்குப் போட்டிருக்கும் மின் விளக்கு வெளிச்சத்தைப் பார்த்து பகல்னு நினைச்சு வந்துடுத்து போல இருக்கு'' என்று உடனேயே சமாதானம் சொல்லிக் கொண்டான்.

கேம்ப் ஃபைர் வெளிச்சத்தில் பல் சுவை நிகழ்ச்சிகளை நடத்திவிட்டு எல்லோரும் உறங்கப் போனார்கள்.

அடுத்த நாள் எழுந்திருக்கும்போதே நல்ல மழை. விட்டு விட்டுத்தான் பெய்தது என்றாலும் மலை ஏறும் பயிற்சி திட்டத்தை அன்று கைவிடும்படி நேர்ந்தது. காட்டைச் சுற்றிப் பார்க்க எல்லோரும் கிளம்பினர். பவானி, பைனாகுலரை எடுத்துக் கொள்ள மறக்கவில்லை.

கீழே ஒரு பள்ளத்தாக்கு. அதன் நடுவே நீர் நிறைந்த ஒரு குட்டை. அதை நோக்கி வரிசை வரிசையாக ஏதோ எறும்புகள் மாதிரி நகர்ந்து கொண்டிருந்தன! பவானி பைனாகுலரை வைத்துப் பார்த்தாள். முகத்தில் ஒரே வியப்பு! பரபரப்பு!

தேவகியையும் அழைத்து பைனா குலரைத் தந்து பார்க்கச் சொன்னாள்.

"நாம் பார்த்த அதே பறவை இனம்! காடைகள்தான்!" என்று கூறிய தேவகி, "என்ன சினிமா டிக்கெட் வாங்கக் க்யூ வரிசைல நின்னு போற மாதிரி ஒன்றின் பின் ஒன்



அறிவியல் உண்மைகள்



• புதர் காடை, மலைக்காடை என்று பல பெயர்களில் அழைக்கப்படும் "JUNGLE BUSH QUAIL" உலகெங்கும் உள்ள அசைவப் பிரியர்களால் பெரிதும் விரும்பி உண்ணப்படுவதால், தொடர்ந்து வேட்டையாடப்படுகின்றன. குறிப்பாக உயிருடன் பிடித்து வந்து உணவாக்கிக் கொள்ளப்படுகின்றன.

• இதன் விலங்கியல் பெயர் PERDICULA ASCIATICA. இது CALLI FORMES வரிசையில், PHASIANIDAE குடும்பத்தைச் சேர்ந்தது.

• மிகப் பெரிய சிட்டுக் குருவி போல் இதன் தோற்றம் இருக்கும். சர்வசாதாரணமாக எல்லா மரங்களிலும் நீர்நிலை அருகிலும் இவைகளைக் காணலாம்.

• பறப்பதை விட மிக மிக விரைந்து தரையில் ஓடும்படியே இதன் உடல் அமைப்பும் உள்ளது. இதுவும் தரையில் ஓடுவதையே அதிகமாக விரும்புகிறது.

• இவைகளுக்கு ஒற்றுமை உணர்வு அதிகம். பல காடைகள் ஒன்றாக ஒரே புதரில் வசிக்கும். புதர்களில் இவை அடையும்போது, புதரின் வாயிலைப் பார்த்தே உட்காருகின்றன.

• ஆபத்து வந்து விட்டால் எல்லாமாகச் சேர்ந்து திடீரென்று பறக்கும். 'ஸ்' என்று பறக்கும் போது ஓசை எழுப்பும். ஒரே வரிசையில் நீர் குடிக்கப் போகும். அதே ஒழுங்கில் திரும்பும். ஒரே வழியிலேயே பெரும்பாலும் நடக்கும். மிகவும் பயந்த குணமுடையவை. இவை எளிதில் பிடிபடக் காரணம் இதுதான்.

• புதர்களில் இவை முட்டை இடும். அடைகாப்பது முழுக்க முழுக்க அம்மா மட்டும்தான். ஒரே ஈட்டில் 4 முதல் 8 வரை அடைகாப்பது 16 - 18 நாட்கள்.

• "வ்வீ! வ்வீ!" என்றும், "குர்...ர்" என்றும், 'ச்சக்', 'ச்சக்' என்றும் குரல் எழுப்பும்.

• புதர்க்காடைகளால் வேட்டைக்காரர்களுக்குப் பெரிய தொந்திரவு. புலி, சிங்க வேட்டைக்காக இவர்கள் பதுங்கியிருக்கும் போது இவை திடீரென்று புதர்களிலிருந்து கிளம்பி, குறியைத் தப்ப வைக்கின்றன!

• மனிதனைப் போலவே மூப்பின் தாக்கம், இதன் தோற்றத்தை மாற்றுகின்றன!

• உணவு புல்லின் மணிகள், தானியங்கள், இளந்தளிர்கள், எறும்பு, கரையான், பூச்சி, புழுக்கள், ஜீரணத்திற்காக மிகச் சிறிய பொடிக் கற்களை உணவுடன் விரும்பி உண்ணும்.

றாகப் போகின்றன! எங்கே போகுது?" என்று வியந்து கேட்டான்.

இதற்குள் ராஜமன்னாரே வந்துவிட்டான். "காடையேதான்! இவை ஒழுங்குக்குப் பெயர் போனவை. தண்ணீர் குடிக்கப் போகின்றன. இவை அதிகமாகப் பறக்காது. ஆபத்து வந்தால், தப்பிக்கத்தான் கூட்டமாகப் பறக்கும். மற்றபடி வேகவேக நடைதான்!" என்றான் அவன்.

மறுநாள் மழையில்லை. அதிகாலையில் மலையேற்றப் பயிற்சிக்கு எல்லோரும் கிளம்பிக் கொண்டிருந்தார்கள். பவானி தன் கைகுட்டையை மடித்துக் கொண்டிருந்தபோது பறந்து விட்டது. அவள் அதைப் பிடிக்க ஓட ஓட, அது பறந்து போய்க் கொண்டே இருந்தது!

பின்னாலேயே அவளுக்கு உதவி செய்ய தேவகியும் வந்தாள். கடைசியில் அந்தப் பொல்லாத கைகுட்டை ஒரு அடர்ந்த புதரின் மேல் விழுந்தது. இருவரும் புதருக்கு அருகே சென்று கைக்குட்டையை எடுக்கக் கைகளை நீட்டிக் குனிந்தனர்.

'விர்'ரென்ற சப்தத்துடன் முகத்திலடித்தது போல் திடீரென்று புதரிலிருந்து கூட்டமாகக் கிளம்பிப் பறந்தன நாலைந்து பறவைகள்! அதே நேரத்தில் எல்லாப்

புதர்களில் இருந்தும் இதே போன்ற பறவைகள் திடீரென்று கிளம்பிப் பறந்தன! திடீரென்று கிளம்பிப் பறந்த போதுஅவை எழுப்பிய 'ஸ்' சத்தம் அரை நிமிட நேரம் வரை தொடர்ந்து கேட்டது! அத்தனை பறவைகள்! கவனித்துப் பார்த்த போது அத்தனையும் நேற்று இரவு அவர்கள் கண்ட அதே இனம் என்பது தெளிவாயிற்று. ராஜமன்னார் அவை புதர்க் காடைதான் என்பதை உறுதி செய்தான்.

பயிற்சியை முடித்து விட்டு பிற்பகல் நேரத்தில் அவர்கள் திரும்பிக் கொண்டிருந்தபோது ஏரிக்கு அருகே வலை விரித்திருந்ததைக் கவனித்தார்கள். மறைவில் இருந்து வெளிப்பட்ட மலைவாழ் மக்கள் நான்கு பேர் மண்ணை எடுத்துப் புதர்களில் அடித்து வாயைக் குவித்து "குர்ர்ர்...!" என்று கடுமையாகக் குரல் கொடுத்தார்கள். அடுத்த வினாடி, "ஸ்" சத்தத்துடன் புதர்களில் இருந்து காடைகள் வெளிவந்து பறந்தன!


அத்தனையும் ஒன்றுவிடாமல் விரித்திருந்த வலைகளில் மாட்டிக் கொண்டன! பெரிய, பரந்த, வட்ட வடிவிலான மூங்கில் கூடையைக் கொண்டு வந்து, வலைகளில் சிக்கிய காடைகளை ஒவ்வொன்றாக விடுவித்துக் கூடைக்குள் போட்டு மூடினார்கள். சுமார் ஐம்பது காடைகள் தங்கள் சுதந்திர வாழ்க்கையைப் பறிகொடுத்து விட்டு சிறைப்பட்டு விட்டன!

"இவைகளை என்ன பண்ணுவீர்கள்?" - கேட்டது பவானிதான்.

"நகரத்தில் உள்ள பிரபல மிலிட்டரி ஓட்டலுக்குக் கொண்டு போறோம்மா. மொத்தமா இருநூறு ரூபாய்க்கு மேல் கிடைக்கும்" என்றார் மலைவாழ் மக்களில் ஒருவர்.


"இருநூறு ரூபாய் தந்தால் இவைகளை விட்டு விடுவீர்களா?"

நண்பர்களின் உதவியுடன் வசூல் பண்ணின பணத்தை அவர்களிடம் கொடுத்து, ஒவ்வொரு காடையாக எடுத்து வானில் பறக்க விட்டபோது, "அவை நன்றி பவானி!" என்று குரலெழுப்பியது போல் தோன்றியது!




"நேற்று ஹைரோட்டுலே வி,வி, வி,வி,வி,வி,வி,வி,வி,வி, நடந்ததுடா."
"என்னடா சொல்லுறே? புரியலையே..."
"'வி'பத்து நடந்ததுடா.

— ஏழ்வரைக்குடியான்



"அவன் குடை வாங்கினான். இது என்ன காலம்?"
"மழைக்காலம்!"

— பாளை பசும்பொன்



"வெய்யில் அடிக்குதுடா...!"
"நீ ஏண்டா அதுகிட்டே வம்பு வச்சிக்கிறே?"

- சீர்காழி வி. ரேவதி

ஒட்டு

அரை ஆண்டுத் தேர்வின் மார்க்குகள் வந்ததும்தான் தாமதம்! ஓட்டமாக ஓடினான் நந்து...! எங்கே தெரியுமா?...

அவனது நண்பன் சுந்தரின் வீட்டுக்கு! சுந்தருடைய அப்பாவைப் பார்த்து, தான் முதல் மார்க்கு வாங்கினதைச் சொல்லி... அவரிடம் பரிசு வாங்கிட....

எப்படியோ ஓட்டமும் நடையுமாக சுந்தரின் வீட்டை அடைந்தான்.

வீட்டின் ஹாலிலேயே ஊஞ்சலில் ஆடிக் கொண்டு அன்றைய தினத்தாளைப் பிரித்துப் படித்துக் கொண்டிருந்தார் சுந்தருடைய அப்பா!

ஹாலில் நுழைந்ததும் மூச்சு இரைக்க "வணக்கம் மாமா" என்றான் நந்து!

"என்னடா நந்து? மூச்சு வாங்க ஓடி வந்திருக்கே! என்ன விசேஷம்?" என்றார் சுந்தரின் அப்பா.

"மாமா... இப்ப நடந்த அரைப் பரீட்சையிலே நான்தான் முதல் மார்க் மாமா! இதைச் சொல்லத்தான்... ஓடோடி வந்தேன்!" என்றான் நந்து.


அவனுக்கு சம்பளம் கட்டி, புத்தகம், சீருடைய எல்லாம் வாங்கித் தருபவர் அவர் தான்.

"முதல்மார்க்கா? நான் அப்பவே நினைச்சேன்... என் நம்பிக்கை பொய்க்கவில்லை. கொஞ்சம் இரு.. இதோ வரேன்" என்று சுந்தரின் அப்பா உள்ளே போனார்.

நந்து, படபடப்போடு நின்று கொண்டிருந்தான். உள்ளே போனவர் உடனே வெளியே வந்தார்.

"நந்து, இந்த இருபத்தைந்து ரூபாயை என்னுடைய பரிசா வைச்சுக்கோ!... உன் விருப்பப்படி என்ன வேண்டுமானாலும் செலவு செஞ்சிக்கோ!" என்று அவனிடம் தந்தார்.

நந்துவுக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை! ரெண்டு கால்களும் தரையிலேயே நிக்கலே..



ட்ட

எஸ். வஜ்ரவேல்

இருபத்தைந்து ரூபாயை வாங்கிக் கொண்ட நந்து, "நன்றி மாமா... நான் வரேன்" என்று சொல்லிவிட்டு வெளியே வந்தான்.

போகிற வழியிலே 'அசோக் பவன்' வந்ததும் கொஞ்சம் நேரம் நின்றான். அவன் மனக்கண்முன்னே... குலோப்ஜாமும், மசாலா தோசையும், மைசூர் கார போண்டாவும்... மாறி மாறி வந்து போயின! 'அசோக் பவனைப் பற்றி எவ்வளவு கேள்வி பட்டிருக்கான்! என்றைக்காவது ஒரு நாள் அங்கே போய் பலகாரம் சாப்பிடணும்னு நினைச்சிருந்தான். அந்த சந்தர்ப்பம் இப்போ வந்திருக்கு!

அசோக் பவனில் எத்தனை கூட்டம்? உள்ளே போய் யோசிக்காமல் மேலே ஒரு நல்ல இடமாகப்பார்த்து உட்கார்ந்தான்.

வரவேற்கத் தயாராக இருந்த சர்வர், "என்ன தம்பி? என்ன வேணும்? குலோப் ஜாம், மசால் தோசையா?" என்றார்.

"குலோப்ஜாமும் மைசூர் மசாலா போண்டாவும்" என்றான் நந்து.

சர்வரிடம் சொல்லி விட்டானே தவிர அவன் கண் முன்னே, அன்பான தம்பி ராமுவும்.. தங்கை மீனுவும் வந்து நின்றனர். இரண்டு பேரும் பரிதாபமாகப் பார்ப்பது போல் தோன்றியது! அவங்க ரெண்டு பேரும் அவனுக்காகப் பொறுத்திருந்து சாப்பிடுவார்களே! அவனிடம் எத்தனை அன்பு! எதையும் அவனைக் கொண்டு தானே பங்கிடச் சொல்லுவார்கள்? அப்படிப் பட்ட அன்பான தம்பியையும் தங்கையையும் விட்டுட்டுத் தான்மட்டும் சாப்பிடலாமா? கடவுள் இதை மன்னிப்பாரா? என்று மனசாட்சி இடித்தது.



நந்து உடனே, விருட்டென எழுந்தான். வேகமாக 'அசோக் பவனை விட்டு வெளியே வந்து நடந்தான்.

சர்வர் பின்னாலேயே கூப்பிட்டது நந்துவின் காதில் விழுந்தது. ஆனால் அவன் பதில் சொல்லவில்லை!

மடமடவென்று வேகமாக வீட்டுக்கு வந்து சேர்ந்தான். அங்கே வீட்டு வாசலில்... மீனாவும், ராமுவும் நந்துவின் வரவை எதிர் பார்த்து நின்றிருந்தார்கள்.

"நந்து அண்ணா!" எனக் கூவிக் கொண்டு ஓடி வந்த தங்கை மீனா நந்துவைக் கட்டிக் கொண்டாள்.

"என்ன மீனா?" என்றான் நந்து.

மீனாவின் பின்னாலேயே ராமு.

"அண்ணா மதுரையிலேயிருந்து நம்ம மாமா ஸ்வீட் கொண்டு வந்திருக்காங்க!... நீங்க வந்த பின்னாலேதான், எல்லோரும் ஒண்ணா சாப்பிடலாம்னு காத்துக்கிட்டு இருக்கோம்!" என்ற ராமு அண்ணாவின் கையையும், தங்கை மீனாவின் கையையும் பிடித்து உள்ளே இழுத்துக் கொண்டு ஓடினான்.

நந்துவுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. "எத்தனை பெரிய தப்பை நாம செய்ய இருந்தோம்! நல்லவேளை! கடைசி நிமிஷத்துல கடவுள் எப்படியோ காப்பாத்திட்டாரு!" என்று மனமகிழ்ச்சியடைந்தான்.

இரண்டு கைகளாலேயும் ராமுவையும், மீனாவையும் சேர்த்து அணைத்துக் கொண்டான். மீனாவின் பிஞ்சுக் கைகளை எடுத்துத் தன் கன்னத்தில் அடித்துக் கொண்டான் செல்லமாக.

"மீனா, ராமு நாமெல்லாம் எங்கே போகப் போகிறோம் தெரியுமா?

"பீச்சிலே காத்து வாங்கத்தானே?" என்றாள் மீனா.

"சினிமாவுக்குத்தானே அண்ணா?" என்றான் ராமு...


"இல்லே! இல்லே!! என்றான் நந்து.

"நானே சொல்லட்டுமா? நம்ம ஊர்லே... புதுசா சர்க்கஸ் வந்திருக்கில்ல... அங்கேதான் நாம மூணு பேரும் போகப் போறோம்."

"அப்படியா! போவோம் இப்பவே போவோம்" என்று குதித்து ஆடினார்கள் ராமுவும், மீனாவும்.

நந்து, தன் பாக்கெட்டைத் தொட்டுத் தடவிப் பார்த்துக் கொண்டான். சுந்தரின் அப்பா பரிசாகக் கொடுத்த இருபத்தைந்து ரூபாய் பத்திரமாக இருந்தது.

நந்துவுக்கு அளவில்லாத மகிழ்ச்சி! அன்பான தம்பி, தங்கைகளோடு சர்க்கஸுக்குப் போகப் போகிறானே? இருக்காதா பின்னே?



நல்ல தீர்ப்பு!

ஓர் ஊரில், தண்ணீர்ப் பஞ்சம் தலைவிரித்தாடியது. பல மைல்கள் நடந்து சென்று குடி தண்ணீர் கொண்டு வரக்கூடிய நிலை. அந்த சிற்றூரிலேயே பணக்காரன் ஒருவன் தன் வீட்டுத் தோட்டத்தில், பூமிக்கடியில் தண்ணீர் இருப்பது கண்டு ஒரு கிணறு தோண்ட ஏற்பாடு செய்தான். ஆண்டவனருளால் அந்தக் கிணற்றிலிருந்து இனிப்பான நல்ல குடிநீர் தாராளமாக ஊறி வந்தது. பலரும் அந்தக் கிணற்றால் பலனடைந்தார்கள். ஊரே அவனைப் போற்றிப் புகழ்ந்தது.

பக்கத்து வீட்டில் இருந்த மற்றொரு பணக்காரன் மட்டும் இதைக் கண்டு பொறாமைத் தீயில் சதா வெந்தான். 'இவனுக்கு நான் எந்த வகையிலும் குறைந்தவனில்லை!' எனும் நினைப்பில் ஏறுக்குமாறாக அவ்வப்போது பேசி அவனை வம்புக்கு இழுத்து சண்டையிட வைத்தான். இருவருக்கும் மனஸ்தாபம் முற்றியது. ஏறுக்குமாறாகப் பேசி சண்டையிடும் பக்கத்து வீட்டுக்காரனைத் தன் கிணற்றில் தண்ணீர் எடுத்துச் செல்ல கிணற்றுக்குச் சொந்தக்காரன் அனுமதிக்க மறுத்தான். மனதுக்குள் கறுவிய பக்கத்து வீட்டுக்காரன், அதிக விலைகொடுத்து அந்தக் கிணற்றையே விலைக்கு வாங்கி விட்டான்!

அதன் பிறகு கிணறு விற்றவனை கிணறு வாங்கியவன் அந்தக் கிணற்றிலிருந்து தண்ணீர் எடுக்க அனுமதிக்க மறுத்தான். இருவரும் ஒருவருக்கு மற்றவர் சளைக்காமல் சண்டையிட்டனர். கிணற்றில் இருந்து தனக்குக் குடிநீர் எடுக்கும் உரிமை உண்டு வாதாடினான் விற்றவன். மனிதநேய அடிப்படையில், குடிநீர் எடுக்க அனுமதிப்பது நியாயம் என்பதை கிணறு வாங்கியவனும் ஏற்க மறுத்தான். இருவரும் அந்த ஊர் பஞ்சாயத்துத் தலைவரிடம் முறையிட்டனர்.

'கிணற்றை விற்ற பிறகு அதில் எப்படிச் சொந்தங் கொண்டாட முடியும்?' என்று இதம்பதமாக எடுத்துரைத்தும் விற்றவனது பிடிவாதமான மர மண்டையில் நியாயம் ஏதும் ஏறவில்லை.

"நான் அவனுக்குக் கிணற்றைத்தான் விற்றேனேயொழிய, கிணற்றுத் தண்ணீரையும் சேர்த்து அல்ல!"

"கிணற்றை வாங்கி விட்டதால் அதனோடுள்ள தண்ணீரும் வாங்கியவனுக்குத்தானே சொந்தம்...!"

"இல்லையில்லை! கிணறுதான் அவனுடையது; தண்ணீர் என்னுடையது!"


அடிப்படை மனித தர்மங்களையும் வழிமுறைகளையும் மறந்து இருவரும் கடுமையாகச் சண்டையிட்டனர்.

இப்படி விவாதம் முடிவின்றியிருக்கவே, பஞ்சாயத்துத் தலைவர் முடிவில், "கிணறு வெட்டியவன் கிணற்றை மட்டும் விற்றதால் உடனடியாகக் கிணற்றிலுள்ள தண்ணீரையெல்லாம் காலியாக்கி பத்தே நாட்களில் வாங்கியவனிடம் ஒப்படைக்க வேண்டும். அதை மீறினால் நாளொன்றுக்கு ஆயிரம் ரூபாய் கட்ட வேண்டும் வாடகையாக! தண்ணீர் கிணற்றில் தேங்கிக் கிடப்பதற்கு வாடகை வேண்டாமா?'' எனத் தனது தீர்ப்பைக் கூறினார். அதோடு, "கிணறு இன்னொருவர் வீட்டில் இருப்பதால், கிணற்றை வாங்கியவர் அதற்கு வாடகையாக கிணறு இருக்கும் வீட்டுக்காரருக்குப் பணம் தரவேண்டும்" என்றார்.

பிறகென்ன...? இரண்டு பேரும் தங்களுக்குள் விட்டுக் கொடுத்து சுமுகமாகப் போவதைத் தவிர வேறு வழியிருக்கவில்லை.

- பா.மு.

வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டியில் 3-வது பரிசுபெறும் 3-வது கதை



படிப்பை விடவா?

ஜெ. கணேசன்

விஜய், கார்த்திக் இருவரும் நண்பர்கள். ஒரே பள்ளியில் ஒரே வகுப்பில் படிப்பவர்கள். ஒன்பதாம் வகுப்பு படித்து முடித்து, வரும் ஆண்டில் பத்தாம் வகுப்பில் அடியெடுத்து வைக்கப் போகிறவர்கள். அன்றுதான் பள்ளி கடைசி வேலை நாள். எல்லோரும் உற்சாகமாகப் பேசி மகிழ்ந்தனர். ஆனால் கார்த்திக் மட்டும் பெரும் சிந்தனையில் ஆழ்ந்து கிடந்தான். பள்ளி மணி ஒலித்தது. மாணவர்கள் மைதானத்தில் கூடினர். பள்ளித் தலைமையாசிரியர் அங்கே வந்து ஓர் அறிவிப்பைச் செய்தார்.

"அன்பு மாணவர்களே, விடுமுறை தொடங்கப் போகிறது. விடுமுறை முடிந்ததும் புது வகுப்புக்குச் செல்லப் போகிறீர்கள். நமது பள்ளி பல துறைகளிலும் சிறந்து விளங்குகின்றது. படிப்பு, பேச்சு, கட்டுரை, நாடகம், விளையாட்டு, ஆடல், பாடல் என்று பல துறைகளிலும் சிறப்பான இடத்தைப் பெற்று வருகிறது. நமது பள்ளிக்கு மேலும் சிறப்பளிக்கும் வகையில் உங்களுக்கு மகிழ்ச்சி தரும் செய்தியைக் கூறப் போகிறேன். தமிழ்நாட்டின் சிறந்த கராத்தே வீரரான ரென்ஷி ராஜேஷ்குமார் அவர்கள், நமது பள்ளி மாணவர்களுக்கு கட்டணம் ஏதுமின்றி இந்தக் கோடை விடுமுறையில் கராத்தே பயிற்சியளிக்க முன்வந்துள்ளார்."

மாணவர்கள் கைதட்டி மகிழ்ச்சியைத் தெரிவித்தனர். பள்ளி முதல்வர் தொடர்ந்தார். "விருப்பமுள்ள மாணவர்கள் அலுவலகத்திற்கு வந்து ஐந்து நாட்களுக்குள் தங்கள் பெயரைப் பதிவுசெய்து கொள்ளலாம்."

மாணவர்கள் கலைந்து தத்தம் வகுப்புக்குச் சென்றனர். எல்லோரும் கராத்தே பயிற்சியைப் பற்றியே கூடிக் கூடிப் பேசினர். கார்த்திக் மட்டும் எதிலும் கலந்து கொள்ளாது தனியே அமர்ந்திருந்தான். அவன் மனதில் அந்த வருடத் தொடக்கத்தில் நடந்த நிகழ்ச்சிகள் நிழலாடின.

எட்டாம் வகுப்பு வரை கார்த்திக் தான் முதல் ரேங்கைப் பெற்றுக் கொண்டிருந்தான்.

ஒன்பதாம் வகுப்பில் விஜய் புதிதாகப் பள்ளியில் சேர்ந்திருந்தான். முதல் மாத இடைத் தேர்விலேயே கார்த்திக்கின் முதல் ரேங்க் விஜயிடம் பறிபோய் விட்டது. அதிர்ந்தான் கார்த்திக். இத்தனை நாட்களாகத் தனக்கே உரிமையானதாக இருந்த முதல் ரேங்க், புதிதாகச் சேர்ந்திருந்த பையனிடம் சரணடைவதா எனப் பொருமினான். பழைய மாணவர்கள் யாராவது முதல் ரேங்க் வாங்கியிருந்தால் கூட அவன் தாங்கிக் கொண்டிருப்பான். இப்படிப் புதிதாக வந்தவன் முதல் ரேங்கைக் கைப்பற்றி விட்டானே என்று குமைந்தான். அதற்குப் பிறகு தொடர்ந்த எல்லாத் தேர்வுகளிலும் விஜய்யே அதிக மதிப்பெண் வித்தியாசத்தில் முதல்

இடத்தை வென்றான். பொறாமைத் தீ சுட டெரித்ததால் கார்த்திக்கால் பழையபடி படிப்பில் கவனம் செலுத்த முடியவில்லை. இரண்டாம் இடத்திலேயே அவன் இருந் தான்.

அதுநாள்வரை மாணவர்களும், ஆசிரியர்களும் கார்த்திக்கிடம் வைத் திருந்த மதிப்பும், அன்பும் மெதுவாகக் குறைந்தது. பதிலாக அவர்களிடையே விஜய் செல்வாக்குப் பெற்றவனாக வளர ஆரம்பித்தான். கார்த்திக் விஜய்யைத் தன் பகைவனாகவே எண்ணி வெறுத்தான். ஆனால் நல்ல மனம் கொண்ட விஜய் அவனுடைய வெறுப்பைப் பொருட் படுத்தவில்லை. கார்த்திக்கிடம் நட்பாகவே இருந்தான்.

எப்படியாவது விஜய்யை மட்டம்தட்ட வாய்ப்புக் கிடைக்காதா என்று ஒரே சிந்தனையாக இருந்தான்.

9-ஆம் வகுப்பில்தான், முதல் ரேங்கை விஜய்யிடம் கோட்டை விட்டோம். பத்தாவதிலாவது அதை மறுபடி கைப்பற்றி விட வேண்டும். அதற்கு கோடை விடுமுறையைப் பயன்படுத்திக் கொண்டு அட்வான்சாகப் பாடங்களைப் படித்துக் கொள்ள வேண்டும்; டியூஷன் வைத்துக் கொள்ள வேண்டும். அதோடு, இந்தக் கோடை விடுமுறையில் விஜய்யை, திட் டம் போட்டுப் படிக்க விடாமல் செய்து விட வேண்டும். அதற்கு என்ன வழி என்று கார்த்திக் தீவிரமாகச் சிந்தித்தான்.

தலைமை ஆசிரியரின் கோடை விடு முறைக்கான இலவச கராத்தே வகுப்புக் கான அறிவிப்பு கார்த்திக்குக்குப் புதிய திட்டத்தை வகுக்கக் கைகொடுத்தது. ''விஜய்'' என்று அவனே விஜய்யைத் தேடிக் கொண்டு போனான். "என்ன விஜய், கராத்தே வகுப்பில் சேரப் போகிறாயா?'' என்று கேட்டான்.

''அதைப் பற் றித்தான் யோசிக் கிறேன் கார்த்தி. ஏற்கெனவே ஓவிய வகுப்பில் சேர்ந்து விட்டேன். மூன்றே மாதங்களில் அது முடிந்து விடும். அதையும் கவனித் துக் கொண்டு, கராத்தே பயிற்



சிக்குப் போக முடியுமா என்று குழப்பமா இருக்கு. ஆனாலும் ஆறு மாத காலப் பயிற்சியை மூன்றே மாதங்களில் பெறுவது என்பது எத்தனை அரிய வாய்ப்பு! அதனால் எப்படியும் கராத்தே வகுப்பில் சேர்வது என்ற முடிவுக்கு வந்து விட்டேன்" என்ற விஜய், "ஆமாம், நீ என்ன பண்ணப் போறே?" என்று பதிலுக்குக் கேட்டான்.



கார்த்திக்குப் பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல் இருந்தது. ஏற்கெனவே ஓவிய வகுப்பு. அதோடு கராத்தே தீவிரப் பயிற்சி வகுப்பு. "விஜய், இனி என்னோடு போட்டி போட்டு பள்ளி முதலாக வருவது இந்த ஆண்டு நடக்காத காரியம்!" என்று மனத்திற்குள் மகிழ்ந்தான் கார்த்தி.

"கார்த்தி, நான் உன்னைப் போல் புத்திசாலி இல்லை. இந்தக் கோடை விடுமுறையில் கொஞ்சம் அட்வான்சாகப் படிக்க திட்டம் போட்டிருக்கேன். படிப்பை விடவா கராத்தே உயர்ந்தது?" என்றான் கார்த்தி.


நாட்கள் ஓடின. ஓவியப் பயிற்சியையும் திறமையாக முடித்து, சான்றிதழ் பெற்றான் விஜய். அவன் வரைந்து வைத்த ஓவியம், அரசின் தனிப் பரிசைப் பெற்று, அரசு வெளியிட இருந்த நாட்குறிப்பிலும் இடம்பெற இருந்தது. அதோடு கராத்தேவிலும் அவன் சிறப்பு நிலையில் தேர்ச்சி பெற்று, கராத்தே சங்கத்தின் தங்கப் பதக்கத்தைப் பெற்றிருந்தான்.

பள்ளி திறந்ததும், முதல் நாள் இறை வணக்கம் முடிந்ததும், பள்ளி அசெம்பிளியில் எல்லா வகுப்பு மாணவர்களும் கூடியிருந்தபோது, தலைமை ஆசிரியரே விஜய்யின் வெற்றிகளைக் குறிப்பிட்டு அவனுக்குப் பாராட்டும் வாழ்த்தும் கூறிய போது எழுந்த கைதட்டல் சப்தம் அடங்கப் பத்து நிமிடங்களாயின.

"இருக்கட்டும். இடைத் தேர்விலேயே அவனைப் பின்னுக்குத் தள்ளி முதல் ரேங்க் வாங்கிக் காட்டுகிறேன்" என்று மனதுக்குள் கருவினான் கார்த்திக். இடைத் தேர்வு வந்தது. மதிப்பெண்களும் ரேங்கும் அறிவிக்கப்பட்டன. விஜய்யே அதிலும் முதல் ரேங்க்!

கார்த்திக்கால் இதை நம்ப முடியவில்லை. விடைத்தாள்கள் தரப்பட்டதும் அவன் கார்த்திக்கின் விடைத்தாளை வாங்கிப் பார்த்தான். தன்னுடையதுடன் ஒப்பிட்டுப் பார்த்தான். நியாயமாகவே மதிப்பெண் தரப்பட்டுள்ளது என்பதை அவன் உணர்ந்தான்.

"விஜய்! எப்படி உன்னால் இந்த அளவுக்குத் தெளிவாக வினாக்களைப் புரிந்து கொண்டு பதில் எழுத முடிந்தது? டியூஷன்



அரிய, பெரிய உண்மைகள்
அறிய உதவும் நூலைப் போல்
விரியும் அறிவைப் போதிக்கும்
நல்ல நட்பை நாடுங்கள்

விழலில் பாயும் நீரைப் போல்
வீணில் பொழுது போக்கியே
பழகும் நட்பை விலக்குங்கள்
பார்த்து தெளிந்து பழகுங்கள்.

தவறு புரியும் தருணத்தில்
தடுக்கும் நண்பர் அவசியம்
கவரும் வகையில் எளிமையும்
கனிவும் நட்பின் அணிகலன்

குளங்கள் வற்றும் வேளையில்
கொக்கு பறந்து விடுதல்போல்
வளங்கள் குறையும் நாளையில்
வணிக நட்பு விலகிடும்.

பாசம், அன்பு செலுத்தினால்
பகைவர்கூட நண்பர்கள்
நாசம் செய்யும் பொறாமையால்
நல்ல நட்பு முறிந்திடும்.

பாலம் போன்ற நட்பினால்
நாடு யாவும் இணைகையில்
காலந் தோறும் அமைதிதான்
கலகம் ஒயும் நிச்சயம்.

— சி. விநாயகமூர்த்தி

வைத்துக் கொண்டாயா?" - கேட்டது கார்த்திக்தான்.

"இல்லை கார்த்தி. சாதாரணமாகவே நான் வகுப்பில் பாடம் நடக்கும்போது கவனத்தைச் சிதற விடாமல் மிகவும் தீவிரமாகக் கவனிப்பேன். கராத்தே பயிற்சி, மனதை ஒருமைப்படுத்த இன்னும் அதிகமாக உதவியுள்ளது. அவ்வளவுதான்" என்றான் விஜய் அடக்கமாக.

கார்த்தியின் மனம் பொறாமையாலும், ஏமாற்றத்தாலும் குமைந்தது. நாட்கள் ஓடின. ஒருநாள் கார்த்தி இரவு ஆட்டம் சினிமாவுக்குப் போய்விட்டு சைக்கிளில் திரும்பிக் கொண்டிருந்தான். மழைத் தூறியிருந்ததால் சாலைகள் காலியாக வெறிச்சோடிக் கிடந்தன. தெருவிளக்குகள் அணைந்து அணைந்து எரிந்தன.

ஒரு திருப்பத்தில், இரண்டு முரடர்கள் கார்த்தியை மறித்தனர். அவன் சைக்கிளில் இருந்து கீழே தள்ளப்பட்டான். அருகே ஒரு வேன் வந்து நின்றது. அவனை அதற்குள் குண்டுக்கட்டாகத் தூக்கிப் போடப் போனார்கள்.

அந்தச் சமயத்தில் எங்கிருந்தோ வந்தான் விஜய். இரண்டு முரடர்களுக்கும் அவன் கொடுத்த சரமாரிக் குத்துகளால் இருவரும் திணறி மயங்கினர். சினிமா காட்சியேதான் ஆனால் உண்மை நிகழ்வு! வேன் பறந்து விட்டது!

"பதினைந்து வயது இளைஞனின் சிறுநீரகம் தேவை என்பதற்காக ஒரு இளைஞனைக் கடத்த இவர்கள் முயல்வதைத் தற்செயலாகக் கேட்டேன். அவர்களறியாது தொடர்ந்து பின்னாலேயே வந்தேன். ஆனால் சிக்கப் போவது நீ என்பதை நான் எதிர்பார்க்கவே இல்லை கார்த்திக். சைக்கிளில் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் தகவலைச் சொல்லி, இன்ஸ்பெக்டரை அழைத்து வா. அது வரை இவர்களை அசையாமல் நான் பார்த்துக் கொள்கிறேன்" என்று கார்த்திக்கை அனுப்பி வைத்தான் விஜய்.

"படிப்பை விடவா?" என்று உன்னை கேலி செய்தேன். ஆனால் அதுவே உன் படிப்புக்கு மேலும் உதவியதுடன் என்னையும் காத்து விட்டது!" என்று நண்பனின் கைகளைப் பற்றிக் கண்ணீர் விட்டான் கார்த்திக்.

எங்கள் ஊரில் நடந்தது!

சூடுபழம்!

வீட்டில் ஒரு விசேஷத்திற்காக வாழைப்பழம் வாங்கக் கடைத்தெருவுக்குச் சென்றிருந்தேன். கூடவே மகன் சின்னவனும் வந்திருந்தான். ஒரு கடையில், வாழைப்பழம் என்ன விலை என்பதற்காக 'பழம் எப்படி?' என்றேன்.



கடைக்காரர் விலை அதிகம் என்பதைக் குறிப்பிட "ரொம்ப சூடா இருக்கு!" என்றார். பேசிக் கொண்டே ஒவ்வொரு பழமாகத் தொட்டு ஒரு வாழைத்தாரில் இருந்த பழங்களை விரைவாக எண்ணினேன். இதைக் கவனித்துக் கொண்டிருந்த சின்னவன் தானும் ஒவ்வொரு பழத்தையும் "கிடு கிடு"வெனத் தொட்டுப் பார்த்தான். ஏன் இப்படிச் செய்கிறாய்?" என்று கேட்டதற்கு "நீங்கள் பார்த்தது போலத்தான் நானும் ஒவ்வொரு பழத்தையும் தொட்டுப் பார்த்து சூடு எப்படி உள்ளது என்று பார்த்தேன்! என்றான்."

திருவாரூர், மு.தனகோபாலன்.

எலி முட்டை!

எங்கள் பாட்டி சொற்களை முன்னும் பின்னும் மாற்றிக் கூறுவது வழக்கம். நாங்கள் ஒருமுறை விடுமுறைக்குப் பாட்டி வீட்டிற்குச் சென்றிருந்தோம். ஒரு நாள் பாட்டி, "எலி முட்டையை நெய் கொண்டு போகிறது. பிடி! பிடி!" என்று



கத்தினார். எலி என்ற முட்டையிடாத விலங்கின் முட்டையை, நெய் எப்படிக் கொண்டு போகும் என்று எங்களுக்கு ஒரே குழப்பம்! பிறகுதான், "நெய் முட்



டையை (ஸ்பூனை) எலி கொண்டு போய் விட்டது'' என்பதைத்தான் மாற்றிச் சொல்லியிருக்கிறார் என்று தாத்தா புரிய வைத்தார். இப்போதெல்லாம் நெய்யைப் பற்றியோ, எலியைப் பற்றியோ பேசினால் பாட்டி நினைப்புதான்.

சிதம்பரம், **என்.பி.ஷோபனா.**

பீரோ மறைக்குமே!

எங்கள் பள்ளி ஆண்டு விழா முடிந்ததும் ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொண்



டோம். ஒரு நண்பன் சினிமாவுக்கு வர அழைத்தான். சரி என்று நானும் சென்றேன். 'சி' ரோவில் இரண்டு டிக்கெட் கொடுங்கள்" என்று கௌண்டரில் கேட்டேன். டிக்கெட்டுகளை வாங்கிய பிறகு என் நண்பன் "நான் 'சி'ரோவில் உட்கார மாட்டேன்'' என்றான். "ஏன்?'' என்று கேட்டேன் திகைப்புடன் "முன்னாடி 'பீ' ரோ இருக்குமே? அது மறைக்காதா?" என்று சிரித்தான் நண்பன். அன்று முழுவதும் அவன் சொன்னதைக் கேட்டு மனதிற்குள்ளேயே சிரித்துக் கொண்டிருந்தேன்!

அனந்தபுரம், **கே. ராஜேஷ்குமார்.**

தெரிஞ்சிருக்கு!

ஸ்ரீராமநவமியன்று வீட்டில் பூஜை முடிந்த பிறகு பிரசாதங்களை சாப்பிட்டுக் கொண்டிருந்த போது என் அண்ணா, ''நமது முன்னோர்களுக்குக் கூட இங்கிலீஷ் தெரிஞ்சிருக்கு'' என்று புதிர் போட்டான். நாங்கள் எல்லோரும் "எப்படிச் சொல்றே?" என்று வியப்புடன் கேட்கவும் "நீர்மோரில் மோரைவிட நீர்தான்



அதிகமா (MORE) இருக்கு அதான் அந்தக் காலத்திலேயே அர்த்தத் தோட பெயர் வைச்சிருக்காங்க!" என்று பதிலளிக்கவும் நாங்கள் சிரிக்க ஆரம்பித் தோம்.

க. கௌரி, **கீழ்நத்தம்.**

செவன் மவுண்ட்டன்!

ஆறாம் வகுப்புப் படிக்கும் மாணவனைப் பார்த்து, புதியதாக வந்திருந்த ஆங்கில ஆசிரியர் "What is your father's



name?" என்ற கேள்வியைக் கேட்டார். "என் அப்பா பெயர் ஏழுமலை" என்றான் மாணவன். இங்கிலீஷில் கேட்டதற்குத் இங்லீஷிலேயே பதில் சொல்?" என்றார் ஆசிரியர். உடனே அந்த மாணவன், My father's name is Seven mountain"

என்றானே பார்க்கலாம்!
வெள்ளையாம் பட்டு, சின்னத்தம்பி.

எப்படி எரியும்?

எங்கள் தெரு குடிகாரர்கள் நடமாடும் தெரு. ஒரு நாள் இரவில் குடி காரன் ஒருவன் குடி மயக்கத்தில் தெரு விளக்குக் கம்பத்தைக் கைகளால் தட்டினான். "முருகா, திறடா" என்றான். பதிலில்லை. எப்படி எங்கிருந்து பதில் வரும்? கூடவே வந்திருந்த மற்றொரு குடிகாரன் "வீட்டில்



ஆள் இல்லை போல தெரிகிறது அண்ணே?" என்றான். உடனே முதல் குடிகாரன் "நீ சும்மா இரு பிரதர். வீட்டில் ஆள் இல்லேன்னா, மாடியில் மட்டும் எப்படி லைட் எரியும்?" என்று கேட்டான். எங்களுக்குப் பரிதாபமாக இருந்தது.
வெள்ளையாம்பட்டு, சி.கஜேந்திரன்

சிறந்த மாணவி


என் அக்கா கிழக்கரையில் பணியாற்றுகிறார். அவர் பணியாற்றும் பள்ளியில் மூன்றாம் வகுப்புப் படிக்கும் சிறுமி ஒருத்தி மதிய உணவு இடை வேளை சமயத்தில் பாடம் எழுதிக் கொண்டிருந்தாள். அப்பொழுது ஒரு வகுப்பிற்கும் இன்னொரு வகுப்பிற்கும் இடையில் உள்ள மரத்தடுப்பை, இரு மாணவர்கள் சண்டையில் தள்ளி விட்டனர். அது விழுந்து, மாணவியின் முதுகுத் தண்டுக்கு மேல் இரண்டு அங்குல அளவு வீங்கி விட்டது! சிறுமி உடனே மயக்க மடைந்து விட்டாள். தலைமை ஆசிரியரும், உதவித் தலைமை ஆசிரியரும் அவளை டாக்டரிடம் தூக்கிச் சென்று ஊசி, மருந்து கொடுத்தனர். இரண்டு மணி நேரம் கழித்துக் கண் விழித்த சிறுமி தலைமை ஆசிரியரின் கைகளைப் பிடித்துக் கொண்டு, "சார் என் மேல் மர ஸ்கிரீனைத் தள்ளிவிட்ட பையனை அடிக்காதீர்கள். மன்னித்து



விடுங்கள்" என்று கேட்டுக் கொண்டாள். தன்னைக் காயப்படுத்திய சிறுவனைத் தண்டிக்க நினைக்காது மன்னித்த அவளுடைய பரந்த அன்பு மனதை வியந்து இந்த ஆண்டு பள்ளியின் சிறந்த மாணவியாக அவளே தேர்ந்தெடுக்கப்பட்டாள்.
பரமக்குடி., மு.முஹம்மது ஷரா.

உண்மையான...!

அன்று, எங்கள் கணித ஆசிரியர் "இண்டெக்ரல் கேல்குலஸ்" எனும் கடினமான பகுதியைத் தெளிவாகப் புரியும்படி நடத்திக் கொண்டிருந்தார். எத்தனை தெளிவாக நடத்தினாலும் அதன் கடினத்



தன்மை புரியாமலேயே இருந்தது. எல்லோரும் விழித்தபடி இருந்தோம். அதைக் கண்ட ஆசிரியர் எங்களை உற்சாகப் படுத்த, "ஏன் முழிக்கிறீர்கள்? இந்தக் கணக்கெல்லாம் மிகச் சுலபமானவை. ஆதியில் காட்டுமிராண்டிகள்கூட இந்தக் கணக்குகளை போட்டு வந்திருக்கிறார்களாம்! எனக் கூறிவிட்டுத் தொடர்ந்தார். இருப்பினும் அதே "திருதிரு" நிலைதான் எங்களுக்கு!

ஆசிரியர் எங்களைப் பார்த்து, "புரிந்ததா?" எனக் கேட்டபோது அனைவரும் அமைதியாயிருந்தோம். பதில் கூறவில்லை. புரிந்திருந்தால்தானே கூற?


ஆனால் ஒரு மாணவன் மட்டும் எழுந்து, "சார் புரியற மாதிரி இருக்கிறது." என்றான்.

ஆசிரியர் அவனைப் பாராட்டும் விதத்தில் "அப்பாடா, இவன்தான் உண்மையான... எனக் கூறவந்தபோது ஒரு குறும்பு மாணவன் எழுந்து குறுக்கிட்டு "உண்மையான காட்டுமிராண்டி." என்றான்!

காட்பாடி, ஜி.அரவிந்த்

வெப்பமானி

நான் ஒன்பதாம் வகுப்பில் படித்துக் கொண்டிருக்கிறேன். தற்போது இடைத் தேர்வு நடைபெற்று முடிந்தன. ஆசிரியர் கடுமையான கோபத்தில் இருந்தார். காரணம், நிறைய மாணவர்கள் மதிப் பெண் குறைவாக வாங்கியிருந்தனர். விடைத்தாள்கள் தரப்பட்டன. ஒரு மாணவன் தன்னுடைய விடைத்தாளில் ஒரு பக்கம் மட்டும் திருத்தப்படவில்லை என்று கூறினான். ஆசிரியர் விடைத்தாளை வாங்கிப் பார்த்தார். அதற்கான வினா "மருத்துவ வெப்ப நிலைமானி பற்றி விவரி?" என்பதாகும். அதற்கு அந்த மாணவன், "உனக்குக் காய்ச்சல் வரும் போது டாக்டரிடம் சென்றால்



அவர் உன் வாயில் குச்சிபோல் பளபளப்பாக ஒன்றை வைப்பார். பிறகு எடுத்து விடுவார். இதுவே மருத்துவ வெப்பநிலைமானியாகும்" என்று பதில் எழுதியிருந்தான். திருத்தி மதிப்பெண் தராமல் விட்டிருந்தது இந்த விடைக்குத்தான்! ஆசிரியர் விடைத்தாளை வாங்கி "மைனஸ் 2" என்று எழுதி மதிப்பெண்ணைக் குறைத்தார்!

இராசிபுரம், ச.செல்வராஜ்.

அப்படிச் சொல்லுங்க!

நாங்கள் ஊருக்குப் புதிதாய்க் குடிவந்திருந்தோம். ஆனால் குடிவந்த அடுத்த நாளே நாங்கள் சென்னை செல்ல நேர்ந்தது. எனவே புதிதாகக் குடிவந்த எங்களுக்குப் புகை வண்டிநிலையம் எங்குள்ளது என்பது தெரியவில்லை. பேருந்தில் ஏறி இரயில்வே நிலைய ஸ்டாப் பிங்கில் இறங்கினோம். ஆனால், அங்கிருந்தும் சிறிது தூரம் செல்ல வேண்டியிருந்தது. வழிதெரியாததால், வழியில் வந்த ஒரு மூதாட்டியிடம், "புகைவண்டி நிலையம் எங்குள்ளது?" என்று என் தந்தையார் கேட்டார். என் தந்தை எப்பொழுதும் தமிழில் பேசுபவர். அவர் கேட்டது என்னவென்று தெரியாமல் விழித்தார் அந்த மூதாட்டி. "அதாங்க ரயில்வே ஸ்டேஷன்" என்றேன் நான். உடனே மூதாட்டி "அப்படிச் சொல்லுங்கய்யா தமிழ்லே" என்றாரே பார்க்கலாம்!

மூலப்பாளையம், சி.சுரேஷ்.


கதை
அமைப்பு : ரே
ஓவியம் : சசி
சிங்கப்பூர் சட்டை
அம்மா... ரவி எங்கே போனான்? படிக்கலே? அடுத்த வாரம் தேர்வு இருக்கே?
ரவி இனி பள்ளிக்குப் போக மாட்டான் சத்தி. படிப்பை நிறுத்திட்டேன்...
முதல் ரேங்க் மாணவனாச்சே! ஏன் நிறுத்திட்டீங் கம்மா?
குடும்பச் சுமை எல்லாம் உன் தலையிலதானே விழுந்திருக்கு? அவனும் சம்பாதிச்சா கொஞ்சமாவது சிரமம் குறையுமல்லவா? அதான்...
பத்தா வதோட என் படிப்பு தான் நின்னுது. ரவிக்கு என்ன? உங்களை யெல்லாம் பட்டினியா போடறேன்? ஏம்மா அவன் படிப்பை நிறுத்தினே?
எங்கேம்மா வேலைக்குப் போறான்?
தங்கப்பா மளிகைக் கடையில்...


அடுத்த கால்மணியில் –
என்ன ரவி இந்த நேரத்துல? சாமான் ஏதாவது வேணுமா?
வேண்டாங்க... மன்னியுங்க ஐயா... என்னைக் கேட்காம ரவியை அம்மா வேலைக்கு அனுப்பிச்சுட்டாங்க.
நானே கேட்டேன். சுமை குறையுதுன்னால் தடுக்கவா போறான்னு அம்மாதான் சொன்னாங்க.
இவனாவது படிக்கட்டுங்க.
கூட்டிக்கிட்டுப் போ தம்பி. உன் மாதிரி அண்ணன் கிடைக்க ரவி புண்ணியம் பண்ணி இருக்கணும்.
வழியில் –
என்னிடம் கேட்கணும்னு உனக்குத் தோணலையா?
உன் சிரமம் குறையும்னு அம்மா சொன்னதும் தான் நீ கூட படிப்பை நிறுத் திட்டே?
அப்பா கடனை எல்லாம் அடைச்சுட்டா கவலை இல்லை. அப்புறம் தபால் மூலம் படிப்பைத் தொடர்வேன்.
விடுமுறை நாட்களிலாவது உனக்கு சலவை பண்ணுவதில் உதவ அனுமதிப்பியா?
கண்டிப்பா. அந்த அளவுக்கு நீ நல்லா படிச்சேன்னா...!


வணக்கம் முதலாளி
கடைதிறந்து அரை மணியாச்சு. பைசா வியாபாரம் நடக்கலே! நீ இன்னும் கடையே போடலே... அதுக்குள்ள தேடிக்கிட்டு அயர்ன் பண்ணத் துணியைக் குவிச்சிருக்காங்க பாரு! உன் பாடு தேவலை சத்தி...
எல்லாம் நீங்க காட்டின வழிதானே முதலாளி? அப்பா கடனாளியாகி திடீர்னு இறந்ததும், கண்ணீரைத் துடைச்சு கை காட்டி விட்டது நீங்கதானே?
புகழாதேடா... உன் நாணயத்துக்கு எதுவுமே ஈடாகாது... துணி குவிஞ்சு கிடக்கு. சீக்கிரமா கரியை மூட்டி வேலையை ஆரம்பி...
ஒரு நாள் இரவு –
மணி பத்தடிச்சுப் போச்சு...! இன்னுமா அயர்ன் பண்ணறே! நான் கூடக் கடையை மூடப் போறேன்.
துணி இன்னும் இருக்கு முதலாளி. அரைமணியாகும்..."
அப்போ என்ன பண்றே?
நீங்க கிளம்புங்க. இதையெல்லாம் முடிச்சிட்டுப் போய்க்கிறேன்
முதலாளி...?
என்னடா... என்ன என்னமோ தயங்கறே?
அப்பா பட்ட கடன்ல இன்னும் ஐநூறு பாக்கியிருக்கு இல்லே...?
ஆமாம்.


மீதி ஐநூறு இதோ இருக்கு முதலாளி. வாங்கிக்கிங்க...
பொங்கல் வரது...! செலவு இல்லையா உனக்கு?
செலவுக்குப் பஞ்சமா? பொங்கலுக்கு பத்து நாள் இருக்கே? கடன் அடையும் வரை உடம்புக்கு எதுவும் வந்திடக் கூடாதுன்னு நான் வேண்டிக்கிட்டது எனக்குத்தானே தெரியும்? அப்பா பட்ட கடன் அடைஞ்சு போச்சு! இப்போ எத்தனை நிம்மதியா இருக்கு தெரியுமா?
உங்கப்பா உனக்குப் பொருத்தமாத்தான் பெயர் வைச்சிருக்கார்!
கடை வாசல்ல வாடகையே வாங்காம சலவைக் கடை போட அனுமதிச்சிருக்கீங்களே! இதை விடவா?
உனக்கு?
இப்போ அவசியமில்லை முதலாளி. தம்பிதான் பள்ளிக்கூடம் போறவன். அவசியம் தேவை.
ஒரு வாரம் பொறுத்து –
என்ன சத்தி சீக்கிரமே கடையைக் கட்டறே?
தம்பிக்கு பொங்கலுக்கு சட்டை வேட்டி எடுக்கப் போறேன் முதலாளி.
சட்டைப் பையிலிருந்து எடுத்து –
முதலாளி, முன்னூறு ரூபாய் இருக்கு. வைச்சு வையுங்க...
உங்கப்பா கடன்தான் தீர்ந்து போச்சே!


இது தம்பிக்கு சைக்கிள் வாங்கித் தர. பாவம், வெய்யில்ல நடந்து போறதைப் பார்த்தா மனதை என்னவோ பண்ணுது. ஆயிரம் ரூபாய் ஆகுமாம். சேர்த்து வைக்கத்தான் தரேன்.
பத்து நாட்களுக்குப் பிறகு –
நானூறு ரூபாய் இருக்கு. இப்பல்லாம் தம்பியும் சனி ஞாயிறுல வந்து உதவி பண்றான்.
அடுத்த மாதம் –
இதோட 800 ரூபாய் ஆச்சு. ஆமாம் சத்தி...! அதென்ன பிளாஸ்டிக் பையில சட்டைவைச்சிருக்கே? எடு...
பாருங்க முதலாளி...
சிங்கப்பூர் சட்டை முதலாளி. கழுத்து உள் பக்கம் GUCCIன்னு போட்டிருக்கே... பாருங்க!
அழகான சட்டை! கனமே இல்லையே! எத்தனை மென்மையா இருக்கு!
அட! ஆமா!


அது பிரபல சட்டை தயாரிக்கும் அயல்நாட்டுக் கம்பெனியாம்; உலகப் புகழ்பெற்றதாம். சிங்கப்பூரிலேயே இதன் விலை முன்னூறு டாலராம்!
ஏ அப்பா! அப்படின்னா தொளாயிரம் ரூபாயா இது! ஆமாம்... இதெல்லாம் உனக்கு எப்படித் தெரியும்?
பர்மா பஜாரில கடை வைச்சிருக்கும் நண்பனோட அப்பாதான் இங்கே வந்தப்ப சொன்னார். முதல்ல மகிமை தெரியலை. சலவை பண்ணி சாதாரணமா தூக்கி வைச்சிட்டேன்.
மகிமை தெரிஞ்சதுக்குப் பிறகுதான் தூசு படாம இருக்க பிளாஸ்டிக் கண்ணாடிப் பைல போட்டு வைச்சேன்.
இதை யாரு தந்திருக்காங்க?
தெரியலே! சில சமயம் ஆபீஸ் கும்பல், கல்லூரி கும்பல், பள்ளி கும்பல் நெரிக்கும் எட்டு மணி நெருக்கடி நேரத்தில் இப்படியாராவது தந்து விட்டுப் போவாங்க. அப்புறமா வந்து வாங்கிப் பாங்க. அந்த மாதிரி வந்த சட்டைதான் இது.
கொடுத்தவங்க திருப்பி வாங்கிக்காமல் போனா என்ன பண்ணுவே?
அப்படியும் ஆகும். மகன் சட்டையை அப்பா தந்திட்டு அவசரமா ஊருக்குப் போயிடுவாரு. யார்கிட்ட கொடுத்தாங்கன்னு தெரியாம பையன் திண்டாடுவான். அந்த மாதிரி ஒரு ஜீன்ஸ் இரண்டு மாதம் கழிச்சு தந்திருக்கேன்...
இது வந்து எத்தனை நாளாச்சு?
ஒரு வாரம்.
தினமும் மூடும் போது –
இன்னிக்கும் சிங்கப்பூர் சட்டைக்கு ஆள் வரலையா?
இல்லையே முதலாளி!





ஒரு மாதம் ஓடியது –
வாங்க சின்ன முதலாளி. எப்போ ஊரிலேந்து வந்தீங்க?
நேற்று சத்தி. அப்பா போன பிறகு நீதான் குடும்பத்தை கவனிக்கிறயாமே!
கடமையைத்தானே செய்யறேன்?
உன்னை உதாரணம் காட்டித்தான் அப்பா என்னைத் திட்டுவார்.
நல்ல வேடிக்கை! ஆமாம் அப்பா வரலீங்களா இன்னிக்கி?
ஏதோ திருமணத்திற்குப் போயிருக்கார். அதான் கடை திறக்க நானே வந்தேன்...
இரவு கடை மூடும் நேரத்தில் –
அது என்ன சத்தி, பிளாஸ்டிக் கவர்ல ஒரு சட்டையைப் போட்டு வைச்சிருக்கே! எடு பார்க்கலாம்!
சத்தி தந்ததும் –
அட! சிங்கப்பூர் கூசி சட்டை! ஏகப்பட்ட விலையாச்சே! இதை அயர்ன் பண்ண யார் கொடுத்திருக்காங்க!
சட்டையைப் பற்றிக் கூறினான்.
ஆக... சொந்தக்காரங்க யாருன்னு தெரியாத சட்டையா இது!



மறுநாள் –
வணக்கம் பெரிய, சின்ன முதலாளிங்களே!
வணக்கம் சத்தி. இந்தா சாக்லேட். எனக்கு இன்று பிறந்த நாள்.
மனமார்ந்த வாழ்த்துகள் சின்ன முதலாளி... நான் ஏழை... என்னால் என்ன பரிசு தர முடியும்?
மனசு வைச்சா நான் விரும்பும் பரிசு ஒன்றை உன்னால் தர முடியும் சத்தி!
அப்படியா! அதை உடனே சொல்லுங்க! தரேன்?
கண்டிப்பாத் தரேன்னு வாக்குறுதி கொடுத்தாத்தான் சொல்லுவேன்?
சின்ன முதலாளி... நீங்க கேட்பது தரக்கூடியதாக; எனக்குச் சொந்தமானதாக இருந்தால் கண்டிப்பாத் தருகிறேன். இது உறுதி. இனிமே சொல்லுங்க?
நீ பெரிய ஆளுப்பா! சிங்கப்பூர் சட்டையைத்தான் கேட்கிறேன்.
அது எனக்கு உரிமை இல்லீங்களே! உரியவர் வந்து கேட்டால் தர வேண்டிய பொருள்தானே? அதை எப்படி உங்களுக்குத் தர முடியும்?
நான்தான் தந்தேன்னு யாராவது வந்து கேட்டிருந்தால் கூட நீ ஏமாந்து தந்திருக்க வேண்டியவன் தானே?



யாருது என்பது உறுதியாத் தெரியாட்டாலும், யாருடையது இல்லை என்பது நிச்சயமாகத் தெரியுதே முதலாளி?
மூன்று மாசமாச்சு. இனிமே யார் வரப் போறாங்க? அப்படியே வந்து கேட்டால், வேறு யாருக்கோ கொடுத்துட்டேன்னு சொல்லு. நானே சாட்சி சொல்றேன், சட்டப்படி உன்னை யாரும் அசைக்க முடியாது.
இதுமாதிரி பத்து சட்டை வாங்கி நீங்க நண்பர்களுக்குப் பரிசளிக்கலாம். இது யாருதோ! என்னை மோசக்காரனாக்காதீங்க முதலாளி.
இனாமா வேண்டாம். முன்னூறு ரூபாய் தரேன். தம்பிக்கு சைக்கிள் வாங்கித் தரலாம்?
என்னை மன்னிச்சிடுங்க.
என்னைப் பகைச்சுக்கிட்டா அழிந்து போயிடுவே... வேண்டாம்!
நேர்மை, சோதனைக்கு ஆளாவது வரலாறுதானுங்களே? அதிலும் நான் ஏழை. என் மனசாட்சிக்கு பதில் சொன்னால் போதும்.
என் பகை பொல்லாதது.



அடுத்த நாள் சத்தியின் இடத்தில்
ஒரு பூக்கடை!
இதுக்கு மாச வாடகை
ஐநூறு. அட்வான்ஸ் ஐந்தாயிரம்
தந்திருக்கேன்.
இதற்குள் –
டேய்... உன்னோட ஓட்டை
மேசையும், இஸ்திரிப் பெட்டியும் கிடங்
குல இருக்கு. எடுத்துட்டு திரும்பிப்
பார்க்காமல் நடையைக் கட்டு.
அரிச்சந்திரங்க
சகவாசமே நமக்கு
வேண்டாம்பா!
சத்தி மனம் தளரவில்லை.
நடமாடும் இஸ்திரி வண்டியைத் தயார்
பண்ணினான்.


அடுத்த நாள் பழைய இடத்திற்கு எதிரே தெருமுனையில் சலவை வண்டி!
எதுக்குடா வந்தே?
நடமாடும் இஸ்திரி வண்டி வைச்சிருக்கேன். முதல் துணி என்னை வாழ வைத்த உங்களுடையதாக இருக்கட் டும்னுதான் கேட்க வந்தேன்...?
எத்தனை திமிர்டா உனக்கு?
இல்லே முதலாளி. வெறுத்தாலும் விரட்டினாலும் என்னை வாழ வைத்த தெய் வத்திடம் எனக்குள்ள நன்றி விசுவாசம் இது.
நீயாகப் போறியா? இல்லே... கழுத்தைப் புடிச் சுத் தள்ளட்டுமா?
உங்க கிழிஞ்ச பனியன் இருக்கு. அதையே முதல் சலவை பண்ணிக்கிறேன்.
வாடிக்கையாளர் தேடி வந்தனர். சிங்கப்பூர் சட்டை நிலைத்து இருந்தது!
இரண்டு நாட்களுக்குப் பிறகு –
சைக்கிள் பணத்தைத் தரீங்களா? வண்டி செஞ்சதில் கடன்?
எங்கடா கொடுத்தே? போலீசுல சொல்லி பிழைக்க முடியாம செஞ்சிடுவேன். ஓடிப் போ...
பொல்லாத சிங்கப்பூர் சட் டையே...! உன்னால இத்தனை சோதனையா! நீ எப்பத்தான் போகப் போறியோ?


ஒரு வாரம் ஓடியது. அமெரிக்க இளைஞர் ஒருவர் இஸ்திரி வண்டிக்கு அருகே வந்து நின்றார்.
என்ன சார் பார்க்கறீங்க? ஏதாவது அயர்ன் பண்ணணுமா?
இந்தச் சட்டை நல்லாயிருக்கே! பார்க்கலாமா?
என்ன புது சோதனையோ? பிள்ளையாரே நீயே கதி!
தாராளமா பாருங்க சார்.
பார்த்துவிட்டு –
சிங்கப்பூர் சட்டை! புத்தம் புதுசு! அயர்ன்னுக்கு வந்ததா?
ஆமாம். இரண்டு மாசமாச்சு! கொடுத்தது யாருன்னு தெரியலே!
அப்போ எனக்கு வித்துடு தம்பி?
ஓ! அதிகப் பணம் வேணுமா? சரி, ஐநூறு தரேன்?
அமெரிக்கர்கள் உயர்ந்த பண்புடையவங்க. நேர்மாறா இருக்கீங்களே!
ஐயோ! இது எனக்கு உரிமையானது இல்லைங்க. கொடுத்தவர் தேடி வருவார்னு உள்ளுணர்வு கூறுது. எத்தனை ஆசை காட்டினாலும் இதே பதில் தான். இது பிறர் பொருள்....
இது ஏட்டுக்கு சரி. நேர்மை உண்மையைப் போற்றலாம். வாழ்க்கைக்கு ஒத்து வராது. சோதனைகளுக்கு ஆளாக நேரும்.
நான் படாததா? ஆனா, நேர்மையா இருப்பதிலே எத்தனை மகிழ்ச்சி, பெருமை தெரியுமா?


தெருவென்றும் பாராது கட்டிக் கொண்டார்.
தம்பி...!
இந்தியா வந்து ஒரு வருடமாகிறது. மகான்களும், முனிவர்களும், தெய் வங்களும் அவதரித்த புண்ணிய பூமி என்று பழம் பெருமை பேசுகிறார்கள். இதை நம்ப வைக்கக் கூடியவராக ஓர் இந்தி யனையாவது சந்திக்க மாட் டோமா என்று ஏங்கினேன்.
சொல்லுங்கள் சார்!
அயல்நாட்டான் என்னிடம் கூட யாரும் உண்மையாக நடக்க வில்லை. போன வாரம் ரயிலில் பயணம் செய்த இளைஞன் அரிச்சந்திரனையும் காந்தியை யும் பற்றிப் புகழ்ந்து தள்ளினார். அவர் தந்த அல்வா அருமையாக இருந்தது. தமிழில் பெயர் எழுதப்பட்ட அல்வா டின் ஒன்றை, ஒன்றுக்குப் பத்து விலை சொல்லி என் தலையில் கட்டினார். அதோடு அது காலாவதியானது என்பதும் சென்னைக்கு வந்த பிறகு வயிற்றுப்போக்கு ஏற்பட்ட பிறகுதான் தெரிந்தது.
அடடா! அப்புறம்?
ஏமாற்ற வெறுப்பால் இந்தியர்கள் மோசக்காரர்கள். அரிச் சந்திரன், காந்திஜி எல்லாம் கட் டுக்கதையேன்னு எழுதிருக் கிறேன்...
ஐயையோ!
பாரதி வாழ்ந்த வீட்டைப் பார்க்க ஆட்டோவில் வந்தேன். சட்டையில் டீக்கறை பட்டதால் லாட்ஜில் தோய்த்து உலர்த்தி னேன். ஆட்டோவில் இருந்தபடி, டிரைவரை விட்டு சட்டையை உன்னிடம் தரச் சொன்னேன். பிறகு மறந்தே போனேன். மதுரைக்கு ரயிலில் போகும் போதுதான் நினைப்பு வந்தது.
சட்டை உங்களு டையது என்பதை எப் படி நம்புவது?
கடைசியில், எந்த மாதிரியான இந்தியனை சந்திக்க விரும்பினேனோ அதை உன் வடிவில் சந்தித்து விட் டேன். இந்தச் சட்டை என்னு டையதுதான்...!
அப்படியா!


வலது காலர்ல வி.எல். எழுத்து இருக்கும். என் பெயர் வில்சன். ஆமாம், அந்த மருந்துக் கடை வாசல்லதானே கடை போட்டிருந்தே?
சத்தி, சட்டையால் தான்பட்ட துன்பங்களை விளக்கியதும் –
சத்தியம். இங்கே உண்மையாகவே மகான்களும், புண்ணிய சீலர்களும் அவதரித்திருப் பார்கள் என்பதை இப்போ மனப்பூர்வமாக நம்பறேன். இந்தியர்களை குறைவாக எழுதியதை மாற்றி விடு கிறேன்.
உலகப் பிரபலங்களின் கையெழுத்து சேகரிப்பு நோட்டில் சத்தியின் கையெழுத்தை வாங்கிக் கொண்டார் வில்சன்.
ஆட்டோமேடிக் காமிராவை இயக்கி அவனுடன் புகைப்படம் எடுத் துக் கொண்டு விடைபெற்றார்.
வில்சன் போனதும் –
எல்லாம் கேட்டேன். பறிபோக இருந்த நாட் டின் கௌரவத்தையே காப்பாற்றிட்டே! நான்தான் அற்பத்தனமா நடந்துக்கிட்டேன். மன்னிச்சுடு சத்தி.


என்னையும் மன்னி சத்தி. அல்வா டப்பாவை வில்சனிடம் வித்த மோசடிக்காரன் நான்தான். என் போன்றவர்களின் எல்லா மொத்தக் குறைபாடுகளையும் சுட்டெரித்து சத்திய ஒளியை வில் சனுக்குக் காட்டி அவரை மாற்ற வைத்த பெருமை உன்னுடை யது தான் சத்தி.
சின்ன முதலாளி, வில்சன் அதிகத் தொலைவு போயிருக்க மாட்டார். நீங்கள் உடனே போய்...
மன்னிப்புக் கேட்க வேண்டும். அவ்வளவுதானே? இதோ கிளம்பிட்டேன்... சத்தி
பாலாஜி போனதும் –
சத்தி... இதென் னது! குப்புசாமி நடமாடும் இஸ்திரி வண்டின்னு பலகை மாட்டியிருக்கே!
உங்க பேர்தான் முதலாளி. வாழ வழிகாட்டிய தெய்வம் அல்லவா நீங்கள்? வேறு யார் பெயரை வைப்பேன்?
எல்லா வகையிலும் நீ உயர்ந்து விட்டாய்; நான்தான் தாழ்ந்து விட்டேன் சத்தி!




''சனியனே! வெளியிலே அலையாதேன்னு எத்தனை தடவை சொல்றது?''
''ஏன்? அவனை திட்டுறே?''
''வெளியே அலைஞ்சு அவன் எவ்வளவு கறுத்துட்டான் பாருங்க!''



''உங்க பையனுக்கு ரெண்டு நாளா தூக்கமில்லாம இருக்கிறான்னு சொன்னீங்களே. எந்த டாக்டர்கிட்ட காட்டினீங்க?''
''ஒரு டாக்டர்கிட்டேயும் காட்டலை. பள்ளிக்கூடத்து பாடத்தை எடுத்துப் படிக்கச் சொன்னேன். தூங்கிட்டான்!''

—ஆ. பென்னியமின் பாளை.



''தமிழ்ப் பரீட்சைதாண்டா எனக்குக் கொஞ்சம் தடுமாற்றம்.''
''அப்போ மற்றதெல்லாம்...?!''
''ரொம்பத் தடுமாற்றம்!''

— சீர்காழி வி. ரேவதி



''என்னை சின்னப் பையன்னு எங்க தாத்தா மதிக்க மாட்டேங்கறாரு!''
''சிறு துரும்பும் பல் குத்த உதவும்'' என்று உங்க தாத்தாகிட்டே சொல்ல வேண்டியதுதானே?''
''அவருக்குத்தான் பல்லே இல்லையே!''



''எதுக்கப்பா மாடு வாங்கிட்டு வந்திருக்கே!''
''நீ எங்கேப்பா பாஸாகப் போறே? அதான் மேய்க்க வசதியா இருக்கட்டுமேன்னு ரெடியா வாங்கிட்டு வந்திருக்கேன்!''


— நெற்குப்பை கி. மனோகரன்

சிரிப்...


கோடை விடுமுறைப் போட்டி - 11


விளக்கம் அடுத்த பக்கங்களில் படங்களாகத் தரப்பட்டுள்ளது. பூர்த்தி செய்து, இந்தப் பக்கத்தை மட்டும் கிழித்து உங்கள் பெயர் முகவரியையும் எழுதி, முகவரிக் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். அயல் நாட்டு வாசகர்கள் தங்கள் இந்தியத் தொடர்பு முகவரியைத் தரவேண்டும். ஒன்றுக்கு மேற்பட்டவர் சரியான விடை எழுதினால் குலுக்கல் முறையில் முடிவு செய்யப்படும். ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

		23		24				1 25		26			
	2						3 27					4 28	
5					29	6			30				
	31		32		7			8 33			9 34		
10													
					11 35				12				
	13 36						14		37			15 38	
				16									
			39					40		41			
		17		42			18						
19	43											20 44	
			21										
							22						




ஆசிரியர்,
கோகுலம்,
46, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 97.
































































**இடமிருந்து வலம்
குறிப்புகள்**






























































மேலிருந்து கீழ்
குறிப்புகள்





கோடை விடுமுறை அடிக்கடி வராதா?

◆ 'திக் திக் திக்' கதைகள், உண்மையாகவே ''திக்திக்''கென்றுதான் உள்ளன. ஏன் சார், திக் திக் கதையையே ஒரு தொடராக வெளியிட்டால் என்ன? - மன்னை க. ஏகாம்பரம், திருவாடானை வா. தரும புத்ரன், காரை முருகு. சுப்ரமணி, ஏகம்பம் வே., மணிமாறன், ஈரோடு எஸ். சின்னபாலன், பழனி கா. பெரியநாயகி, திருமங்கலம் து. தம்பித்துரை, சத்தியமங்கலம் நா. சிக்கந்தர், கோவில்பட்டி கா. பட்டப்பா, பெரம்பூர் வா. திருமணி, அருப்புக் கோட்டை கு. செல்லப்பன்.

◆ ''தூங்காதே'' காலத்திற்கு ஏற்ற அறிவுரை. சிறுவர்க்கு மட்டுமல்ல; பெரியவர்களுக்கும்தான்! வீட்டில் எல்லோரும் ஒருவருக்கொருவர் ''இதைப்படித் தீர்களா!'' எனக் கேட்டுக் கொண்டோம். நல்ல பணி! - புதுவை எஸ். மாசிலாமணி, திருச்சி வா. துரைமுருகன், வண்டிப்பாளையம் கு. கருணாகரன், சித்தன்னவாசல் கா. சுந்தரநாயனார், ராணிப்பேட்டை வா. ஷகிலா, முதுகளத்தூர் ஊ. ராமசாமி, கிழக்கரை தா. அல்லா பிச்சை, பாளை டேவிட் சுந்தர்.

◆ ''கரண்டிவாயனுக்குக் கொண்டை உண்டா?'' இதுவரை நாங்கள் அறியாத பல தகவல்களை அளித்தது. இப்பொழுதெல்லாம் எந்தப் பறவை அல்லது மிருகத்தைப் பார்த்தாலும் அதன் தோற்றம், நடை, எல்லாவற்றையும் கவனிக்க ஆரம்பித்து விட்டோம். இந்தப் பெருமை ரேவதி அவர்களுக்கே! - விஜயமங்கலம் வா. மார்க்கண்டன், சாத்தூர் எஸ். தீபலட்சுமி, மதுராந்தகம் கி. முத்துவேலன், விருதுநகர் சோ. மாணிக்கம், மாயூரம் தா. அப்துல்லா, விருத்தாசலம் வி. பிரபாகர், மேலப்பாதி எஸ். நாகராஜன், விபீஷணபுரம் ஸ்ரீவித்யா காளிதாஸ், கபிஸ்தலம் ஆர். ரகுகுல ரகுவர்மன்.

◆ ''அக்காவாம் அக்கா!'' வீட்டுக்கு வீடு நடக்கும் கதை! எத்தனை அழகாக மனதைத் தொடும்படி முடிக்கப்பட்டிருக்கிறது! - திருவரங்கம் எல். ஆனந்தவல்லி, மருதுக்கோட்டை கி. மருதாசலம், திண்டிவனம் தூ. பன்னீர் புஷ்பம், புதுக்கோட்டை வா. மாணிக்கம், தங்கனிக்கோட்டை எ. அடைக்கலசாமி, செஞ்சி எஸ். ரெசாக், தரமணி வா. சுப்புரத்னம், புதுடெல்லி சுஜாதா, சின்னசேலம் வி. பிரசன்னகுமார், மேலப்பாதி என். ராஜி, செம்பனார் கோயில் ஜெ. ஜம்மு, கபிஸ்தலம் ஆர். ரகுகுல ரகுவர்மன்.

◆ பரிசுக்கதை ''முட்டுக்கட்டை தடையா?'' மிக நன்றாக உள்ளது. பரிசுக் கதைகள் ஒன்றை ஒன்று நன்றாகத் தூக்கிச் சாப்பிட்டு மனதைக் கொள்ளை கொள்கின்றன! அருமையான தேர்ந்தெடுப்பு! - கங்குவார்சத்திரம் தா. மனோஜ்குமார், பரமக்குடி எஸ். சவரிமுத்து, முல்லைக்குடி நா. அந்தோணிசாமி, அம்பத்தூர் கி. தமிழ்ச்செல்வி, சாத்தூர் வா. முத்துவேலன், முகந்தலூர் கே. சுந்தரராஜன், மேலப்பாதி என். ராஜி, கபிஸ்தலம் ஆர். சிவராமன்.

◆ கோடை விடுமுறை அடிக்கடி வராதா என்று ஏங்குகிறோம் சார்! புரியலையா? கோடை விடுமுறைப் போட்டியை அப்பதானே அடிக்கடி வைப்பீங்க? - உதகை எஸ். மனோகரன், புதுவை கி. மதுரமணி, கரூர் வா. சித்ரா, பழனி கா. அற்புதராஜ், குடந்தை ஆர்.எஸ். நாதன், விருத்தாசலம் வி. பிரபாகர், சின்னசேலம் ஆர். பிரசன்னகுமார்.

◆ கரண்டிவாயனுக்குக் கொண்டை உண்டா?வில் கைகடிகாரம் கட்டியிருக்கும் பையன் என்று வருகிறது. ஆனால் படத்தில் இரண்டுபேர் கையிலும் கைகடிகாரம் இல்லையே. - இரணியல் சிவபெருமாள், சத்யப்பிரகாஷ், மற்றும் பலர்.


(கவனக்குறைவுதான்! மன்னிக்கவும்! - ஆர்.)

◆ 'கேட்கட்டுமா டாக்டர்' பகுதியில் கண்புரை நோய் பற்றிய கேள்வி - பதிலில் 'கண்புரை நோய்'க்கு Contract என்று ஆங்கில வார்த்தை அச்சாகியுள்ளது. அது அச்சுப்பிழை! Cataract என்பதே அதற்குச் சரியான மருத்துவச் சொல். - ராஜபாளையம் டாக்டர் கு. கணேசன்.

◆ எங்கள் ஊரில் நடந்தது பகுதியில் **கால்குலேட்டர் அளவு** படைப்பின் கீழ், எனது ஊரான குருசாமிபாளையத்தைப் போடாமல் இராசிபுரம் என்று போட்டுள்ளீர்களே!
குருசாமிபாளையம் எஸ். செல்வராஜ்.

(இப்பொழுது சரிதானே! - ஆர்.)

உதயன் எங்கே?



10. முளைவிட்ட நச்சு விதை

தன் பெட்டிக்குள் பத்திரமாக வைத்திருந்த சாமான்கள் அறையின் மாற்றுச்சாவி எப்படிக் காணாமல் போயிற்று என்பது காளிமுத்துவுக்குப் புரியவில்லை. ஒருவேளை நாமே எங்காவது தொலைத்து விட்டோமோ என்று நினைத்தான். ஆனால், சாவியைப் பெட்டியில் பத்திரமாக வைத்தது அவனுக்கு மிக உறுதியாக நினைவுக்கு வந்தது.

சில நாட்களாக வார்டனின் போக்கில் ஏற்பட்டிருந்த மாறுதல் காளிமுத்துவுக்குக் கலக்கத்தைக் கொடுத்து வந்தது. தன்னிடம் தானிய மூட்டைகளை அடிக்கடி இரகசியமாக எடுத்துச் சென்று கடைக்குப் போட்டுவிட்டு வரும்படி தூண்டும் வார்டன், இப்போது சில நாட்களாக அதைப் பற்றி மூச்சு விடுவதில்லை! ஏன், தன்னிடம் பேசுவதையே கூட அவர் தவிர்க்க முயற்சிப்பதாக அவனுக்குத் தோன்றியது! அத்தோடு மட்டுமல்லாமல் தங்களுடைய பரம வைரியாகிய மனோகரனை அவர் அடிக்கடி தனியாக அழைத்துப் பேசிக் கொண்டிருப்பதன் காரணமும் அவனுக்கு விளங்கவே இல்லை. மனத்தில் ஒரே குழப்பம்; கலக்கம்!

எல்லாவற்றிற்கும் மேலாகத் தன் ஆடம்பரச் செலவுகளுக்குப் பணமில்லாமல் காளிமுத்து மிகவும் அவதிப்பட்டான். இன்று எப்படியும் வார்டனைச் சந்தித்துத் தெளிவாகக் கேட்டு விட வேண்டும் என்ற முடிவுக்கு வந்தவன், காலையில் சைக்கிளில் வழக்கமாக அவர் அலுவலகம் செல்லும் வழியில் காத்திருந்தான்.

வார்டன் சைக்கிளில் வேகமாக வருவது தெரிந்தது. காளிமுத்து அவர் பார்வையில் படும்படி சாலையின் ஓரமாக நின்று கொண்டான். அவனைப் பார்த்ததும் சைக்கிளில் இருந்து இறங்கிய வார்டன் வைரவநாதன், "என்ன காளிமுத்து இங்க நின்னுக்கிட்டிருக்கே...? பள்ளிக்குப் போகலே?" என்று கேட்டார்.

அவர் கேட்டதற்கு உரியதாக எந்தப் பதிலையும் சொல்லாமல் மௌனமாக நின்றவன், "ஒண்ணுமில்ல. செலவுக்கு ஒரு ஐம்பது ரூபா வேணும்" என்றான்.

வார்டனின் நெற்றி சுருங்கியது. முகத்தைக் கடுமையாக வைத்துக் கொண்டு, "அப்படி உனக்கு என்ன செலவு?" என்று கேட்டார்.

காளிமுத்து, கலைந்து தன் நெற்றியில் விழுந்து கிடந்த தலைமயிரை அலட்சியமாகக் கைவிரல்களால் கோதி விட்டுக் கொண்டான். அவர் முகத்தை நேருக்கு நேர் பார்த்தவண்ணம், "புதிய சினேகி

வி. ர. வசந்தன்


தங்க கிடைச்ச உடனே சாருக்கு பழசெல்லாம் மறந்து போயிருச்சு போல இருக்கு...! எத்தினியோ இராத்திரி மூட்டைகளைத் தூக்கிக்கிட்டு காவல்காரனுக்கு டிமிக்கிக் கொடுத்து வேலி ஏறிக் குதித்து மைல் கணக்கா நடந்து, கிடைக்கிற பணத்தையெல்லாம் எண்ணிக் கூடப் பார்க்காம உங்ககிட்ட கொண்டுவந்து கொடுத்துட்டு, செலவுக்கு ஐம்பதோ, நூறோ வேணும்னு கைகட்டி நின்ன அதே காளிமுத்துதான் எப்பவும் போல இப்பக் கேட்கறேன்... ஆனா நீங்க தான், என்ன செலவுன்னு எப்பவும் கேட்காத புதிய கேள்வியா கேட்கறீங்க!" என்றான்.

நெஞ்சில் குத்துவது போல் விழுந்த சொல் அம்புகளால் ஒரு




கணம் நிலைகுலைந்து போன வைரவ நாதன், தன்னைச் சமாளித்துக் கொண்டு இரக்கத்துடன் அவனைப் பார்த்தார்.

"காளிமுத்து, நீ கேட்பது உண்மை தாம்பா. நான் கேட்கறது புதிய கேள்வி தான்... ஏன்னா, நான் இப்ப ஒரு புதிய மனுஷன் ஆயிட்டேன். இயல்பான அன்பு மனசுல நிறைஞ்சிருக்கிற போதுதான் உண்மையாகத் தொண்டு செய்யணும் என்கிற துடிப்பு வரும். தொண்டு செய்கிற நினைப்பு இருந்தா அடுத்தவங்க பொருளை அபகரிச்சு ஆடம்பர வாழ்க்கை வாழணும்னு நிச்சயமா தோணாது. அம்மாவோட பெருந்தன்மை என்னை மனுஷனாக்கிடுச்சு. இனிமேலும் அந்தப் பழைய கேவலமான காரியத்தை நான் நினைச்சுக் கூடப் பார்க்கப் போறதில்லை... நான் உண்மையிலேயே மன்னிப்புக் கேட்க வேண்டியது உங்கிட்டத்தான்... என்னுடைய தவறான நடத்தைக்கு, உன்னை நான் பலியாக்கிட்டேன்... இனி மேலாவது, நீ திருந்தி நல்ல வழியில நடக்கணும்னு நான் மனதார விரும்பறேன்; ஏன் ஏங்கறேன். அதைப் பார்த்தாத் தான் என் மனசு நிம்மதியாகும்" என்றவர், மறு பேச்சுக்குக் காத்திராமல் சைக்கிளில் ஏறி விரைந்தார்.



காளிமுத்து திகைத்து நின்றான். அதிக ஏமாற்றத்துடனும் வார்டனின் திடீர் மாற்றத்துக்கு காரணம் விளங்காத தவிப்புடனும் திரும்ப வந்தான். அந்த வெள்ளைக்காரக் கிழவி எப்படியோ வார்டனை மிரட்டிப் பணிய வைத்து விட்டாள் என்று நினைத்து மனதுக்குள் பொருமினான். இப்போது அவனுக்குத் தன் பெட்டிக்குள்ளிருந்த மாற்றுச் சாவி எப்படிக் காணாமற் போயிருக்கும் என்பதற்கு விடை கிடைத்து விட்டது. வார்டன்தான் அவன் இல்லாத நேரத்தில் பெட்டியிலிருந்து எடுத்துச் சென்றிருக்க வேண்டும்!

அவன் மனத்தில் எல்லையில்லாத கோபமும், ஏமாற்றமும் தலைதூக்கியது. இந்தக் காளிமுத்துவை எவ்வளவு முட்டாள் என்று நினைத்து விட்டார் இந்த வார்டன்! அவர், திருடு என்றால் திருட வேண்டும்; திருந்து என்றால் திருந்த வேண்டும். அவருக்குத் தேவைப்படும் போது நான் அயோக்கியனாக இருக்க வேண்டுமாம்! இல்லையென்றால் உத்தமனாக மாற வேண்டுமாம்! எப்



படி எல்லாம் உபதேசம்...? இப்போது எனக்குப் பணம் தேவை. அதற்கு என்ன செய்வது?

சற்று நேரம் சிந்தித்தவனின் மனத்தில் பளிச்சென்று மின்னலடித்தது. ஆகா, அன்று முன் ஜாக்கிரதையாகச் செய்த அந்தக் காரியம் இப்போது, எவ்வளவு உதவிகரமாக இருக்கப் போகிறது?

காளிமுத்து தன் அறைக்கு ஓடோடிச் சென்று அவசர அவசரமாகத் தன் பெட்டியைத் திறந்து துணிமணிகளை வாரி இறைத்தான். பரபரவென்று பெட்டிக்குள் எதையோ தேடினான்.

அதோ, அவன் தேடிய பொருள் கிடைத்து விட்டது! பெட்டியின் மூலையில் கிடந்த அந்தப் பொருளை ஆர்வமுடன் எடுத்துப் புரட்டிப் பார்த்தான். அது ஒரு சிறு துண்டு சோப்!

அதன் ஒருபுறத்தில் ஒரு சாவியின் வடிவம் அழுந்தப் பதிக்கப்பட்டிருந்தது! ஒருவேளை தன்னிடம் தரப்பட்ட அந்த மாற்றுச்சாவி தொலைந்துவிடும் பட்சத்தில், போலிச்சாவி தயாரிக்க உதவியாக இருக்கும் என்று அவன் அதன் வடிவத்தை அப்படியே சோப்பில் அச்சுப் போல் பதித்து பத்திரப்படுத்தி இருந்தான். இதோ இப்போது அதற்கு அவசியம் வந்து விட்டது! தன் முன்யோசனையைத் தானே மெச்சியவனாக அதைக் கவனமாகப் பைக்குள் வைத்துக் கொண்டான் காளிமுத்து.

கருணை இல்லத்திலுள்ள சிறுவர்களோடு பள்ளிக்கூடத்திற்குப் புறப்பட்டவன் பள்ளிக்குச் செல்லாமல் போலிச் சாவிகளைத் தயாரித்து விற்பனை செய்யும் ஓர் இரும்புக் கடைக்காரரிடம் சென்று சோப்பிலிருந்த அச்சு வடிவத்தைக் காட்டி, அதே போல் சாவி வேண்டும் என்று கேட்டான். தன்னிடம் இருந்த பல வகையான சாவிகளை ஒப்புநோக்கிய கடைக்காரர், ஒன்றைத் தேர்ந்தெடுத்து அவனிடம் தர பெருமகிழ்ச்சியோடு பெற்றுக் கொண்டான் அவன்.

அன்று நள்ளிரவுக்கு மேல்தான் மீண்டும் தயாரித்து விட்ட போலிச் சாவியோடு சாமான்கள் வைக்கும் அறைக்குச் சென்றான் காளிமுத்து. வார்டனுக்காகக் கற்றுக் கொண்ட கலை இப்போது அவ



னுக்கே உதவப் போகிறது! அரை மூட்டை பருப்பையோ, உளுந்தையோ எடுத்துக் கொண்டு போய் வழக்கமாகக் கொடுக்கும் அந்தக் கடைக்காரரிடம் கொடுத்தால் தனக்குத் தேவையான பணம், தானே கிடைக்கிறது!

இந்த முடிவோடு தானியங்கள் வைக்கும் அறையின் கதவை நெருங்கியவன், சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு பூட்டைத் திறப்பதற்கு முனைந்தான்.


அங்கே அவனுக்குப் பெரும் ஏமாற்றம் காத்திருந்தது. தானிய அறையைப் பூட்டும் வழக்கமான பூட்டு அங்கேயில்லை. அதற்குப் பதிலாக அதைவிடப் பெரிய பூட்டு ஒன்று தொங்கிக் கொண்டிருந்தது!

சை, என்னவொரு ஏமாற்றம்! வார்டன் என்னை விடப் புத்திசாலி என்பதை நிரூபித்து விட்டார். இனி என்ன செய்வது, அவனுக்கு ஒரு வழியும் புலனாகவில்லை. கைகளைப் பிசைந்து கொண்டவன், இந்தக் கருணையில்லத்தின் அடிமை வாழ்க்கையிலிருந்து விடுபடுவதற்கு வேறு என்ன வழி என்று தீவிரமாகச் சிந்திக்க லானான்.

தென்னஞ்சோலைகளையும், மணல்மேடுகளையும், கடலையும் விட்டால் வேறு உலகம் தெரியாத உதயன், காளிமுத்துவோடு சேர்ந்து, பட்டணத்து ஆடம்பரங்களைப் பார்த்துப் பிரமித்துப் போயிருந்தான். வாரத்துக்கு ஒருமுறை யாவது காளிமுத்து அவனை வெளியே அழைத்துப் போய் விடுவான். இருவருக்கும் இடையில் வேர்விட்டு வளர்ந்திருந்த நட்பு விரைவிலேயே பெரும் விருட்சம் போல் தழைத்தோங்கி இருந்தது. கருணையில்லத்துக்கு வந்தபோது நன்றாகப் படிக்க வேண்டும் என்பதையே குறிக்கோளாகக் கொண்டிருந்த உதயனின் மனம் இப்பொழுது காளிமுத்துவின் நட்பினால் பெரிதும் மாறிப் போயிருந்தது.

காய்கறித் தோட்டத்திலும், மாட்டுக் கொட்டடியிலும் வேலை செய்வது அவனுக்கு வேப்பங்காயாகக் கசந்தது. பள்ளிக்கூடப் பாடங்களில் கூட அவன் இப்போது அவ்வளவாக மனம் செலுத்துவதில்லை. அவனது வித்தியாசமான போக்கைக் கவனித்த மனோகரன், நிலைமை விபரீதமாகுமுன் அதைத் தடுக்க ஏதாவது பண்ண வேண்டும் என்ற துடிப்போடு எத்தனையோ முறை அவனைத் தனியே அழைத்து அறிவுரை சொன்னான். ஆனால் அவை எதுவும் உதயனின் காதில் ஏறவில்லை. நல்ல மனம் கொண்ட காளிமுத்துவை எல்லோரும் சரியாகப் புரிந்து கொள்ளாமல் வீணாக சந்தேகிப்பதாக அவனுக்குத் தோன்றியது.

இப்போது சில நாட்களாகவே பணத்திற்கு வழியில்லாமல் காளிமுத்து திண்டாடுவதைப் பார்த்து அவன் பெரிதும் மனம் நொந்தான். தான் சுயமாக வேலை செய்து சம்பாதிப்பதாக அவன் தன்னிடம் கூறியிருந்ததால் அந்த வேலையில்லாமல் அவன் தவிப்பதாக உதயன் எண்ணி



"எங்க கிளாஸ்ல ஒரு பையனுக்கு படிச்சதால ஜூரம் வந்துடிச்சு அப்பா."

"உன்னை மாதிரி படிக்காமலே இருந்தாலும் ஜூரம்தாண்டா வரும்!"

– சீர்காழி வி. ரேவதி



''நேற்று உங்க பாட்டி உங்கப்பாவுக்கு மங்கள ஆரத்தி எல்லாம் எடுத்து வழி யனுப்பினாங்களே. எங்கேடா போனார் உங்கப்பா?''

''எனக்குக் காலேஜ் சீட் வாங்கிண்டு வரடா.''

— ஏழ்வரைக்கடியான்

னான். அது என்ன வேலை என்று அவன் காளிமுத்துவிடம் கேட்டபோதெல்லாம் "வார்டனின் சொந்த வேலை" என்று மட்டுமே அவன் சொல்லியிருந்தான். அதனால், அவன் மீது உதயனுக்கு எந்தச் சந்தேகமும் எழவில்லை. பல தடவையும் தனக்காகச் செலவழித்து அன்பு செலுத்திய உயிர் நண்பனுக்கு இந்த இக்கட்டான நேரத்தில் எப்படி உதவலாம் என்று அவன் பலவழிகளிலும் சிந்தித்தான்.

அன்று மாலையில் உதயன் தோட்டத்துப் பக்கம் சென்றபோது காளிமுத்து அந்தப் பெரிய வேப்பமரத்தின் அடியில் சாய்ந்து கொண்டு உட்கார்ந்திருந்தான். அவன் தலைமுடி கலைந்து காற்றில் பறந்து கொண்டிருந்தது. கண்கள் வானத்தை வெறித்து நோக்க துண்டு பீடியை உறிஞ்சியவாறு, உதயன் வந்ததைக் கூட கவனியாமல் ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கி இருந்தான் அவன்.

அவனருகில் சென்று உதயன் உட்கார்ந்ததும் அவனைப் பார்த்து முறுவலித்த காளிமுத்து, "உன்னைத்தான் எதிர்பார்த்துக்கிட்டு இருக்கேன்'' என்றான் சோர்வுற்ற குரலில்.

உதயன் அவனைக் கனிவுடன் பார்த்து, ''காளிமுத்து, நான் ஒண்ணு சொன்னா, நீ கோவிச்சுக்க மாட்டியே?'' என்று கேட்டான்.

அவனையே வைத்த கண் வாங்காமல் பார்த்த காளிமுத்து ''கடகட''வென்று சிரித்தான். "நானாவது உன்னைக் கோவிச்சுக்கிறதாவது!... அட, பைத்தியக்காரா.. இந்த உலகத்துல உன்னை விட்டா நான் அன்பு செலுத்த வேற யாரு இருக்கா?'' என்றவன், "ம், சொல்லு?'' என்று அவன் முகத்தை ஆவலுடன் பார்த்தான்.

''காளிமுத்து, நீ இப்படிப் பீடி புகைக்கிறதாலத்தான் உன்னை எல்லாரும் புரிஞ்சிக்காம தப்பா நினைக்கறாங்க... முரடன் என்றும் பண்பு தெரியாதவன் என்றும் உன்னை மத்தவங்க வெறுக்கறதுக்குக் காரணமே இதுதான்னு தோணுது... தயவுசெய்து இன்னையோட இதை விட்டுடு'' என்று கெஞ்சும் குரலில் சொன்னான் உதயன்.

எந்தப் பதிலும் பேசாமல் அவனையே உற்றுநோக்கிக் கொண்டிருந்த காளிமுத்துவின் கண்கள் கலங்கின. உதடுகள் மெல்லத் துடித்தன. தலையைக் குனிந்து கொண்டு தரையைப் பார்த்தவன், "இப்படி என்னை அன்போட கண்டிக்கவும் உரிமையோட பழகவும் நீ ஒருத்தனாவது இருக்கியே...! பெத்தவங்க முகத்தையே பார்க்காத எனக்கு, உறவுன்னு சொல்லிக்க யாருமே இல்ல... எனக்கு அண்ணனும், தம்பியும், நண்பனும் எல்லாம் நீ ஒருத்தன்தான்'' என்று முணுமுணுத்தான்.

அவனை வாஞ்சையுடன் பார்த்த உதயன், "ஏன் உன்னோட அப்பா, அம்மா எல்லாம் செத்துப் போயிட்டாங்களா?'' என்று கேட்டான்.

காளிமுத்து விரக்தியுடன் தலையசைத்தான். "அவங்க யாருன்னே எனக்குத் தெரியாது. செத்துட்டாங்களா, உயிரோட இருக்காங்களான்னும் தெரியாது... என்னைப் பெத்த அம்மா என்னைப் பாலூட்டி வளர்க்க முடியாம, குழந்தையா நான் இருந்தப்ப குப்பைத் தொட்டியில வீசிட்டுப் போயிட்டாளாம்...! பாவம், அவளுக்கு என்ன கஷ்டமோ...! அனாதையாக் கிடந்த என்னை யாரோ கொண்டு வந்து இங்க கொடுத்துட்டுப் போனாங்களாம். இல்லேன்னா அந்தக் குப்பை மேட்டுல எச்சி இலைக்குப் போட்டி போடற நாய்களுக்கு நானும் இரையாகி இருப்பேன்... நன்றி கெட்ட இந்த உலகத்துல வாழ்றதை விட செத்துப் போயிருந்தாலாவது தேவலாம்'' என்றான்.

"நீ பேசறது கொஞ்சம் கூட நல்லா

இல்லை காளிமுத்து. உன் தேவைக்குப் பணம் கிடைக்காத வேதனையில்தான் இப்படி மனம் உடைஞ்சு விரக்தியாப் பேசறே! இந்த ஆதரவாவது நமக்குக் கிடைச்சிருக்கேன்னு சந்தோஷப்படுறதை விட்டுட்டு, இப்படி மனம் தளர்ந்தா எப்படி?'' என்று அவனைத் தேற்றினான் உதயன்.

''சற்று நேரம் மௌனமாக இருந்த காளிமுத்து, "நீ நினைக்கிறது மாதிரி நான் ஒண்ணும் மனம் தளர்ந்து போயிடல உதயா. இந்த நரக வாழ்க்கையில இருந்து தப்பிச்சு, சுதந்திரமா வாழ நான் ஒரு நல்ல வழியைக் கண்டுபிடிச்சுட்டேன்'' என்றான்.

உதயன் ஆர்வத்தோடு அவன் முகத்தைப் பார்த்தான்.

''உதயா, எனக்குத் தெரிஞ்ச ஒரு பலசரக்குக் கடைக்காரர் இங்க இருக்கார். அவரோட அண்ணன் மெட்ராஸ்ல மரத் தொழிற்சாலை வச்சிருக்கார். அவர் மூலமா அங்க போய் வேலைக்குச் சேர்ந்துடலாம். தினம் நாற்பது ரூபாய் சம்பளம்... சாப்பாடு எல்லாம் அங்கேயே தருவாங்களாம். வாரக் கடைசியில ஒருநாள் லீவு கூட உண்டாம். நாம் இஷ்டம் போல செலவு செய்து ஜாலியா இருக்கலாம்'' என்ற காளிமுத்து உதயனின் முகத்தைக் கடைக்கண்ணால் ஆராய்ந்தான்.

அவன் சொன்னதைக் கேட்டு அதிர்ச்சியடைந்த உதயன், "நீ என்ன சொல்ற...! இந்தக் கருணை இல்லத்தை விட்டுட்டுப் போயிடலாம்னா நினைக்கற...! அப்போ, நம்ம படிப்பு என்ன ஆகிறது? இங்க இருக்கிற பாதுகாப்பும், அரவணைப்பும் வேற எங்கேயும் கிடைக்காது காளிமுத்து. இந்த நினைப்பையே மனசுல இருந்து விட்டுரு" என்றான்.

காளிமுத்து அவனை மறுத்து, "அட போப்பா. படிச்சாத்தான் வாழ்க்கையில முன்னுக்கு வர முடியுமா என்ன? நம்மைப் போல சின்ன வயசுல உழைச்சு முன்னேறினவங்களைப் பத்தியெல்லாம் நீ படிக்கலை...? தன்னம்பிக்கை இருந்தா வானத்தைக்கூட வில்லா வளைக்க முடியும். கோழைத்தனமா, பயந்துக்கிட்டு இருந்தோம்னா என்னைக்கும் நாம அடிமையாத்தான் இருக்கணும்'' என்று பிடிவாதமான குரலில் சொன்னான்.

அவன் சொல்வதிலும் உண்மை இருப்பதாகவே உதயனுக்குத் தோன்றியது. இங்கும் கூட காய்கறித் தோட்டத்தில் வேலை செய்யத்தானே வேண்டும்? இப்படி இங்கே உழைத்து அடிமை வாழ்க்கை வாழ்வதை விட, வெளியே சென்றால் அதே உழைப்பைக் கொண்டு சுதந்திரமாக வாழலாமே என்று காளிமுத்து அவன் மனத்தில் இட்ட நச்சு விதை மிக வேகமாக முளைத்து வேர்விட்டு வளரத் தொடங்கியது!


(தொடரும்)

கொடுக்க மாட்டார்களே!

நந்தகோபால், ராஜகோபால் வீட்டுக்குச் சென்றார். நந்தகோபால் வீட்டை எல்லாம் சுற்றிக் காட்டினார். வீட்டின் ஓர் அறைக்குள் நுழைந்ததும், ஏராளமான புத்தகங்கள் குவியல் குவியலாகத் தரையில் கிடந்தன. அதைக் கவனித்த நந்தகோபால், "என்ன, ராஜகோபால்! இப்படிப் புத்தகங்களை எல்லாம் கண்டபடி தரையில் போட்டு வைத்திருக்கிறாயே! ஒரு ஷெல்ப் வாங்கி அதில் புத்தகங்களை அழகாக அடுக்கி வைக்கக் கூடாதா?" என்று கேட்டார்,

''ஷெல்பா? அதையாரும் படிக்க இரவல் கொடுக்க மாட்டார்களே!'' என்று பதிலளித்தார், ராஜகோபால்.

– ஏழ்வரைக்கடியான்





கடலைக் கலக்கிய குட்டிராணி!

மாலை சுமார் மூன்று மணிக்கு மேலிருக்கும். கதிரவனின் வெப்பம் குறையத் தொடங்கியிருந்த நேரம். சென்னை மெரீனா (கடற்கரை) நீச்சல் குளத்தின் நுழைவாசல். நாலரை வயது குட்டிச் சிறுமி ஒருத்தி, மோட்டார் சைக்கிளில் தன் தந்தையோடு வந்து இறங்கினாள். அப்பா நீச்சல் பயிற்சிக்குப் போகப் போகிறார். அதைக் கரையிலிருந்து வேடிக்கை பார்க்க இந்த சுட்டிப் பெண் குழந்தை வந்திருக்கிறது என்று நினைத்துக் கொண்டேன். இந்த மாதிரி வேடிக்கை பார்க்க வரும் சிறுவர் சிறுமியர் ஏராளம். ஆனால், என் நினைப்பு இந்தச் சிறுமியின் விஷயத்தில் பொய்யானது! காரணம் அந்த குட்டிச் சிறுமி நீச்சல் பயிற்சியை வேடிக்கை பார்க்க வந்தவள் அல்ல! அவளே நீச்சல் பயிற்சிக்குத்தான் வந்திருந்தாள்! அவள் அப்பாதான் அவளைக் கொண்டு விட வந்திருந்தார். அவ்வளவே!



• அப்பாவுடன்

நாலரை வயதுச் சிறுமி நீச்சல் பயிற்சி பெறுகிறாள் என்பது எத்தனை சுவையான செய்தி! வேடிக்கை பார்க்கும் கூட்டம் அதிகமானது. நீச்சல் குளத்தின் இரு பக்கச் சுவர்களிலும் ஒட்டப்பட்டிருந்த மினி சுவரொட்டிகளைச் சுட்டிக்காட்டி சிலர் பேசிக் கொண்டிருந்தனர். அருகே சென்று கவனித்தேன். "4½ வயது எழிலரசி 27.3.97 அன்று பட்டினப்பாக்கம் கடலில் 5 கி.மீ. தொலைவு நீந்தி சாதனை புரிய இருக்கிறாள்" என்ற அறிவிப்புடன் சிறுமியின் புகைப்படம் அச்சிடப் பட்ட மினி சுவரொட்டி அது! பயிற்சிக்கு வந்துள்ள அதே குட்டிச் சிறுமிதான்; சந்தேகமே இல்லை.

உள்ளே சென்று எழிலரசியின் தந்தையார் மகிழேந்தியிடம் அறிமுகப்படுத்திக் கொண்டேன். நீச்சல் குளத்தில் நீந்திப் பயிற்சி செய்து கொண்டிருந்த எழிலரசியை அவர் அழைக்க, ஆமை நீச்சலடித்தபடி கரைக்கு வந்து, படியேறி வணக்கம் கூறினாள்!

"எத்தனையோ விளையாட்டுகள்; பயிற்சிகள் இருக்கும்போது ஏன் நீச்சலைத் தேர்ந்தெடுத்தே?"

"நாங்க மீனவர் வகுப்பு. எங்க குடும்பத்துல எல்லோரும் நீந்தக் கூடியவர்கள். எங்க அக்கா கூட நீச்சலில் பதக்கம் பரிசு வாங்கினவள். எங்கப்பாகூட நீச்சல் வீரர்தான். அதனால், இயற்கையாகவே எனக்கு இதில் ஒரு ஆர்வம் இருந்தது. மேலும் மேலும் என்னை உற்சாகப்படுத்தி



• பரிசுக் கோப்பைகளை வைக்க இடமில்லை!

சரியானபடி பயிற்சி பெற வைத்தார்கள்."

பதில் சொல்ல எழிலரசி மிகவும் தயங்கினாள். அவளுடைய தந்தைதான் எடுத்துக் கொடுத்து எடுத்துக் கொடுத்துப் பேச வைத்தார்.

"ரொம்ப கூச்ச சுபாவங்க. பள்ளிக் கூடத்துல கூட அதிகமா பேசாது. பத்து கேட்டால் ஒன்று சொல்லும். ஆனால் காரியத்தில் கெட்டி. சொன்னதும் கெட்டியா புடிச்சுக்கும்" என்றார் அப்பா.

"எந்தப் பள்ளியில் படிக்கிறாள்?"

''ரெக்ஸ் மெட்ரிக்குலேஷன் பள்ளில யு.கே.ஜி. படிக்கிறாள். சென்னை திருவல்லிக் கேணியில இருக்கு."

நீச்சல் குளங்களில் மிகச் சிறிய குழந்தைகள் நீந்துவதும், அதற்கான பயிற்சியை எடுப்பதும் சாதாரணமாகி வரும் நிகழ்ச்சிகள். ஆர்வமும் வசதியும் இருந்தால் போதும். ஆனால், கடலில் நீந்துவது என்பது சாதாரணமான காரியம் அல்ல. கடுமையான தனிப் பயிற்சி தேவை. இது பற்றி எழிலரசியின் தந்தையிடமே கேட்டேன்.

"நீங்கள் நினைப்பது சரிதான். தொடக்கத்தில் எழிலரசிக்கு இதே நீச்சல் குளத்தில் தான் நீந்தக் கற்றுத் தந்தோம். என் நண்பர்களும், திறமைமிக்க பயிற்சியாளர்களுமான க. சே. இளங்கோவன், ப. இளங்கோவன் இருவரும் போட்டிகளில் கலந்து கொண்டு சாதனை புரிய எப்படிப் பயிற்சி பெற வேண்டுமோ அதையெல்லாம் முறைப்படி கற்றுத் தந்தார்கள்," என்றார் எழிலரசியின் தந்தை.

அவரே மறுபடி தொடர்ந்தார். "எல்லோரும்தான் நீச்சல் குளத்தில் நீந்துகிறார் கள்; போட்டிகளில் பரிசு பெறுகிறார்கள். இதெல்லாம் பெரிய சாதனையல்ல. மற்றவர்கள் செய்யாத ஏதாவது வித்தியாசமான ஒன்றை எழிலரசியைக் கொண்டு செய்ய வைக்க வேண்டும் என்று எண்ணினோம். அதுதான் கடலில் நீந்துவது. இதற்கான பயிற்சியைக் கடலில் கொடுக்க முடிவு பண்ணினோம். நான் சென்னை துறைமுகக் கழகப் பணியாளன். பணியாளர்களிடையேயும், பணியாளர்களின் குடும்பத்தினரிடையேயும் விளையாட்டுத் திறமை உள்ளோரை ஊக்குவிப்பதில் எங்கள் அதிகாரிகளுக்கு ஆர்வம் அதிகம். துறைமுகத்தில் INNER HARBOUR என்ற பகுதி இருக்கிறது. இதுவும் கடலின் ஒரு பகுதிதான். இதில் அதிகாரிகளின் அனுமதி பெற்று, கே. என்.

இளங்கோவன் எழிலரசிக்குப் பயிற்சி தந்தார். அவர் பயிற்சியாளர் என்பதுடன், அவரும் கூட துறைமுகப் பணியாளர் என்பதால், பயிற்சியளிப்பது எளிதாக இருந்தது. கடலில் தனியாக நீந்தி சாதனை படைக்க முடியும் என்ற நம்பிக்கை உறுதியானதும் இதைச் செய்து காட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டன. மார்ச் 27-ஆம் நாளன்று எழிலரசியால் இது நிகழ்த்திக் காட்டப்பட்டது."

"நாலரை வயதே ஆன எழிலரசி, கடலில் 5 கிலோ மீட்டர் நீந்திருக்கிறாள். இந்த வயதுச் சிறுமி யாருமே இந்தச் சாதனையை இதுவரை நிகழ்த்திக் காட்டவில்லை. பம்பாயில் ஒரு சிறுமி நீச்சல் குளத்திற்குள்ளேயே 4 கிலோ மீட்டர் நீந்தியிருக்கிறாள். கடலில் இந்த வயதில் வேறு யாரும் இந்த நேரத்திற்குள் இந்தத் தொலைவு நீந்தியதில்லை. அதனால்தான் இது சாதனை."

நீந்தி விட்டுக் கரையேறி வந்தாள் எழிலரசி.

"ஆமாம், கடலில் மூன்று மணி நேரம் நீந்தும் போது உனக்கு பயமா இல்லே?" - கேட்டது நான்தான்.

"என்ன பயம்? எனக்கு எண்ணெய் பூசி விட்டாங்களே? ஏற்கெனவே நீந்திப் பயிற்சி பெற்ற கடல்தானே?" என்றாள் மழலை மாறாத எழிலரசி.

"காலை 6:30 மணிக்குத் தொடங்க இருந்தாலும் 7 மணிக்குத்தான் கிளம்ப முடிந்தது. காரணம், கடல் அலை ஓட்டம் எதிர் வேகத்தில் ஆரம்பித்து விட்டது. இதில் எதிர்த்து நீந்திப் போவது என்பது மிகவும் கடினம். இந்த நிகழ்ச்சியை இன்னொரு நாளுக்கு ஒத்திப் போடுங்கள் என்று எல்லோரும் கேட்க ஆரம்பித்து விட்டார்கள். ஆனால் நான் உறுதியாக இருந்தேன். எழிலரசியும் கொஞ்சம் கூடத் தயக்கம் காட்டவில்லை. அதனால் 7 மணிக்கு நீந்த ஆரம்பித்தாள். எதிர் அலை வீச்சு இல்லாமல் இருந்தால் 90 நிமிடங்களில் முடிந்திருக்க வேண்டியது. மூன்று மணி இருபது விநாடிகளில்தான் முடிந்தது. இருப்பினும்கூட இன்னமும் இது சாதனையே" என்றார் எழிலரசியின் தந்தை.

"இதற்கு என்று தனிப்பயிற்சி உண்டா?"

"பயிற்சி மட்டுமா? ஊட்டச்சத்துமிக்க சிறப்பான உணவுடன் 43 நாள் தீவிரப் பயிற்சி கொடுத்தோம் எழிலரசிக்கு. இதற்கு மட்டும் 4000 ரூபாய் செலவானது."

"அடுத்து உங்கள் திட்டம் என்ன?"

"எழிலரசியை பாக் ஜலசந்தியைக் கடக்க வைக்க வேண்டும்."

"எழிலரசி படிப்பில் எப்படி?"

"ஏ கிரேடு வாங்கும் படுசுட்டி."

சென்னை திருவல்லிக்கேணி பழனியம்மன் கோவில் தெரு அமைந்துள்ள பகுதியில் கோல்டன் நீச்சல் குழு என்ற அமைப்பு 1984 முதல் இயங்கி வருகிறது. இயற்கையாகவே நீந்தும் ஆற்றல் பெற்றுள்ள மீனவ சமுதாயக் குழந்தைகளில், திறமையுள்ளவர்களைக் கண்டுபிடித்து அவர்களுக்குப் பயிற்சியளித்து மாநில, மண்டல, தேசிய, உலகளவுக்கு உயர்த்துவது தான் இந்த அமைப்பின் நோக்கம். இவர்களிடம் பயிற்சி பெற்ற 30 பேர் தேசிய அளவிலும், 4 பேர் உலகளவிலும் நீச்சல் போட்டிகளில் பங்கேற்று பரிசுகளைப் பெற்றுள்ளது இவர்களது பயிற்சித் திறமைக்குச் சான்று.

குற்றாலீஸ்வரனுக்கு கடல் நீச்சல் அனுபவத்தை அறிமுகப்படுத்திய பெருமை இந்த கிளப்க்குத்தான். எழிலரசிக்குப் பயிற்சி தந்து சாதனை புரியவைத்திருப்பவர்களும் இவர்களே. மாவட்ட நீச்சல் விளையாட்டுச் சங்கத்தின் (அரசு அமைப்பு) அங்கீகாரம் பெற்ற அமைப்பு இது.

எழிலரசியின் இந்த வெற்றிக்கு அவளுடைய திறமையும் இடைவிடா ஊக்கமும் மட்டுமல்ல காரணம்... இந்திய டிரையத்லான் பேரவைத் தலைவர் ராமச்சந்திரன், மாநில நீச்சல் விளயாட்டுப் போட்டி சங்கத்தின் இணைத் தலைவர் ரேகா ராமச்சந்திரன், கோல்டன் நீச்சல் குழுவினர், நீச்சல் பயிற்சிகளுக்கு ஏற்ப தனிக்கவனம் செலுத்தி அவருக்குக் கல்வி போதித்து வரும் ரெக்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி நிர்வாகத்தினரின் ஒத்துழைப்பு மக்களுடைய முன்னேற்றத்தில் இடை விடாது ஊக்கமளித்து வரும் பெற்றோர் எல்லோருமே காரணம்தான்.

"உன்னுடைய நீச்சல் சாதனைக்கு பள்ளிக்கூடத்தில் பாராட்டு சொன்னாங்களா?" என்று எழிலரசியிடம் கேட்டேன்.

"ஓ... பரிசு கூடத் தந்தாங்க. எல்லோரும் கைதட்டி வாழ்த்தினாங்க" என்று பெருமையுடன் கூறினாள் எழிலரசி.

இந்த 4½ வயதுச் சாதனையாளரிடம் அளவிலாத நீச்சல் திறமை புதைந்து கிடப்பதை கோல்டன் நீச்சல் குழு நிரூபித்துக் காட்டி விட்டது. இந்த மீன் குட்டிக்கு முறைப்படி மேன்மேலும் உயர்பயிற்சி அளித்து, சத்துள்ள உணவு தந்து வளர்த்து, தேசிய அளவுக்கும் உலக அளவுக்கும் உயர்த்த வேண்டிய பொறுப்பு அரசினுடையது. இந்த மீன் குட்டியை தனியார் நிறுவனம் ஏதும் தத்தெடுத்துக் கொண்டால், அந்த நிறுவனத்துக்கு இந்த மீன் குட்டி மேன் மேலும் பெருமைசேர்க்கும் என்பதில் ஐயமில்லை. இந்த வருங்கால கின்னஸ் சாதனையாளருக்கு கோகுலம் வாசகர்கள் சார்பில் இப்பொழுதே அட்வான்ஸ் பாராட்டைக் கூறி வாழ்த்தலாம்.

- ரே

அட்டை வண்ணப்படம் : ஸ்ரீஹரி

காட்சி 1

ஸ்ரீநாத்: பூபதி! பூபதி!

பூபதி: என்ன ஸ்ரீநாத்!

ஸ்ரீநாத்: நான் 'ஹொகனேகல்' சுற்றுலா போகப் பணம் கட்டினேன். என் தங்கை வினிதாவுக்கும் கூடச் சேர்த்துக் கட்டிட்டேன்...

பூபதி: அப்படியா?

ஸ்ரீநாத்: ஏன், நீ இன்னும் கட்டலையா.

பூபதி: இல்லேடா, எங்கப்பா அடுத்த சுற்றுலாவுக்கு போகலாம்னு சொல்லிட்டார்!



வேடிக்கைக்காகத்தான்!

ஸ்ரீநாத்: கவலைப்படாதே பூபதி! என் தங்கை வினிதா வரது கொஞ்சம் சந்தேக மாத்தானிருக்கு... அவ வரல்லேன்னா, நானே உங்கப்பாவைப் பார்த்து உன்னை அனுப்பி வைக்கச் சொல்றேன். ஏன்'னா நம்ம பள்ளிக்கூடமே ஏற்பாடு பண்ற இந்தச் சுற்றுலா ரொம்ப நல்லாயிருக்கும்!... அதோ பாரு, அந்தப் பையன் நம்மை ஏதோ கேட்க வரான்.

கிரி: (வந்து கொண்டே) அண்ணா, பாரதியார் தெரு இங்கே எந்தப் பக்கம் இருக்கு தெரியுமா?

பூபதி: ம்!... பாரதியார் தெருவா?.. அதோ ஒரு 'பார்க்' தெரியறது இல்லே?... அதுக்கு நேர் எதிரே இருக்கிறதுதான் பாரதியார் தெரு!

கிரி: ரொம்ப நன்றி! என் பேர் கிரி! உங்க பேரு?

பூபதி: என் பேர் பூபதி! இவன் பேர் ஸ்ரீநாத்!...

கிரி: சரி, வரேன். (போகிறான்)

ஸ்ரீநாத்: டேய் பூபதி! இது என்னடா அநியாயம்? வழி கேட்க வந்தவங்ககிட்டே கூடவா, உன் குறும்பு புத்தியைக் காட்டறது? பாரதியார் தெரு இந்தப் பக்கம் இருக்கு; நீயே அந்தத் தெருவிலேதான் இருக்கே! ஏன் கிரிக்கு தவறான வழியைக் காட்டினே?

பூபதி: எல்லாம் ஒரு வேடிக்கைக்குத்தான்...

ஸ்ரீநாத்: இந்த மாதிரி குறும்புகளை இதோடு நிறுத்திக்க... நீ செய்யற குறும்பு மத்தவங்களை வேதனைப்படுத்தறதாவோ; தொல்லைப்படுத்தறதாவோ இருக்கக் கூடாது!... வா போகலாம்!

காட்சி 2

பூபதி: வாணி அக்கா, அப்பாவையும் அம்மாவையும் எங்கே காணோம்?

வாணி: அடுத்த தெருவிலே ஒரு கல்யாணம். அதுக்காகக் கிளம்பிப் போயிட்டாங்க! அப்புறம் உனக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி!

பூபதி: என்ன செய்தி?

எஸ்.ஆர்.ஜி. சுந்தரம்

வாணி: உன்னோட நண்பன் ஸ்ரீநாத் கொஞ்ச நேரம் முன்னால் வந்திருந்தான். அவனோட தங்கை வினிதா சுற்றுலாவுக்கு வரலையாம். அதனால அவ 'டிக்கட்'டுலே உன்னை அனுப்பச் சொல்லி அப்பாகிட்டே கேட்டுக்கிட்டான்.

பூபதி: அப்பா சம்மதிச்சுட்டாரா?

வாணி: ம்! சம்மதிச்சுட்டார்!... ஆமாம், உனக்கு ஏன் இவ்வளவு லேட்?

பூபதி: லாண்டிரிக்குப் போயிருந்தேன்... துணி 'இஸ்திரி' பண்ணிக் கொடுக்க இவ்வளவு லேட் பண்ணிட்டாங்க!

வாணி: சரி! நாளைக்குக் காலையிலே எட்டு மணிக்கு சுதந்திர தினப் பூங்காவிலேந்து 'டீலக்ஸ் பஸ்' கிளம்பறதாம்!... இப்பவே துணிமணியெல்லாம் எடுத்து வச்சுக்க!

பூபதி: சுதந்திர தினப் பூங்காவா? அது எங்கே இருக்கு?

வாணி: காலையில புறப்படும்போது சொல்றேன்.

காட்சி 3

பூபதி: வாணியக்கா, இதோ புறப்பட்டாச்சு! அப்பா அம்மாகிட்டேயும் சொல்லிட்டேன்! இப்ப சொல்லு, சுதந்திரதினப் பூங்கா எங்கே இருக்கு?

வாணி:ம்...ம்...ம்...

பூபதி: என்ன அக்கா யோசிக்கறே? உனக்கே தெரியாதா?... இப்பவே மணி ஏழு ஆயிடுத்து.

வாணி: வந்து...

பூபதி: சொல்லுக்கா சீக்கிரம்?

வாணி: வந்து... உனக்கு 'வள்ளுவர் கோட்டம்' தெரியும் இல்லே?

பூபதி: தெரியும்! நம்ம வீட்லேந்து கிட்டக்கத்தான் இருக்கு!

வாணி: அங்கேந்து வடபழனிக்கு போற பெரிய சாலை தெரியுமில்லே?

பூபதி: நல்லா தெரியும்.


வாணி: அந்த சாலையிலேயே கொஞ்ச தூரம் நடந்தா சுதந்திர தினப் பூங்கா வரும்?

பூபதி: சரியான வழிதானே?

வாணி: ஏன்? சந்தேகமா?... ம்! கிளம்பு சீக்கிரம்!

பூபதி: வரேங்க்கா!

வாணி: ஹொக்கனேகல் அருவி தண்ணி கிட்டே போய் நீந்தப் போறே... உன் குறும்புத்தனத்தையும்,



...ிஷமங்களையும் அடக்கி வச்சுக்க!



காட்சி 4

(பூபதி வேகமாக நடந்து கொண்டிருக்க எதிரே கிரி வருகிறான்)

கிரி: பூபதிதானே? எங்கே இப்படி? என்னைத் தெரியல்லே?

பூபதி: ம்! ஓ...கிரியா?

கிரி: ஆமாம்! அன்னிக்கு பாரதியார் தெருவுக்குப் போக உங்கிட்டே வழி கேட்ட அதே கிரிதான்! ஆனா நீ எனக்குக் காட்டினது பாரதியார் தெரு இல்லே, வாத்தியார் தெரு!

பூபதி: ம்!... அதுவா...? வந்து...!

கிரி: நினைவில்லாம சொல்லிட்டே... அதானே? பரவாயில்லேலை... இப்ப எங்கே கிளம்பிப் போய்க்கிட்டிருக்கே?

பூபதி: சுற்றுலா போறேன்... சுற்றுலா பஸ்ஸைப் பிடிக்க சுதந்திர தினப்பூங்காவுக்கு போய்க் கிட்டிருக்கேன்.

கிரி: பூபதி, நீ போற வழி தவறான வழி! சுதந்திர தினப் பூங்கா இதோ இந்த சாலையிலேயே கொஞ்ச தூரம் நடந்தா வரும்.

பூபதி: இல்லை! நீ பொய் சொல்றே, அன்னிக்கு உனக்கு நான் தவறான வழியைக் காட்டினதுக்காக இன்னிக்கு பழிக்குப் பழி வாங்க இப்படிப் பொய் சொல்றே?

கிரி: இல்லே பூபதி, நான் சொல்றது உண்மை. பா!

பூபதி: அப்படியானா என் அக்கா வாணி எனக்கு தவறான வழியையா சொல்லியிருப்பா? பேசாம உன் வழி யைப் பார்த்துக்கிட்டு நீ போ! நேரத்தை வீணடிக்காதே! (சைகிள் மணிஓசை பின்னால் கேட்க) யாரது சைகிளை இடிக்கற மாதிரி வந்து நிக்கறது...? ஓ! வாணி அக்காவா? நல்ல சமயத்துக்கு வந்தே!... அக்கா சுதந்திர தினப் பூங்காவுக்கு போற வழி இது இல்லேன்னு சொல்றான் இந்த கிரி! இந்தப் பக்கம் போகணுமாம்!

வாணி: கிரி சொன்னதுதான் சரி!

பூபதி: அப்ப நீ சொன்னது...

வாணி: தப்புதான்... வேணும்னுதான் அப்படிச் சொன்னேன். (சிரிக்கிறார்கள்)

பூபதி: சிரிக்காதே... அக்கா. நான் வழி தெரியாம தவிக்கறது உனக்கு வேடிக்கையாயிருக்கா?

வாணி: அன்னிக்கி இந்த கிரிக்கு பாரதியார் தெருவுக்குப் பதிலா வாத்தியார் தெருவைக் காட்டிட்டு தவிக்க விட்டியே, அதுவும்கூட வேடிக்கைக்குத் தானே? நாம இருக்கற பாரதியார் தெருவைத் தேடி வந்த கிரி, வழி தெரியாம எப்படித் தவிச்சான் தெரியுமா?

பூபதி: இதெல்லாம் உனக்கு எப்படித் தெரியும்?

வாணி: இந்த கிரி, என் சிநேகிதி மாலாவோட தம்பி! மாலாவுக்கு வேண்டிய சில புத்தகங்களை எங்கிட்டேந்து வாங்கிக்கிட்டுப் போகத்தான் அன்னிக்கு நம்ம வீட்டைத் தேடிக்கிட்டு வந்திருக்கான். நீ அவனுக்குத் தவறான வழியைக் காட்டினதை கிரி அன்னிக்கே எங்கிட்டே சொல்லிட்டான். உன் பேரையும், ஸ்ரீநாத் பேரையும்கூட சொன்னான். நீதான் இப்படிக் குறும்புத்தனம் பண்ணியிருக்கேங்கறதை அப்பவே தெரிஞ்சுக்கிட்டேன். அதனாலதான் உனக்கு தவறான வழியைச் சொன்னேன். உன் குறும்புத்தனத்தாலே மத்தவங்களுக்கு எவ்வளவு கஷ்டம் ஏற்படும்கிறது என்கிறதை இப்போ புரிஞ்சுக்கிட்டியா?

பூபதி: அக்கா இதுமாதிரி வேறு யாராவது தவறான வழியைக் காட்டியிருந்தா, நானும் இன்னிக்கு நிச்சயம் திக்குமுக்காடிப் போயிருப்பேன்.


வாணி: நீ நிஜமாக தவறான வழியிலே போயிடக்கூடாதுன்னுதான் நானும் உனக்குத் தெரியாம சைகிள்ளே பின்னால மெதுவா வந்தேன். கிரியையும் முன்னால போகச் சொல்லி உனக்குச் சரியான வழியைக் காட்டச் சொன்னேன். ஆனால்! நான் எதிர்பார்த்தபடி கிரியையே நீ சந்தேகப்பட்டே!

பூபதி: கிரி! நான் செய்தது தப்புங்கறதை இப்போ நல்லா புரிஞ்சுக்கிட்டேன். உன்னைத் தவறா நினைச்சு பேசினதுக்காக வருத்தப்படுறேன். ஐயையோ!, மணி எட்டாயிடுச்சே!

வாணி: கவலைப்படாதே! பஸ் எட்டரைக்குத்தான் கிளம்பும்! இதையெல்லாம் உனக்குப் புரிய வைக்கத்தான் எட்டு மணிக்குக் கிளம்பறதா சொல்லி வச்சேன்!

கிரி: நிறைய நேரம் இருக்கு, வா பூபதி!... நாங்களும்கூட வந்து வழி அனுப்பறோம்!

(போகிறார்கள்)



''என் வாத்தியார் என்னை கௌரவமா திட்டுவாருடா...''

''எப்படிடா...''

''நீ துபாயில ஒட்டகம் மேய்க்கத் தாண்டா லாயக்குன்னுதான்''

— நெற்குப்பை கி. மனோகரன்


என் பங்கு!

பூவை அமுதன்

ஊர்க் கோடியிலேயிருந்த குளத்தங்கரை அரச மரத்தடியில் அமர்ந்திருந்தான் அம்மையப்பன். அவன் கண்களில் நீர் தாரை தாரையாக வழிந்து கொண்டிருந்தது. உதட்டைக் கடித்துக் கொண்டே கண்களைத் துடைத்துக் கொண்டான். துடைக்கத் துடைக்க, கண்ணீர் கொட்டியபடியே யிருந்தது.

''என்னால்தான் எதுவும் முடியவில்லையே! நான் ஏன் அழ வேண்டும்? அழுது என்ன பயன்?' என்று தனக்குள் சொல்லிக் கொள்வதைப் போலவே அவன் முணுமுணுத்துக் கொண்டான்.

கலங்கிய கண்களோடு எதிரே பார்ப்பதும் ஏதேதோ எண்ணி விம்முவதுமாக ஒரு மணி நேரமாய் அவன் ஒரே இடத்திலேயே அமர்ந்து கொண்டிருந்தான்.



எதிரே பார்ப்பதும், சற்று நேரங் கழித்துப் பார்வையைத் திருப்பிப் பக்கத்தில் பார்ப்பதுமாக இருந்தான்.

எதிரே அரை கிலோ மீட்டர் தொலைவில் ஒரு குடிசை தெரிந்தது. அது பழைய குடிசை. அதற்குப் பக்கத்தில் பத்துப் பதினைந்து பேர் சுவர் எழுப்பும் வேலையில் ஈடுபட்டிருந்தார்கள்.

மூன்றடி உயரத்துக்குச் செம்மண் சுவர் எழும்பி விட்டது. நாலைந்து பெரியவர்கள், மற்றவர்கள் எல்லோரும் சிறியவர்கள்தாம். அங்கே செம்மண்ணைப் பிசைந்து சுவர் எழுப்பிக் கொண்டிருந்தார்கள்.

மூன்று நாட்களாகவே அந்த வேலை அங்கே நடந்து கொண்டிருந்தது. அம்மையப்பன் இரண்டு நாட்களாக அந்த அரச மரத்தடியில் அமர்ந்து தொலைவிலே நடக்கிற அந்த வேலையைக் கவனித்துக் கொண்டிருந்தான்.

அந்த அரச மரத்தடியிலே பெரியதாகவும் இல்லாமல், மிகச் சிறியதாகவும் இல்லாமல் ஒரு பிள்ளையார் சிலை இருந்தது. அதற்குச் சற்றுப் பக்கத்தில்தான் அவன் அமர்ந்திருந்தான்.

கவலையோடு ஏதேதோ எண்ணிக் கொண்டிருந்தவன், பின்னாலே யாரோ வரும் சப்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தான். அதற்குள், இரண்டு சிறுவர்கள் அவன் பக்கத்துக்கு ஒருவராக வந்து நின்று விட்டார்கள்.

''இதோ பார்ரா இவனை! பிள்ளையார் பக்கத்திலே இவன் என்ன பண்றான்?'' என்று கேட்டுக் கேலியாகச் சிரித்தான் ஒருவன்.

"இவன் என்ன பண்ணுவான்? அது தொப்பைப் புள்ளையாரு! இவன் ஊனப் புள்ளையாரு! ரெண்டு பேருமே நடக்க முடியாமே, அரச மரத்தடியிலே உட்கார்ந்திட்டாங்க!'' என்று சிரித்தான் மற்றவன்.

கேலியாகக் கேள்வி கேட்டவன் கோபால். கிண்டலாகப் பதில் சொன்னவன் வேணு.

அவர்கள் அங்கே வருவார்கள் என்பதை அம்மையப்பன் எதிர்பார்க்கவே




இல்லை. தனியாக உட்கார்ந்து அழ வேண்டும் போலிருந்தது அவனுக்கு. அதனால்தான் அம்மையப்பன் அங்கே அமர்ந் திருந்தான்.

அவர்கள் தன்னைக் கேலி செய்ததை அம்மையப்பன் பெரி தாக எடுத்துக் கொள்ளவில்லை. பிள்ளையார் சாமியையே கேலி செய் கிறார்களே என்று நினைத்த போதுதான் அவனுக்கு எரிச்சலாக இருந்தது.

"வேணு! கோபால்! நான் இங்கே யார் பேச்சுக்கும் போகாமே தெய்வமேன்னு உட்கார்ந்திருக்கேன். என்னை ஏன் வம் புக்கு இழுக்கறீங்க? என்னை கேலி பண் ணுங்க. பிள்ளையாரை ஏன் பண்றீங்க? பிள்ளையார் தெய்வம் இல்லையா? கேலி செய்யலாமா?'' என்று பரிதாபமாகக் கெஞ்சும் பாவனையில் அவர்களைக் கேட்டான் அம்மையப்பன்.

"ஊனக் காலனுக்கு ரொம்பவுந்தான் சாமி பக்தி!'' என்று அவன் தலையைப் பிடித்து அழுத்தினான் கோபால்.

"பத்துப் பைசாவுக்குக் கற்பூரம் வாங் கிக் கொளுத்தறதுக்குக் கூட இவனுக்குக் கதியில்லை...''

"ச்! நீ ஒண்ணு. யாராவது புள்ளை யாருக்குத் தேங்கா உடைப்பாங்களா; பொறுக்கித் தின்னலாமான்னு காத்துக் கிட்டு உட்கார்ந்திருக்கான். தெரிஞ்சிருந் தால் நாமே ஒரு தேங்காய் வாங்கி வந்து சூரை விட்டிருக்கலாம். இவன் எப்படி இந்த ஊனக்காலை இழுத்துக்கிட்டு ஓடிப் பொறுக்குவாங்கிறதை வேடிக்கை பார்த்திருக்கலாம். தெரியாம போச்சே!'' என்று சிரித் தான் வேணு.

"ஏம்பா! என்னை ஏன் வம்புக்கு இழுக் கறீங்க? எனக்குக் கால் ஊனம்தான். உங் களைப் போல வேகமா நடக்க முடியாது. ஆட முடியாது. ஓட முடியாதுதான். கட வுள் உங்களுக்கு இப்படி எந்தக் குறையும் வைக்கல்லே. அதுக்காகக் கடவுளுக்கு நன்றி சொல்லுங்க. கேலி செய்யாதீங்க...'' என்று சற்றுக் கோபமாகவே கூறினான் அம்மையப்பன்.

"அடடே! அம்மையப்பனுக்குக் கூடக் கோபம் வந்திட்டதுப்பா! நாம ஜாக்கிரதை யாயிருக்கணும்!'' என்று கண்களைச் சிமிட்டினான் கோபால்.

"பேரைப் பார்த்தியாடா ஐயாவுக்கு! அம்மையப்பன்! ஆனா ஐயாவுக்கு அம்மா வும் இல்லை... அப்பாவும் இல்லை...!'' என்று வேணு மேலே ஏதோ சொல் வதற்குள், அம்மையப்பன் பக்கத்திலிருந்த ஊன்று கோலை எடுத்துத் தயங்கியபடி எழுந்து நின்றான்.

"ஆமாம்! எனக்கு அம்மா அப்பா யாரும் இல்லைதான். நான் அனாதை தான்! ஊர்லே உள்ள நல்லவங்க ஆதர விலேதான் நான் வளர்ந்துகிட்டிருக்கேன்; படிச்சிக்கிட்டிருக்கேன். எல்லோருக்குமே



என் கதை தெரிஞ்சதுதானே? இதிலே என்ன கிண்டலும் கேலியும்! இந்த அனாதையும் நீங்களும் ஒரே வகுப்பிலேதான் படிக்கிறோம். எனக்குக் கால் ஊனம்தான். புத்தி நல்லாத்தான் இருக்கு. அதனாலேதான் உங்க ரெண்டு பேரையும் விடதான் அதிக மார்க் எல்லாப் பாடத்திலேயும்.''

கோபத்தால் அம்மையப்பனுக்கு உடல் நடுங்கியது. வார்த்தைகள் குழறின. வேணுவும் கோபாலும் திகைத்துப் போய்விட்டார்கள்.

எப்போதுமே அம்மையப்பன் பயந்த சுபாவம் உள்ளவன்போல் இருப்பவனாயிற்றே? இப்படி ரோஷம் பொத்துக் கொண்டு வந்து விட்டதே என்பதுதான் அவர்கள் அதிர்ச்சிக்கும் ஆச்சரியத்துக்கும் காரணம்!


இருந்தாலும் அவன் கோபத்துக்கு அடங்கிப் போனவர்கள் போல அவர்கள் காட்டிக் கொள்ள விரும்பவில்லை.

"நீ நல்லாப் படிக்கிறவனா இருக்கலாம். ஆனால் நீ எங்களைப் போல மேலே மேலே பெரிய பெரிய படிப்பெல்லாம் படிக்க முடியுமா? இவ்வளவுதான் உன்னாலே முடியும்! நிறையச் செலவு பண்ணி இதுக்கு மேலே உன்னை யார் படிக்க வைப்பாங்க? இதுக்கே இவ்வளவு திமிர் இருக்கே உனக்கு!'' என்று எரிந்து விழுந்தான் கோபால்.

"சரிப்பா! அதோ போர்! நாம படிச்ச பள்ளிக்கூடம். அஞ்சாவது வரைக்கும் அங்கே படிச்சோம். பள்ளிக்கூடம் நடத்தற சாமியார் லீவ் கழிஞ்சதும் ஆறாவது வகுப்பு தொடங்கப்போறாராம். அதுக்காகத்தான் மண் சுவர் எழுப்பிக் கொட்டகை போடறாரு. படிச்ச புள்ளைங்க, சில பெரியவங்க சேர்ந்து கட்டறாங்க பாரு. நீ இன்னா இங்கிருந்து வேடிக்கை பார்த்துக்கிட்டிருக்கே?'' என்று குத்தலாகக் கேட்டான் வேணு.

அவர்கள் அப்படிக் கேட்டதும் மீண்டும் குபுகுபுவென்று கண்ணீர் பொங்கியது அம்மையப்பனுக்கு.

"நாங்க, இனிமே இந்தக் குடிசைப்



''அம்மா! கணக்கு தப்பா போட்டேன்னு வாத்தியார் எனக்கு 'போனி டெய்ல்' போட்டு விட்டுட்டாரும்மா!''

– கே. சோமசேகர்

பள்ளிக்கூடத்திலே படிக்க மாட்டோம். ஆறாவது படிக்க நான் பட்டணம் போறேன். கோபால் அவன் மாமா ஊருக்குப் போய்ப் படிக்கப் போறான். பாவம்... வேற கதியில்லாதவங்கதான் இந்தக் கிராமத்திலேயே கிடந்து, கொட்டாப் பள்ளிக் கூடத்திலே விதியேன்னு படிச்சுக் கிட்டிருப்பாங்க. ஆமாம்... நீ ஆறாவது படிப்பே இல்லே...? படிக்கிறதுன்னா இடம் வேணுமே! எல்லோரும் சேர்ந்து கட்டறாங்களே? ஊனப் பய நீயும் ஏதாவது மண்ணைக் கிண்ணைப் பிசைஞ்சு கொடுக்கலாமே!''

"நன்றி மறக்கக் கூடாதுப்பா. போ... போயி ஏதாவது பண்ணு!'' என்று அவனைப் பிடித்துத் தள்ளினான் வேணு.

அம்மையப்பன் அப்படியே கீழே விழுந்து விடவில்லை. ஊன்று கோல் அவனுக்கு உதவியது. கலங்கிய கண்களோடு திரும்பிப் பார்த்தான் பிள்ளையாரை!

"கடவுளே இவங்களுக்கு நல்ல புத்தி கொடுங்க!'' என்று சொல்லிவிட்டு அங்கிருந்து புறப்பட்டான்.

"போறதுக்கு முன்னாடி இதைக் கேட்டுக்க, நாங்க ஒண்ணும் உன்னைப் போல, நன்றிகெட்டவங்க இல்லே. ஆறாவது இங்கே படிக்கப் போறது இல்லைதான். ஆனாலும் இந்தக் குடிசை போடறதுக்கு நாங்க மண்ணையும் கல்லையும் தூக்க முடியுமா? அதனாலே சாமியார்கிட்டே பணமாவே கொடுத்திட்டோம்! ஆனா நீ பாவம்... பணத்துக்கு எங்கே போவே? போயி... ஏதாவது வேலை செய்!'' என்று சொல்லிவிட்டு அவனுக்கு முன்னே நடந்தான் கோபால். பெருமிதத்தோடு அவனைப் பின் தொடர்ந்தான் வேணு. அம்மையப்பன் வேதனையோடு அங்கேயே நின்று விட்டான். அவன் கண்களில் ஆறாவது வகுப்புக்காக எழுப்பப்படும் மண் கட்டடம் உயர்ந்து நின்றது.


சற்று நேரம் வரை அப்படியே நின்று கொண்டிருந்தவன், எதிரே சாமியார் வந்து கொண்டிருந்ததைக் கவனித்தான். வேகமாகச் சென்ற வேணுவையும் கோபாலையும் நிற்க வைத்துச் சாமியார் ஏதோ கேட்டதைப் பார்த்தான். சாமியாரோடு அவர்களும் திரும்பி வந்தார்கள்.

அம்மையப்பனும் அவர்களை நோக்கி நடந்தான்.

சாமியார் அம்மையப்பனை நெருங்கி வந்தார். அன்போடு அவனை அணைத்துக் கொண்டார்.

"வேணு! கோபால்! ஆறாம் வகுப்பு நடத்த கீற்றுக் கொட்டகை கட்ட யார் யாரோ எப்படி எல்லாமோ உதவி செய்தீர்கள். நீங்கள் பணம் கொடுத்தீர்கள். இந்த அம்மையப்பன், பாவம் அனாதை! இவன் என்ன செய்தான் தெரியுமா? தென்னந்தோப்பு உள்ளவர்களிடத்திலே போய்க் கெஞ்சிக் கேட்டு, கீழே விழுந்து கிடந்த ஓலைகளை வாங்கி வந்து, தானே கீற்றுகளாக்கி முடைந்து ஒரு நூறு ஓலைக்கு மேலே கீற்று கொண்டு வந்து கொடுத்திருக்கிறான். அது மட்டும் இல்லாமல், மண்ணையும் கல்லையும் தூக்க வந்து விட்டான். நான்தான் அவன் ஊனத்தைக் கருதி, வேண்டாம் என்று தடுத்து விட்டேன். அதற்குப் போய் அங்கேயே அழுது விட்டான். தன் சக்திக்கு மீறிய செயலைச் செய்யக் கூடாது இல்லையா? இந்த அளவுக்கு அக்கறையோடு ஆர்வத்தோடு உதவி செய்ததே பெரிய காரியம் இல்லையா? நீங்கள் எல்லாரும் ஒரு குறையும் இல்லாமல் வாழ வேண்டும். படிக்க வேண்டும்'' என்று வாழ்த்தினார் சாமியார்.

வேணுவும் கோபாலும் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டார்கள். அம்மையப்பன் கண்களைத் துடைத்துக் கொண்டு சாமியாரை நோக்கிக் கைகூப்பினான்.



முனிவர் காட்டிய வழி!



வசந்த வனத்து மேற்பார்வையாளன் சோலையன் சொன்ன செய்தி மன்னரைத் திடுக்கிட வைத்தது.

நந்தவனத்தின் வடமேற்குக் கோடியில் ஒரு நச்சு மரம் இருக்கிறதாம். அந்த மரத்தில் உட்காரும் பறவைகள் இறந்து விடுகின்றனவாம்! விதைகள் வெடித்து சிதறி ஆற்றில் விழுந்து மீன்கள் செத்துக் கொண்டிருக்கின்றனவாம். அந்த ஆறு, தலை நகரை நோக்கி வருவதால், நகருக்கும் நாட்டுக்கும் ஆபத்து ஏற்பட வாய்ப்பு இருக்கிறதாம்!

"உடனே வெட்ட ஏற்பாடு செய்திருக்கலாமே?" என்றார் மன்னர்.

"நேற்று முயற்சி செய்த என் மகன் மாரப்பன் மூர்ச்சையாகி இப்போதும் மரணத்தோடு போராடிக் கொண்டிருக்கிறான்" என்ற சோகப் பதில் வந்தது சோலையனிடமிருந்து.

"செடியாகியிருக்கும்போது கவனித்து—" என்று தொடங்கிய மன்னர் அத்துடன் நிறுத்திக் கொண்டார். 'பெரும்பாலான தீமைகள் வளர்ந்து பெரிதான பின்தான் வெளியே தெரிகின்றன' என்பதை அவர் அனுபவத்தில் அறிந்திருந்தார்.

அவசரம் அவசரமாகக் கூடிய கொலு மண்டபத்து ஆலோசனைக் குழுவில், இந்த நச்சு மரம் பற்றி விவாதிக்கப்பட்டது.

"இதை எப்படியாவது அடியோடு அழித்து ஒழித்து விட வேண்டும்," என்று எல்லோருமே சொல்லினர். "எப்படி?" என்று மட்டும் எவரும் சொல்லவில்லை!

"இதுவரை வடகிழக்குப் பருவக்காற்றுக் காலம்; காற்று எதிர்த் திசையில் போய்க் கொண்டிருந்தது. இரண்டு நாளில் தென்மேற்குப் பருவக் காற்று தொடங்கும். அப்போது நச்சுக் காற்று நம் நகர்ப்பக்கம் வீசும். வீசினால் காக்கை, குருவி, மாடு, மக்கள் அத்தனைக்கும் ஆபத்து" - என்ற செய்தி இளவரசன் எழிற்கோவனுக்குத் தெரிந்தது. நேரே தன் குருநாதரிடம் சென்று ஆலோசனை கேட்டான்.

"அக்னி கோபர் என்று ஒரு முனிவர்; தெய்வநிலை பெற வேண்டும் என்பதற்காக மலையில் பனிக்குகையில் இருந்து பல

வி. ஹரிஹர சுப்ரமணியன்

நாட்கள் தவம் பண்ணியவர். இப்போது அவர் சர்ப்பகிரி மலையின் அடிவாரத்திற்கு வந்திருக்கிறார். தாவரங்களையும், விலங்குகளையும் பற்றி நன்கு தெரிந்தவர் அவர். யாராவது அவரிடம் போய் இந்த நச்சு மரத்தை அழிக்கும் வழியைக் கேட்டு அறிந்து வரலாம்" என்று யோசனை கூறினார் குருநாதர்.



''யாராவது என்ன குருவே? நானே போய் வருகிறேன்,'' என்று கிளம்பிய எழிற்கோவனை நிறுத்தினார் குருதேவர்.

"அக்னி கோபர் மகா கோபக்காரர். மிக எளிதில் கோபவசப்படுகிறவர். கோபத்தில் உடனே சாபமும் கொடுப்பவர் என்றும் பெயர் வாங்கி இருப்பவர்" என்று குருதேவர் சொன்னதைக் கேட்டு, 'இளவரசன் சிரித்தான்.

"பிறர்க்கு நேரும் துன்பத்தைத் தனக்கே நேருவதுபோல உணர்ந்து அதை நீக்கத் துணியாவிட்டால் அறிவினால் பயனே இல்லை என்று நீங்கள்தானே கற்றுத் தந்தீர்கள்?'' என்று சொல்லிவிட்டு, பஞ்ச கல்யாணிக் குதிரையில் ஏறி, சர்ப்பகிரியை நோக்கிப் பறந்தான் இளவரசன்.

முனிவரைச் சந்திக்க எழிற்கோவலன் புறப்பட்டுச் சென்ற செய்தி, நகரத்தையே பரபரப்புக்குள்ளாக்கியது. குறிப்பாக அவனுடைய அன்னை மகாராணியார் ஆனந்தவல்லி துடியாய்த் துடித்தார். மரத்தை அழிக்க மார்க்கம் தேடப் போனவன் தன்னையே அழித்துக் கொண்டு விடுவானோ என்று பதைபதைத்தாள் அந்த அன்னை.

ஏறி வந்த குதிரையைத் தொலைவிலேயே நிறுத்திவிட்டு, அந்த அக்னிகோபர் இருப்பதாக அறிந்த இடத்திற்கு எழிற்கோவன் சென்றான்.

நிறை அமாவாசை நாள். இருள் இறுகி இருந்தது. ஒரு மரத்தடியில் இருவர் இருப்பதைக் கண்டான். முனிவரின் சீடர்களாக இருக்கலாம் என உணர்ந்தான்.

''முனிவர் பிரானைத் தரிசிக்க வந்தேன்''. என்று மிகப் பணிவாகச் சொன்னான் இளவரசன்.

சீடர்களில் ஒருவர், எதிரே சுட்டிக் காட்டினார்.

அங்கே...

செங்கற் காளவாய் போல ஒன்று, அப்போதுதான் பற்றி எரியத் தொடங்கியிருந்ததைக் கண்டு திடுக்கிட்டான் இளவரசன்.

"இளவரசே, முனிவர் நெருப்புக்குள் இருந்து தவம் செய்கிறார்!'' என்றார் அந்தச் சீடர், எந்த விதமான உணர்ச்சியும் இல்லாமல்!

"பனிக்கட்டி, உயிரற்றுப் போன உடல்களையும் அழுகிப் போகாமல் காலம் காலத்துக்குக் காப்பாற்றும். நெருப்பு, எவ்வளவு வலியதையும் உருக்கிக் குழம்பாக்கி விடும்... இந்த முனிவர், இவர் இப்போது செய்து கொண்டிருப்பது விஷப் பரீட்சை..." என்று சொல்லிக் கொண்டே தாவிப் பாய்ந்து எரிந்து கொண்டிருந்த



விறகுக் கட்டைகளை அவசர அவசர மாகப் பிரித்து எறிந்தான் இளவரசன்.

அக்கினிச் சுடருக்குள்ளே முனிவர் தெரிந்தார். தவம் கலைந்த கோபம் அவரையே அக்கினி மயமாக்கி இருந்தது! அவருடைய பார்வையே தன்னை எரிப்ப தாக உணர்ந்தான் இளவரசன். அப்படியே சுடுதரையில் அவரை நோக்கிப் பணிந்து விழுந்தான்.

முனிவரின் கோபம் பின்னும் அதிகம் ஆகியது.

"எந்தக் கைகளால் என் தவ நிலையைக் கலைத்தாயோ, அந்தக் கைகளால் இனி நீ எதைத் தொட்டாலும் அது ஜ்வாலை கூட இல்லாமல் எரிந்து, சாம்பல்கூட இல் லாமல் போகட்டும். இது என் சாபம்...!!

சினத்தை அடக்க இயலாது கொதித் தார் அக்னி கோபர்.

இளவரசன் சிரித்தான். மிக எச்சரிக் கையாக இரு கைகளையும் விரித்து ஒன்றை ஒன்று தொட்டு விடாதபடி பாது காப்பு உணர்வோடு அவரை நோக்கி வணங்கினான்.

"நான் வேண்டி வந்த வரம் இதுதான் முனிவர் பிரானே!" - என் றான் கண்ணீர் மல்க. முனி வரின் சீடருக்கு அவன் சொன்னதன் பொருள் புரியவில்லை.

இளவரசன் பரவசச் சிலிர்ப்போடு." எங்கள் வனத்தில் ஒரு நச்சு மரம். அதன் காற்றுப் பட்டாலே உயிர்கள் கருகிவிடுகின் றன. அந்த மரத்தை அழிக் கத்தான் என்ன வழி என்று கேட்க முனிவரிடம் வந் தேன். முனிவரும் என் கைபட்ட எதுவுமே எரிந்து கருகி அடியோடு அழிந்து விடும் என்று கூறி விட் டார்... இது எப்படிச் சாபம் ஆகும்? நான் தேடி வந்தது இதைத்தானே? இது என்னைப் பொறுத்தவரை வரமே அல்லவா?" என்று சொன்னான்.

"அநுசரி, அந்த நச்சு மரத்தை அழிக்கும் முயற்சி யில் நீங்களே அழிந்து போனால்?" என்று அந்தச் சீடர் கேட்டார்.

"அழியப் போவது நான் ஒருவன் மட்டுமே! இருந்தாலும், அதனால் வாழப் போவது ஆயிரக்கணக்கான எந்நாட்டு மக்களலல்லவா? முடிந்தால் வாழ வைத்து வாழ்வோம், முடியாவிட்டால் நம்மை அழித்துக் கொண்டாவது மற்றவர்களை வாழ வைப்போம். இதுதான் நாங்கள் கற்றிருக்கும் பாடம்" – சொல்லிக் கொண்டே, இளவரசன் குதிரையின் அருகே போய், அதன் கடிவாளக் கயிற் றைப் பிடித்தான். கடிவாளம் கருகிவிட் டது!

முனிவர் தந்த சாபம்... அல்ல... அல்ல... வரம்! நினைவுக்கு வந்தவனாக குதிரையைத் தொடாமல் வசந்தவனத்து, நச்சுமரத்தை நோக்கி முழு மூச்சுடன் வேகமாக ஓடத் தொடங்கினான் இளவர சன்.

விடி வெள்ளி தோன்றிய நேரம், அமா வாசை இருட்டில் சில் வண்டுகள் 'கிர்ர்' ரிட்டுக் கொண்டிருந்தன. மகிபால மன்ன



"அதான் ஸ்கூல்ல சொன்னபடியே எல்லா 'நோட்புக்'ஸும் வாங்கித் தந்துட்டேனே. அப்புறம் எதுக்கு 'எக்ஸ்ட்ரா'வா ரெண்டு நோட்டுக் வேணும்கறே?"

"அப்பப்போ கப்பல், ராக்கெட்டெல்லாம் செய்யறதுக்காக பேப்பர் கிழிச்சுக்கத்தாம்பா!"

— ஜெயாப்ரியன்

ரும், ராஜகுருவும் வசந்த வனத்துக்குச் சற்றுத் தொலைவில் இளவரசனின் வருகைக்காகக் கவலையோடு காத்திருந்தனர். சோலையன் தரையில் காதை வைத்து, குதிரை வரும் குளம்படி ஓசை கேட்கிறதா என்று கவனித்தான்.

"நச்சு மரத்தை அழிக்க வழி தெரிந்து கொண்டு வராவிட்டாலும் பரவாயில்லை. போனவன் எந்தச் சேதமும் இல்லாமல் முழுசாகத் திரும்பினால் அதுவே போதும்" என்று தவித்தார் மகிபால மன்னர்.

"யாரோ ஓடி வரும் ஓசை கேட்கிறது மகாராஜா" என்று சோலையன் சொல்லிக் கொண்டிருந்தபோதே.... சிறுத்தையின் வேகத்தில் இளவரசன் ஓடிவந்து கொண்டிருந்ததை நட்சத்திர வெளிச்சத்தில் அவர்கள் பார்த்தனர்.

"ஏறிச் சென்ற குதிரை எங்கே எழிற்கோ?" என்று மன்னன் கேட்டுக் கொண்டிருந்தபோதே,

"சர்ப்பகிரி அடிவாரத்தில் நம் குதிரையை விட்டு வந்திருக்கிறேன். யாரையாவது போய்க் கொண்டு வரச் சொல்லுங்கள்" என்று சொன்னவனை அப்படியே பற்றிக் கொள்ளப் பாய்ந்தார் குருதேவர்.

'தயவு செய்து என்னைத் தொடாதீர்கள்' என்று பனிரெனத் துள்ளி ஒதுங்கினான் எழிற்கோ.

"ஏன்? எதற்காக?" - அரசன், குருதேவர், சோலையன் மூவருக்குமே அவன் ஏன் தன்னைத் தொடவிட மறுக்கிறான் என்பது புரியவில்லை. திகைத்தனர்.

"நச்சு மரத்தை அழிக்க அக்னிகோபர் மார்க்கம் சொன்னாரா?"- குருதேவர் கேட்டார்.

"சொல்லி விட்டார்; என் கைகளால் எதைத் தொட்டாலும் அது 'ஜ்வாலைகூட இல்லாமல் கருகி, சாம்பல் கூட இல்லாமல் அழியும்" என்று அருள் செய்திருக்கிறார் மகாமுனிவர்' - என்று இளவரசன் சொன்னதைக் கேட்டதும், அப்படியே பிரமித்து நின்றவர் ராஜகுருவும், மன்னன் மகிபாலனும்.

"அந்தக் கோப முனிவர் சாபம் கொடுத்து விட்டாரா இளவரசே?" என்று சோலையன் அலறினான்!

"நச்சு மரத்தை அழிக்க வழி கேட்கத் தானே முனிவரிடம் போனேன்? அவரும் என் கைபட்டவுடனே எதுவும் அழியும் என்று சொல்லி விட்டார். இது எப்படிச் சாபமாகும்? உண்மையில் இதுவே ஒரு நல்ல வரம் அல்லவா?" என்று சொல்லிக் கொண்டே நச்சு மரம் இருந்த திசையில் விரைந்தான் இளவரசன்.

விரைந்த இளவரசன் கூடவே போக முனைந்த மன்னனை ராஜகுரு தடுத்தார்.

"இளவரசனுக்கு எந்தத் தீமையும் நேராது. தர்மம் ஒருக்காலும் அழியாது" என்று அவர் சொல்லிக் கொண்டிருந்த போதே, பாய்ந்தோடி வந்த பஞ்சகல்யாணிக் குதிரையிலிருந்து ஒரு முனிவர் குதித்தார்! ஆம், அதே கோபக்கார அக்னி கோபர்தான்.

"எங்கே அந்த இளைஞன்?" என்று பரபரத்தார் முனிவர்.

"எதற்காக எங்கள் இளவரசரைத் தேடுகிறீர்கள்? தாங்கள் கொடுத்த சாபம் எப்படிப் பலிக்கிறது என்று நேரில் பார்த்து மகிழ வந்தீர்களா!" என்று ராஜகுரு கொதித்தார்.

"வெற்றி, வெற்றி, நச்சு மரம் ஜ்வாலை கூட இல்லாமல், தொட்டதும் அப்படியே கருகி, சாம்பல்கூட இல்லாமல் அழிந்து விட்டது"! - மகிழ்ச்சி பொங்கக் கூவிக் கொண்டே குதித்து ஓடி வந்தான் இளவரசன்.

அந்த இடத்தில் அக்கினிகோபரை இளவரசன் எதிர்பார்க்கவில்லை. அதனால் முதலில் திகைத்தான். பிறகு, மகிழ்ச்சி கலந்த அதிர்ச்சியோடு கைகள் ஒன்றை ஒன்று தொட்டுக் கொள்ளாமல் முழந்தாழிட்டு முனிவரைப் பணிந்தான்.

"தாங்கள் அருளிய வரத்திற்கு நன்றி முனிவர் பிரானே..." என்று கண்கள் பனிக்கத் தழுதழுத்தான்.

"நான்தான் உனக்கு நன்றி சொல்ல வேண்டும் இளவரசே. தெய்வ நிலை பெற வேண்டும் என்பதுதான் என் லட்சியம், எத்தனையோ முறை முயன்றேன்; இன்னும்கூட முயன்று வருகிறேன். எத்தனையோ வகைகளில் தவம் செய்தேன். இன்னும் செய்து வருகிறேன். ஆனால் இன்னமும் முழுமையான வெற்றி பெற முடியவில்லை. ஆனால் நீயோ...!" சொல்லிக் கொண்டே முனிவர், இளவரசனைத் தீர்க்கமாகப் பார்த்தார்.

"இவ்வளவு சின்ன வயதில், தெய்வ நிலை பெறுவதற்கான சுருக்கு வழியைக் கற்றுக் கொண்டிருக்கிறாய்!" என்று மகிழ்ச்சிப் பெருக்கோடு சொன்னார் முனிவர்.

முனிவர் என்ன சொல்கிறார் என்று அங்கிருந்த இளவரசன் உட்பட எவருக்கும் புரியவில்லை. எல்லோரும் வியப்போடும் திகைப்போடும் முனிவரைப் பார்த்தனர்.

முனிவர் தொடர்ந்தார்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்-வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" - என்கிறார் வள்ளுவர், 'வாழ்வாங்கு வாழ்வது என்பது என்ன என்பதை இளவரசர் எனக்குப் புரிய வைத்து விட்டார்! பிறரை வாழ வைப்பதற்காகத் தன்னை அழித்துக் கொள்ளவும் தயாராக இருக்கும் தியாக நிலையே வாழ்வாங்கு வாழும் வாழ்க்கை!" என்றார் முனிவர்.


"நீங்கள் கொடுத்த சாபம்?"- தன் சந்தேகத்தை மன்னன் தெளிவுபடுத்திக் கொள்ள விரும்பினான்.

"அது பலிக்கும்... ஒரு திருத்தத்தோடு" என்றார் முனிவர்.

"என்ன திருத்தமோ?-" ராஜகுரு.

"இவன் கைபட்டால், தீயதெல்லாம் மட்டும் அழியும். நல்லதெல்லாம் தழையும்" என்றார் அவர் சிரித்துக் கொண்டே!

"தழைக்கும்" என்று திருத்தினார் ராஜகுரு.



இரவு நேரம் வந்தது
விளக்கு ஒன்றை ஏற்றினேன்!
எரியும் விளக்கை நாடியே
விட்டில் ஒன்று வந்தது.

இரைதான் என்று எண்ணியே
விளக்கைச் சுற்றிச் சுற்றியே
விரைந்து சுடரைப் பிடிக்கவே
வீறு கொண்டு அலைந்தது.

அலைந்த அந்த விட்டிலும்
அனலை நெருங்கித் தொட்டது;
உலையில் கொதிக்கும் நீரெனத்
துள்ளித் தரையில் வீழ்ந்தது.

இறுதியிலே விட்டிலோ
எரிந்து தீயில் இறந்தது.
அறிவைத் தவறாய்ச் செலுத்துவோர்
மடிந்து வீழ்வது உறுதியே!

கெங்கை பாலதா

பக்திப் பரவசக் கதைகள்: கங்கா ராம மூர்த்தி பக். 80, ரூ/15-, கங்கை புத்தக நிலையம், 13 தீனதயாளு தெரு, தி.நகர், சென்னை-17.

பாலருக்கும், பெரியவர்களுக்கும் பயன் தரும் சுவையான நூல். கணேச கீதை தொடங்கி அனுமன் பெற்ற அருள் வரை - மொத்தம் 16 கதைகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. எல்லாக் கதைகளுமே, எல்லாரையும் கவர்வன என்றாலும் இந்தக் கதைகளுள் சில மிக அருமையாக உள்ளன.

பகவத் கீதை பற்றி நாம் அறிவோம். கணேச கீதை என்ற முதல் கதை, பிரம்மா கணேச கீதை என்னும் தத்துவ ஞானத்தை வியாசபகவானுக்கு அருளியதை விளக்குகிறது. எட்டாம் கதையான, 'நதியாகப் பிறந்த நங்கை அகத்திய முனிவரின் துணைவியான லோபா முத்திரை அவர் தம் கமண்டலுவின் வாய்வழி காவிரியாய்ப் பெருக்கெடுத்து ஓடியதை விவரிக்கிறது. ஒன்பதாம் கதை துலாபாரம். 'கண்ணன் பொன்னுக்கோ, பொருளுக்கோ அடிபணிபவன் அல்லன். அன்புக்கும் பக்திக்கும் மட்டுமே அடிபணிபவன்' என்பதைத் தெளிவாக்குகிறது. 'அனுமன் பெற்ற அருள்' என்னும் கதையில், இந்திரனின் வஜ்ராயுதத்தால் வாயுபுத்திர னின் அனுவின் (கன்னத்தில்) அடி பட்டதால் அவன் அனுமன் எனும் பெயர் பெற்றதையும், அந்த அனுமனுக்கு இந்திரன், மார்த்தாண்டன், பிரம்மா, விசுவக்ர்மா போன்ற தேவ புருஷர்கள் உரிய வரங்கள் வழங்கியதையும் விவரிக்கிறது.

மொத்தத்தில் இது ஒரு சுவையான பயன் மிக்க நூல். குழந்தைகள் படிக்க ஏற்ற நூல்.

சோதனைகளைச் சாதனைகளாய் மாற்றுங்கள். பிரியா ஷாந்த குமார், பக். 140, மணிமேகலை பிரசுரம், 4. தணிகாசலம் சாலை, தியாகராயநகர், சென்னை-17.

பசித்தவருக்கு உணவு; நோயுற்றவருக்கு மருந்து இன்றைய இளைய தலைமுறையினருக்கு தன்நம்பிக்கை தரும் செய்திகள், கவிதைகளாக, கதைகளாக, கட்டுரைகளாக என்று எந்த வடிவிலும் இருக்கலாம். நோக்கம் தன்நம்பிக்கை தருவதாக இருக்க வேண்டும்.

இப்படித் தன்னம்பிக்கை தரும் செய்திகளைத் தக்க ஆதாரங்களுடன் மிக அழகாகத் தொகுத்துத் தருகிறார் ஆசிரியர்.

மின்சாரம் என்பது நமக்கு இப்போது அன்றாட அத்யாவசியத் தேவையாகிவிட்டது முதன் முதலில் இந்த மின்சாரத்தைப் பல் வகையிலும் பயன் படத்தக்கது என்பதைக் கண்டுபிடித்துத் தந்தவர் தாமஸ் ஆல்வா எடிசன். ஒரு கண்டுபிடிப்பில் ஈடுபட்ட போது அவர் ஆயிரம் முறை தோற்று விட, 'இத்தனை தோல்விகளுக்குப் பின்னும் இந்த ஆராய்ச்சி தேவையா? என்று உதவியாளர் கேட்க, 'இதைச் செய்வதற்கு இந்த ஆயிரம் முறைகளும் தவறானவை என்பதைக் கண்டுபிடித்திருக்கின்றேனே? இதுவே வெற்றிதானே? என்றாராம் எடிசன்.

'சோதனைகள் இல்லாமல் சாதனைகள் இல்லை. பிரச்சனைகள் இல்லாமல் வெற்றிகள்



இல்லை' என்பன போன்ற பொன் மொழிகள் ஒவ்வொரு கட்டுரையின் இறுதியிலும் மகுடமணிகளாக ஒளிவிடுகின்றன. மொத்தம் 54 தலைப்புகள். இரண்டு பகுதிகள். இந்த நூலில் தரப்பட்டிருக்கும் செய்திகள் அத்தனையும் உள்ளத்திற்குத் தெம்பு தரும் டானிக் மாத்திரைகள்!

யானையாரின் துலாபாரம், ரேவதி, பக். 57, விலை ரூ.12/- பழனியப்பா பிரதர்ஸ், பீட்டர்ஸ் சாலை, சென்னை-14.

- பஞ்ச தந்திரக் கதைகள் இளைய தலைமுறையினருள் எத்தனை பேருக்குத் தெரியும்? விலங்குகளையே கதாபாத்திரங்களாக வைத்து, இன்றைய பிரச்சனைகளை மையமாகக் கொண்டு, பின்னப்பெற்ற அழகழகான கதைகளின் தொகுப்பு இந்த யானையாரின் துலாபாரம். ஏற்கனவே கோகுலம் இதழில் வெளிவந்து குழந்தைகளின் மகத்தான வரவேற்பைப் பெற்றவை. ஒவ்வொரு கதையிலும் பொருத்தமான படங்கள் இடம் பெற்றுள்ளன.

மொத்தம் பத்துக் கதைகளில் எத்தனை கதைகள் உங்களுக்குப் பிடித்திருக்கின்றன என்று குழந்தைகளிடம் கேட்டோம்.

"எல்லாக் கதைகளும்" என்று ஏகோபித்த பதில் வந்தது.

"ஏன்?"

"ஏனென்றால் எல்லாக் கதைகளும் கொஞ்சம்கூட போர் அடிக்காமல் வேகமாகப் போகின்றன!"

"கதைகள் பிடித்திருப்பதற்கு இந்த விறுவிறுப்பு மட்டும்தான் காரணமா?"

"இல்லை ஒவ்வொரு கதையிலும் ஒரு நீதி பொதித்து வைக்கப்பட்டுள்ளதும் காரணம்."

"இருக்கும் பத்துக் கதைகளில் உங்களுக்கு மிக மிக மிகப் பிடித்தது என்று எதைக் குறிப்பிடலாம்?"

"காட்டில் கலப்படம் கதையும், கடைசி கதை

யான ' உ மு ஜா, செ கதையும்"

"ஏன்?" என்னும் கேள்விகளுக்குக் கிடைத்த பதிலைச் சொன்னால் குறைந்தது பத்துப் பக்கங்களுக்கு வரும்! மொத்தத்தில் 'யானையாரின் துலாபாரம்' சுவை, பயன், அழகு நிறைந்தது.

கண்மணிக் கதைகள், எஸ். திருமலை, பக்.112, ரூ.22/- கங்கை புத்தக நிலையம், 13 தீனதயாளு தெரு, தி.நகர், சென்னை - 17.

கண்ணைக் கவரும் கச்சிதமான அமைப்பு, மொத்தம் 12 கதைகள், கதைக்கு ஒன்றாக மொத்தம் 12 படங்கள் - இதில் மனிதர்களைப் பற்றிய விலங்குகளைப் பற்றிய, பறவைகளைப் பற்றிய கதைகளுடன் சரித்திரக் கதைகள் என கதம்பமாக பல்சுவைக் கதைகளும் இருக்கின்றன.

ஒன்றைப் பெற வேண்டுமென்றால் ஒன்றை இழந்துதான் ஆக வேண்டும். எல்லாவற்றுக்கும் கவலைப்பட்டால் உலகில் வாழவே முடியாது - போன்ற அறிவுரைகள் ஆங்காங்கு கதைகளில் பாயசத்து முந்திரிப் பருப்புகள்போல் இருக்கின்றன.

'இந்த 12 கதைகளில் உங்களை மிக மிகக் கவர்ந்த கதை எது? என்று குழந்தைகளைக் கேட்டபோது, ஏறத்தாழ எல்லாக் குழந்தைகளும் 'எண்ணும் எழுத்தும்' - கதையைக் குறிப்பிட்டார்கள்.

'பிறபகல் விளையும்' கதைகூடப் பிள்ளைகளைக் கவரவே செய்கிறது. இருப்பினும் படிப்பிலும் மட்டுமல்லாது பாடப் புத்தகத்தை அட்டை போட்டு பெயர் எழுதி, ஒழுங்காக வைத்துக் கொள்வது பள்ளிக்குச் சுத்தமாக ஒழுங்காக வருவது வரை அக்கறை எடுத்துக் கொள்ளும் ஒரு நல்ல ஆசிரியரை உதாசினப் படுத்தி விட்டு 'பிள்ளைகள் எப்படிப் போனாலும் போகட்டும்' என்று தன் நலத்திலேயே அக்கறை காட்டும் ஆசிரியரையும்கூட மாணவர்கள் விரும்பினார்கள் என்பது நெருடுகிறதே!

அழகான அமைப்பு; சுவையான கதைகள்


'புவனா தேடிய புதையல்' மதி ஒளி, பக். 124, விலை. ரூ.30/- கங்கை புத்தக நிலையம், 13, தீனதயாளு தெரு, தி.நகர், சென்னை - 17.

இப்படி ஒரு புத்தகத்தை இதுவரை படித்ததே இல்லை என்று பெருமை கொள்ளும்படியான நூல் ஏற்கனவே 'கோகுல'த்தில் தொடராக வந்தபோது பிள்ளைகளைப் போலவே பெரியவர்களும் விரும்பிப் படித்த சிறுவர் நாவல்.

'மணியன் செல்வனின் அழகழகான படங்கள். முழுப்பக்க வண்ணப் படங்கள் அதுவும் வழு வழு தாளில்! புத்தக பைண் டிங்கின் உட்புறத்திலும் கூட அழகழகான வண்ணப்படங்கள்!

உட்கார்ந்து படிக்கலாம் என்ற உணர்வை உண்டாக்காமல், கண் முன் நடக்கும் நிகழ்ச்சிகளைக் காண்பது போன்ற முழுமையை ஏற்படுத்துகிறது. முதுபெரும் எழுத்தாளர் 'சாவி' அவர்கள் இந்த நூலுக்குத் தந்துள்ள அணிந்துரை உண்மையில் ஒரு மணி மகுடமே.

'புவனா தேடிய புதையல்'- சிறுவர் இலக்கியத்தில் ஓர் அற்புதப் புதையல் குழந்தைகளுக்கு இது போன்ற அருமையான சுவையும், பயனும் மிக்க புத்தகங்களைப் பரிசாக வழங்க வேண்டும்.



"தேளும், தலைமுடியும் ஒண்ணுடா?"
"எப்படிடா?"
"ரெண்டுமே கொட்டுமே?"

— பா. ஜெயக்குமார்

'காட்டில் தேர்தல்' ஆர்.பி.சாரதி , பக். 12, ராஜேஸ்வரி புத்தக நிலையம், 22. 6-வது தெரு, பக்தவத்சலம் நகர், பழவந்தாங்கல். சென்னை - 600 014.

இந்த நூலின் ஆசிரியர் திறமை மிக்க தலைமை ஆசிரியராக இருந்தவர். எனவே பிள்ளைகளின் மனவளத்தையும், குண நலத்தையும், தம் அனுபவத்தால் அறிந்திருப்பவர்; பல பத்திரிகைகளில்., சிறுவர்களுக்காக எழுதி அனுபவமும் கைவரப் பெற்றவர் என்பதை நூல் தெளிவாக்குகிறது. 'இந்தப் புத்தகத்தில் எந்தக் கதை உங்களுக்கு, மிக மிகப் பிடித்திருக்கிறது?' என்று குழந்தைகளிடம் கேட்டபோது. 'பீர்பால்' பீர்பால்தான்' கதைக்கே பெரும்பான்மையினரின் வாக்குகள் கிடைத்தன. 'கடவுள், பக்தர்களுக்கு வேறு யாரை யும் அனுப்பி உதவி புரியாமல், தாமே நேரில் வந்து உதவி அருளுவது ஏன்?' எனும் வினாவுக்கு. பீர்பால் அனுபவ பூர்வமாக அக்பரை உணர வைத்த திறமையைக் குழந்தைகள் மகிழ்ந்து பாராட்டினர்.


கதைகள் படங்களுடன் வெளியிடப் பெற்றிருந்தால் இன்னும்கூட மிகச் சிறப்பாக இருந்திருக்கும்.

'பேரறிவாளர்களின் பொன்மொழிகள்' கவிஞர் எஸ். இரகுநாதன், பக். 152, விலை ரூ. 29/- மணிமேகலைப் பிரசுரம், 4, தணிகாசலம் சாலை, சென்னை-17.

கிருஷ்ண பகவான், இராமகிருஷ்ண பரம ஹம்சர், சுவாமி விவேகானந்தர், வள்ளலார். சுவாமி சிவானந்தர், காஞ்சிப் பெரியவர். குன்றக்குடி அடிகளார் போல பல பெரியோர்கள் அருளியுள்ள பொன்மொழிகள், அழகாகத் தொகுத்துத் தரப் பெற்றுள்ளன.

தேவ அமுதத்தின் ஒவ்வொரு துளியும், சுவையும் பயன் தருமாம். அதுபோலத்தான் இந்த நல்ல நூலில் உள்ள எல்லாப் பொன்மொழிகளும் சுவையும் பயனும் தருகின்றன.

— ரா. பொ



வாருங்கள்!

நேரு நேரு நேரு நமது
நேரு மாமாவை - நம்
நெஞ்சக் கோயில் வைத்து நாளும்
வழி படுவோமா?
பா ரதத்தை மீட்டுக் காக்க
மீண்டும் வருக - என்று
பணிந்து மனம் உருகி நின்று
வேண்டிக் கொள்வோமா?

உலகப் பெரும் தலைவ ராக
மலர்ந்த பொழுதும் - நேரு
உள்ளத் திலே குழந்தை கட்கே
முதல் இடம் தந்தார்!
குழந்தை களின் வேண்டு கோளை
மறுக்கவே மாட்டார் - மாமா
கொஞ்சம்கூடத் தயக்கம் இன்றி
மீண்டும் வருவார்!

உலகத் துக்கே காந்தி ஞான
ஒளியைக் காட்டவும் - இங்கே
உள்ள சிக்கல் அத்த னையும்
ஒழித்துக் கட்டவும்
உள்ள படி மாமா நேரு
உடனடித் தேவை - இதை
உணர்ந் திருப்போர் வேண்டிக் கொள்ள
உடனே வாருங்கள்!

- ரா. பொன்ராசன்



ஈட்டி முடியார் சாபம்!

கடந்த இதழில்....

ரமணியும் பொன்முடியும் உயிர் நண்பர்கள். சென்னையில் விடுதியில் தங்கிப் படித்து வந்தார்கள். ரமணியின் தந்தை கல்கத்தாவில் பிரபல வங்கி ஒன்றின் மேலாளர். அடிக்கடி மாற்றலாகும் பணி என்பதால் படிப்புக் கெடாமல் இருக்க சென்னையில் படித்து வந்தான். பொன்முடியின் தந்தை ஏலகிரி மலையில் பெரிய எஸ்டேட் முதலாளி. அவரது ஐம்பதாவது பிறந்தநாளில் கலந்து கொள்ள ரமணியையும் அழைத்து வருகிறான் பொன்முடி. வரும் வழியில் பாறை சரிந்து விட்டதால் சுற்றிக் கொண்டு வந்து அவர்கள் மேல்கேம்புக்கு வந்து சேரும் போது இரவு பன்னிரண்டு மணியாகி விடுகிறது. பொன்முடியின் தந்தையும் அண்ணனும் வரவேற்கிறார்கள். தனக்கு ஏற்பாடு செய்யப் பட்டுள்ள ஓட்டல் அறையில் ரமணி தங்குகிறான். காலையில் பார்த்தபோது பொன்முடியின் தந்தைக்கு பரிசளிக்க அவன் வாங்கி வந்திருந்த புத்தம்புது விலைமிக்க சிட்டிசன் கைக்கடிகாரம் காணவில்லை என்பதை அறிகிறான். போலீசுக்குப் புகார் தர அவன் முயன்ற போது பொன்முடி தடுத்து விடுகிறான். அவன் தன் தந்தையின் விருந்தாளி என்பதால், அவருடைய அனுமதி இன்றி போலீசில் புகார் செய்யக் கூடாது என்று தடுக்கிறான். பொன்முடியின் தந்தையிடம் விஷயத்தை விளக்குகிறான் ரமணி. கண்கண்ட தெய்வமாகத் தான் வணங்கும் ஈட்டி முடியார் என்ற சாமியாரிடம் அனுமதி கேட்க வேண்டும் என்கிறார் அவர். இனிமேல் படியுங்கள்.

சின்னபாபு

"நானே போலீசில் புகார் பண்றேன். ஆனால் ஈட்டி முடியாரிடம் அனுமதி கேட்ட பிறகு பண்ணிடலாம்" என்று பொன்முடியின் தந்தை கூறியதும் ரமணியால் தட்ட முடியவில்லை.

"இது மதசம்பந்தமான ஆன்மீக நடவடிக்கை என்றால் ஈட்டி முடியாரிடம் அனுமதி கேட்கலாம். ஆனால், இது திருட்டு சமாசாரமாச்சே? இதற்குப் போய் அவரால் என்ன அறிவுரை தர முடியும்!" என்று மனதிற்குள் ரமணி எண்ணிக் கொண்டான். ஆனால் தன் கருத்தை அவன் வெளியிடவில்லை. அதற்கு இரண்டு காரணங்கள். முதல் காரணம், பொன்முடியின் மனம் வருந்தும். அதைச் செய்ய அவன் தயாராக இல்லை. இரண்டாவது, விருந்தாளியாக வந்த இடத்தில், அருமை நண்பனது

திக்....! திக்....! திக்.... கதைகள்! பயமின்றிப் படியுங்கள்!



தந்தையின் நம்பிக்கையில் அவன் தன் மாற்றுக் கருத்தை வெளியிட விரும்பவில்லை.

இதுவே தனது தந்தையாக இருந்தால் ரமணி இப்படிச் செய்ய அனுமதித்திருக்க மாட்டான். கடுமையாக அவருடன் விவாதித்து தன் கருத்தை ஏற்கும்படி அவரை மாற்றியிருப்பான். இப்பொழுது நண்பனது கருத்துக்கும், அவன் தந்தையாரது கருத்துக்கும் எதிராக நடக்க அவன் தயாராக இல்லை. தன் போக்கை நினைத்தபோது இப்போது ரமணிக்கே அதிசயமாக இருந்தது.

"தம்பி, பொன்முடியோடு எஸ்டேட்டையெல்லாம் சுற்றிப்பார். எப்போ தரிசனம் கிடைக்கும்னு சாமியாரிடம் அனுமதி கேட்டு தகவல் அனுப்புறேன். இன்று கிடைத்தால், இன்று இரவே போய்ப் பார்க்கலாம். வாட்ச் சமாச்சாரத்தை மறந்திடு. இனிமே அது என் பொறுப்பு. இல்லே இல்லே, கண்கண்ட தெய்வமாகிய ஈட்டிமுடியார் பொறுப்பு. நானே விழாவுக்கு முன்னால் அவரை தரிசனம் பண்ண நினைச்சேன். இப்போ, ஏண்டா தாமதம் பண்றே? உடனே வந்து பார்னு அவரா நானே இப்படி ஒரு காரணத்தை ஏற்படுத்தி வரவழைக்கிறார்! எல்லாம் அவர் திருவிளையாடல்!" என்றார் பொன்முடியின் அப்பா.

மிகவும் கஷ்டப்பட்டு எதிர்ப் பேச்சுப் பேசாமல் இருந்ததோடு, "அதற்கென்ன அங்கிள், இந்த சாக்கில் எனக்கும் அவரது தரிசனம் கிடைச்ச

மாதிரி இருக்குமே?" என்று அவருக்குப் பிடித்தமான முறையில் பதிலளித்தான் ரமணி.

அவருக்கு உச்சி குளிர்ந்து விட்டது. "எப்பேர்ப்பட்ட பிள்ளை!" என்று மக னிடம் புகழ்ந்து கொண்டார்.

டிபன் சாப்பிட்டதும் ரமணியை அழைத்துக் கொண்டு எஸ்டேட்டை சுற்றிப்பார்க்கக் கிளம்பினான் பொன்முடி. ஏலக்காய் காய வைக்கும் கோட்டகைக்கு அவர்கள் வந்து பகல் உணவைச் சாப் பிட்டுக் கொண்டிருந்தார்கள். அப் பொழுதுதான் தகவல் வந்தது.

"ஈட்டி முடியார் இரவு பதினோரு மணிக்கு மேல் சந்திக்க, தரிசனம் தர அனு மதித்துள்ளாராம்!"

"பார்க்க வரலாம்னு தரிசனத்திற்கு சம் மதம் தந்த பிறகு இரவு பதினோரு மணிக்கு மேல்தான்னு ஏன் சொல்லணும்? அதற்கு முன்னாலேயே நேரத்தோட தரி சனம் தந்திடக் கூடாதா? நமக்குத் தூக்க முழிப்பதும் மிச்சமாகும். அவர் என்ன சொல்கிறார் என்பதைக் கேட்டு மேல் நட வடிக்கை எடுக்கவும் வசதியா இருக்குமே?" என்றான் ரமணி.

"நீ உன்னுடைய நோக்கில் பார்க்கிறே. ஈட்டி முடியார் இன்னிக்கு சமாதி நிலை தியானத்திற்குப் போகிறார். இந்த வரை அவர் இன்றைக்கு நமக்கு தரிசனம் தர இசைந்ததே பெரிய காரியம்" என்றான் பொன்முடி.

"பொன்முடி... சாமியார் சமாதி நிலை தியானம் செய்யப் போகிறாரா? அதை




ஒன்றுசேருங்கள் – போட்டி முடிவு

இந்தப் போட்டி மிக எளிதாக இருந்திருக்கிறது என்பதை இதில் கலந்து கலந்து கொண்டிருப்பவர்களின் எண்ணிக்கையே காட்டுகிறது! அத்தனை பேரும் சரியான விடை! குலுக்கல் முறையிலேயே பரிசு முடிவானது.

ரூபாய் பத்து பரிசுபெறுவோர்:

1. சி.டி. ரங்கபாஷ்யம், ஸ்ரீரங்கம், 2. இ. பால்ராஜ், பத்மனேரி அஞ்சல் - 627 501. 3. என். புஷ்கரா, திருவரங்கம், 4. எஸ். சாலமன் விக்டர், பொன்னிநகர், காவேரி RS. 5. B. ராஜாத்தி, மயிலாடுதுறை, 6. இள. அறவாழி, புதுவை - 8, 7. கா. ஜெயபாரதி, காஞ்சிபுரம், 8. ஏ.கனித்துறை, காவல் கிணறு, 9. பி. கற்பகவல்லி, சென்னை - 90, 10. ஆர். விவேக் கிருஷ்ணன், வேலூர் – 7, 11. D. பத்மஜா, திருவண்ணாமலை - 1. 12. இ. பூங்குழலி, கூவத்தூர். 13. ஆர். அகஸ்டா, சாயேர்புரம், 14. ஜெ. குமரன், காட்டுச்சேரி, காரைக்கால், 15. ஆர். சரவணன், வேட்டைக்காரன் புதூர், 16. கே.தேன்மொழி, சூரக்கோட்டை அஞ்சல், 17. ஜெ. ராஜேஸ்வரி, காஞ்சிபுரம், 18. எஸ். சிவசங்கரி, மேலக்கரைப் பட்டி, 19. இ. அன்பழகன், புதுவை – 10, 20. பா. சங்கர ஈஸ்வரி, விருதுநகர்.

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள். கலந்து கொண்டு சிறப்பித்தவர்களுக்கு நன்றி!

சரியான விடை: தலை, தவலை,; சடை, சட்டை; குடை, குட்டை; கால், காவல்; கனி, கன்னி; நதி, நந்தி; அணை, அரணை; குவி, குருவி; மாடு, மாட்டு; கோல், கோவில்; கண், கவண், தளை, தவளை.

நாம் பார்க்க அனுமதி உண்டா?" என்று அடங்காத ஆவலுடன் கேட்டான் ரமணி.

"தாராளமாகப் பார்க்கலாம். நம்மைப் போல் எத்தனையோ பேர் அதைக் காண வருவார்கள். கூட்டத்துடன் கூட்டமாக நின்று நாமும் பார்க்கலாம். அப்போ படகுச் சவாரி வேண்டாமா?"

"படகுச் சவாரியை எப்போ வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளலாம். மறுபடி கிடைக்கும். இல்லே, இன்னொரு இடத்திலும் கிடைக்கலாம். ஆனால் ஈட்டி முடியார் தியான சமாதிக் காட்சி கிடைப்பது அரிதே?"

"அப்போ சூரியன் மலை வாயில்ல விழறப்போ நாம் அங்கே இருந்தால் நல்லது."

"இன்னும் கூட சீக்கிரமே போகலாம். அப்பத்தான் எல்லாரையும் பார்க்க முடியும்" என்று பரபரத்த ரமணி, "கேமெராவைக் கொண்டு போகலாமா?" என்று கேட்டான்.

"எதுக்கும் எடுத்துக்கோ. அனுமதித்தார்னா, புகைப்படம் எடுக்கலாம். இல்லே... எடுக்கக் கூடாதுன்னு மறுத்தாங்கன்னா திரும்பக் கொண்டு வந்து விடலாம்."

"தியான சமாதி இருக்கப் போவது சாமியாரின் ஆசிரமத்திலா இல்லே வெட்டவெளியிலா?"

"ஈட்டி முடியார் கோவிலுக்கு எதிரே உள்ள பரந்த வெளியில்தான் இது சாதாரணமாக நடக்கும். இந்தக் கோவில், அவர் உள்ள ஆசிரமம் எல்லாமே எங்க எஸ்டேட்டுக்குள்ளதான் இருக்கு," என்று கூறிய பொன்முடி, "ரமணி, ஒரு முக்கிய விஷயம்... அந்த இடம் இங்கிருந்து மூன்று மைல் தொலைவு இருக்கும். அடர்ந்த காட்டுப் பகுதி. ஒரு மீட்டர் வரைதான் வண்டிப்பாதை. அதற்கப்புறம் ஒற்றையடிப் பாதைதான். நடந்துதான் போக வேண்டும். என்ன சொல்றே?" என்று கேட்டான்.

"நான் தயார். ஆமாம், உங்கப்பா ஈட்டி முடியாரைப் பார்ப்பதானால் எப்படிப் போவார்?" என்று தன் சந்தேகத்தைக் கிளப்பினான் ரமணி.

"அப்பாவும் அந்த இரண்டு கிலோ மீட்டர் தொலைவுக்கு நடந்துதான் போவார். சில சமயம் சாமியாரே அப்பாவைக் காண தானே கிளம்பி வந்து விடுவார். அவரும் தனது சீடர்களுடன் முழுக்க முழுக்க நடந்துதான் வருவார்!"

"ஈட்டி முடியார் எத்தனை காலமாக இங்கே இருக்கிறார்? நம்மிடம் பேசுவாரா? இல்லே பெரிய பந்தாவா?"

"எனக்குத் தெரிந்து பத்து ஆண்டுகளுக் கும் மேல் அவர் எங்கள் எஸ்டேட்டில் தான் இருக்கிறார். எஸ்டேட்டில் புலி பயந்த கரடு என்று ஒரு இடம் இருக்கிறது. அது நீட்டிக் கொண்டிருக்கும் மலை முகட்டுப் பகுதி. அதற்குக் கீழே கிடுகிடு

பாதாளம். அங்கே வெட்ட வெளியில் சூலத்தாண்டவர் கோயில் இருக்கிறது. அங்கே இருபத்தேழு இரும்பு சூலங்கள் பூமியில் நடப்பட்டு இருக்கும். அபிஷேகம், பூஜை எல்லாம் அந்த சூலங்களுக்குத்தான். சூலத்தாண்டவர் இங்கே அக்கம் பக்கத்தில் உள்ள மலை வாழ் மக்கள் அனைவருக்கும் சூல தெய்வம்; கண்கண்ட சக்தி மிக்க தெய்வம். அந்த இடம் மட்டும் பொது. இருந்தாலும் எங்கள் குடும்பத்தாரின் நன்கொடையாக காலங்காலமாக எங்கள் குடும்பப் பராமரிப்பில்தான் கோயில் இருந்து வருகிறது."

"சூலத்தாண்டவருக்கும், ஈட்டி முடியாருக்கும் என்ன தொடர்பு?"

"கோவிலை இப்பொழுது கவனித்துக் கொள்பவர் ஈட்டி முடியாரும் அவரது சீடர்களும்தான். சூலத்தாண்டவர் ஈட்டி முடியார் மேல் வந்து அருள்வாக்குக் கூறுகிறார் என்று மக்கள் உறுதியாக நம்புகிறார்கள். இந்த ஏலகிரி வட்டார மக்கள் மட்டுமல்ல, நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் மக்கள் அவரைத் தரிசிக்கவும் தங்கள் பிரச்னைகளுக்கு அருள்வாக்கைப் பெறவும் வந்து குவிகிறார்கள். அதிலும் அவர் தியான சமாதியில் இருந்து வெளி வந்ததும், அவரைத் தரிசிக்கவும் அருள்வாக்குக் கேட்கவும் கூட்டம் அலை மோதும். இத்தனைக்கும் சரியான போக்குவரத்து வசதி கூட இல்லாத இடத்தில் மிக எளிமையாக சாமியார் வாழ்கிறார்" என்றான் பொன்முடி.

சரியாக ஐந்தாவது மணிக்கு பொன்முடியும் ரமணியும் சூலத்தாண்டவர் ஆலயம் அமைந்திருந்த புலி பயந்த கரடுப் பகுதியில் இருந்தார்கள். மக்கள் கூட்டம் நெரிசல் தாங்கவில்லை. பொன்முடியின் தந்தையும் இருந்தார். பரந்த வெளியில் பூமியில் மிகப் பெரிய குழியை வெட்டியிருந்தார்கள்.

ரமணியைக் கண்டதும் மிகவும் மகிழ்ச்சியுடன் வரவேற்ற பொன்முடியின் தந்தையார், "நீ வந்தது பற்றி மகிழ்ச்சி தம்பி. இங்கு நீதான் படித்த வெளியூர் ஆள். அதனால் குழியை சோதித்துப் பார்க்கும் அரிய வாய்ப்பு உனக்குத்தான். காலணியைக் கழற்றி விட்டு, குழிக்குள் இறங்கி, பரிசோதித்துப் பார்" என்றார்.

ரமணி, காலணியைக் கழற்றிவிட்டு, கை கால் சுத்தம் செய்து கொண்டு குழிக்குள் குதித்தான். பொன்முடி தந்த இன்ச் நாடாவைக் கொண்டு குழியை அளந்தான். சரியாக ஆறடி ஆழம். ஆறு அடி நீளம். நான்கடி அகலம் இருந்தது குழி. அவன் அளந்து கூறியதும், பொன்முடியின் தந்தை "சாமி கேட்ட அதே அளவு குழிதான்" என்று கூறிக் கொண்டு நிம்மதியடைந்தார்.

திடீரென்று கூட்டத்தில் பரபரப்பு. எல்லோரும் வழிவிட்டனர். காவி வேட்டியும், காவித் துண்டும் அணிந்த ஈட்டி முடி சாமியார் அங்கே வந்து நின்றார். பக்தர்கள் பணிந்தனர். ஈட்டி போன்ற அவர் முடியையும் கண்களையும் கண்ட போது ரமணி அச்சமடைந்தான். எல்லோரையும் தன் ஊடுருவும் கண்களால் பார்த்த ஈட்டி முடியார் மெல்லக் குழிக்குள் இறங்கிப் படுத்துக் கொண்டார். மிக நீளமான பலகைகளைக் கொண்டு வந்து குழியை மூடினார்கள். பலகையின் மேல் ஒரு அடி உயரத்திற்கு மணலைக் கொட்டினார்கள். பொன்முடியும் ரமணியும் கூட மணலைத் தள்ளி கெட்டித்தார்கள். சிலர் உடுக்கையடித்தார்கள். ஒரு பெண் சாமியாடினாள்!

பொன்முடியின் நெஞ்சம் படபடவென அடித்துக் கொண்டது. சாமியார் உயிரோடு திரும்பி வருவாரா என்ற கவலை அவனை ஆட்கொண்டது.

(மன்னிக்கவும்! முடிக்க முடியவில்லை. அடுத்த இதழில் கண்டிப்பாக முடிந்து விடும்.)

"நேற்று எங்க வீட்டு டி.வியில் ஒளியும் ஒலியும் பார்த்துக்கிட்டிருந்த போது டி.வி. பெட்டிக்குள்ளே எலி புகுந்திடுச்சு!"

"அப்புறம்?"

" 'ஒளியும் எலியும்' பார்த்தோம்!"

— பி. காந்திமதிநாதன்



கேட்கட்டுமா டாக்டர்?

● ஜி.ஜி. கிருஷ்ணன், விசலூர் –1,

? வயதில் முதியவர்களுக்கு மட்டும்தான் மாரடைப்பு நோய் ஏற்படுமா? இல்லை, இளவயதினருக்கும் இந்நோய் ஏற்பட வாய்ப்பு உண்டா, டாக்டர்?

! உடற்பருமன், சர்க்கரைநோய், ரத்தத்தில் மிகைக் கொழுப்பு போன்றவை இருந்தால், இளவயதினருக்கும் மாரடைப்பு ஏற்பட அதிக வாய்ப்புண்டு.

● வி.தயாநிதி, சென்னை - 82.

? போலியோ நோய் என்பது நரம்புகளைத் தாக்குமா? இல்லை, எலும்புகளைத் தாக்குமா?

! போலியோ நோய் நரம்புகளையும் அதைச் சார்ந்த தசைகளையும் தாக்கக் கூடியது; எலும்புகளை அல்ல!



● கா. சாந்தி, மன்னார்குடி.

? 'மெட்ராஸ் ஐ' என்ற கண் வலி வந்தால் கண் சுத்தமாகி விடும் என்று சொல்கிறார்களே, உண்மைதானா... டாக்டர்?

! உண்மையில்லை, சாந்தி! இது ஒரு மூட நம்பிக்கை!

● கமால்பாட்ஷா, கல்தான்பேட்டை.

? புகைபிடிப்பவரின் அருகில் இருந்தால்கூட 'கேன்சர்' வருமா? ஜலதோசம் பிடிக்குமா?

! புகை பிடிப்பவரின் அருகிலேயே அடிக்கடி இருக்கின்றவர்களுக்கு புற்று நோய் வர வாய்ப்புள்ளது; 'புகை'க்கு ஒவ் வாமை குணம் உள்ளவர்களுக்கு (ஒத்துக் கொள்ளாதவர்களுக்கு) ஜலதோசமும் பிடிக்கலாம்.

● ச. துரைராஜ், பி.மேட்டுப்பாளையம்.

? எனக்கு வயிற்றில் குடல்புழுக்கள் உள்ளன. மெலிந்து காணப்படுகிறேன். இதைப் போக்க என்ன வழி? (எனக்கு வயது 15.)

! தம்பி துரைராஜ்! முதலில் உனக்கு உள்ள குடல்புழுக்கள் எந்த வகையைச் சார்ந்தவை என்பதை மலப்பரிசோதனை மூலம் தெரிந்து கொள். பின்பு மருத்துவரின் ஆலோசனையின் பேரில் குடல் புழுக்களை ஒழிக்க உதவும் மாத்திரைகளைச் சாப்பிட வேண்டும். ஒரு முறை மட்டும் சாப்பிட்டால் போதாது. மூன்று மாதங்களுக்கு ஒருமுறை மொத்தம் மூன்று முறை சாப்பிட வேண்டும். அத்துடன் சில சுகாதார முறைகளையும் கடைப்பிடிக்க வேண்டியது அவசியம். கை,கால்களை வெகு சுத்தமாக வைத்துக் கொள்வது, தெரு வோரங்களைக் கழிப்பிடமாகப் பயன்படுத்துவதைத் தவிர்ப்பது, செருப்பின்றி வெறுங் காலோடு நடப்பதைத் தவிர்ப்பது, காய் கறிகளையும், பழங்களையும் சுத்தப் படுத்திய பிறகே உபயோகிப்பது, குடிநீரைக் காய்ச்சி ஆர வைத்துக் குடிப்பது போன்றவை சில முக்கியமான குடற்புழுத் தடுப்பு முறைகள். பால், பருப்பு, ஈரல், இறைச்சி போன்ற புரதச் சத்து நிறைந்த உணவுகளைச் சாப்பிட்டால் உன் உடல் மெலிவு நீங்கும்.





● செ.ரதி, மதுரை - 10.

? நமக்கு சர்க்கரை நோய் உள்ளதா என்பதை எப்படி டாக்டர் கண்டு பிடிப்பது?

! சிறுநீரில் சர்க்கரைப் பரிசோதனை, ரத்தத்தில் சர்க்கரைப் பரிசோ தனை இந்த இரண்டையும் மருத்துவர் மேற்பார்வையில் பரிசோதித்துப் பார்த்தால் ஒருவருக்கு சர்க்கரை நோய் உள்ளதா என்பது தெரிந்து விடும். இயல்பாக உள்ளவருக்கு சிறுநீரில் சர்க்கரை இருக்



ஈயப்பாத்திர சமையல் நல்லதா?



காது; சர்க்கரை நோய் உள்ளவருக்கு சிறுநீரில் சர்க்கரை இருக்கும். மேலும் ரத்தத்தில் ஒருவருடைய இயல்பான சர்க்கரை அளவு 80–120 மி.கிராம் சதவீதம். சர்க்கரை நோயாளிகளுக்கு இந்த அளவு மிக அதிகமாக இருக்கும்.



● த. பரதன், மன்னார்குடி.

? மனிதர்கள் காற்றுக்குப் பதிலாக 'ஆக்ஸிஜன்' வாயுவை மட்டுமே சுவாசிக்கும் நிலைமை ஏற்பட்டால் என்ன ஆகும்?

! ஒன்றும் ஆகாது. நமக்குத் தேவை ஆக்ஸிஜன்தானே! அது மட்டும் சுத்தமாகக் கிடைத்துக் கொண்டிருந்தால் போதும், நாம் உயிர் வாழ முடியும்!



● கே. உமா, சென்னை - 23.

? சிலர் வீடுகளில் ஈயப்பாத்திரத்தில் சமையல் செய்கிறார்களே, இது உடலுக்கு நல்லதா அல்லது கெடுதலா?

! 'கெடுதல்தான்' என்று அண்மையில் எச்சரித்துள்ளது தேசிய சத்துணவுக் கழகம். ஈயப்பாத்திரத்தில் சமைத்துச் சாப்பிடும்போது அலுமினியம் சிறிது சிறிதாக நம் உடம்பில் சேருகிறது. வயது ஏற ஏற உடம்பில் சேரும் அலுமினியத்தின் அளவும் அதிகரிக்கிறது. இதன் விளைவால் வயதான காலத்தில் பல பாதிப்புகள் வருகின்றன. முக்கியமாக எலும்பு தொடர்பான நோய்கள், மறதி நோய், வலிப்பு நோய், மூளைக் கோளாறுகள் போன்றவை வரக்கூடும்.

● சுதாகர், புதுதில்லி.

? என் அம்மாவுக்கு ஆஸ்துமா உள்ளது. முட்டையும் கோழிக் கறியும் சேராது. மாட்டுக்கறி கொடுக்கலாமா? இந்த நோய்க்கு ஆங்கில வைத்திய முறை என்ன? சித்த வைத்திய முறை என்ன? என்பதைத் தெரியப்படுத்துங்கள் டாக்டர்!

! தம்பி சுதாகர்! முதலில் ஆஸ்துமா என்றால் என்ன என்பதைத் தெரிந்து கொள். உணவு, தூசு, புகை, பூ, தொழிற்சாலைக் கழிவுகள் இப்படி ஏதாவது ஒன்று ஒவ்வாமையை உண்டாக்குவதால் வருவது, ஆஸ்துமா நோய்.




உன் அம்மாவுக்கு அநேகமாக உணவு ஒவ்வாமைதான் இருக்க வேண்டும். அப்படி இருக்கும்போது உன் அம்மாவுக்கு மாட்டுக்கறி கொடுக்கக் கூடாது. மேலும்- சில பரிசோதனைகள் மூலம் உன் அம்மாவுக்கு எந்தப் பொருளுக்கு ஒவ்வாமை உள்ளது என்பதைத் தெரிந்து கொண்டு, அவற்றை ஒதுக்கினாலே ஆஸ்துமா அவ்வளவாகத் தலைகாட்டாது. அப்படியும் ஆஸ்துமா வருகிறதென்றால் மருத்துவரின் பரிந்துரைப்படி மூச்சுக் குழாய் தளர்த்தும் சில மாத்திரை, மருந்து, ஊசி இவற்றில் ஒன்றைத் தேவைப்படி உபயோகித்து வந்தால் ஆஸ்துமா பாதிப்பு குறையும். இது நான் படித்த- என் நோயாளிகளுக்குப் பயன்படுத்துகிற- ஆங்கில மருத்துவரின் சிகிச்சை முறை. நான் சித்த மருத்துவம் படிக்கவில்லை என்பதால் அதைப் பற்றி இங்கு கூற இயலவில்லை.

டாக்டர் கு. கணேசன்

எந்த ஆமையின் ஓட்டில் அதிகச் சுழிகள்; குறைவான சுழிகள்?

விடை : அதிகம் - 5வது ஆமை 19; குறைவு - 3வது ஆமை 8.



பரதன் அச்சகத்தில் பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக ஆசிரியர் பொறுப்பேற்று, அச்சிட்டு வெளியிடுபவர் : கி. ராஜேந்திரன்.

முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்குலேஷன் மானேஜர் : 2345623; சந்தா, விளம்பரம் : 2345622; பிரதம நிர்வாக அதிகாரி : 2345621.

ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 60/-; வெளிநாடு - விமானத் தபால் ரூ. 400/-.

ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 30/-; வெளிநாடு - விமானத் தபால் : ரூ. 200/-.

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / MS (S) 281 * Licensed to post without prepayment under PMG's Licence No. TN / MS / (S) 14 * Registered as a Newspaper in Srilanka